
KALKI
24.3.85
ரூ 1-50

கல்கி





அதிக சுவையானது
அதிக முழுமையானது



**நீங்கள் பாசத்துடன்
ஊட்டும் ஒவ்வொரு கவளமும்
உங்கள் பாப்பாவின்
வளர்ச்சிக்குச் சிறந்ததாகும்.**

பால் அடங்கிய ஃபாரெக்ஸ் திட உணவு. இதைக் கலப்பது எளிது. பாப்பாவுக்கு ஊட்டுவதும் எளிது.

பாப்பாவின் வளர்ச்சிக்கு இன்றியமையாத புரதம் நிரம்பியது. மிக ஆரோக்கியமான இரத்தத்திற்குக் கூடுதல் இரும்புச்சத்து கொண்டது. உறுதியான பற்களையும் எலும்புகளையும் பெற சரியான விகிதத்தில் கால்ஷியமும் ஃபாஸ்ஃபரஸும் அடங்கியது. பாப்பாவின் மென்மையான ஜீரண சக்திக்கென முன்கூட்டிப் பக்குவம் செய்தது.

பால் அடங்கிய ஃபாரெக்ஸ் திட உணவு. அதிக முழுமையான திட உணவு.

உடல் நலத்தின் உறைவிடம்—**க்ளாக்ஸோ**

இலவசம்! குழந்தையின் முதலாண்டுப் புத்தகம்: உங்களது பிரதியைப்பெற தபால் மற்றும் இதர செலவிற்கு ரூ. 1/— தபால்தலை உள் வைத்து எழுதுவீர் இம்முகவரிக்கு—தபால் பெட்டி எண் 19119, (FCM-21) பம்பாய் 400 025.

CLARION/B/GX/4/203 TAM

கோர்ப்பசேவ்



வெடித்த சமாதானக் குண்டு

இதுநாள்வரை ருஷ்ய அதிபர்களாகப் பொறுப்பேற்றவர்கள் அக்டோபர் புரட்சி பார்த்த தலைமுறையைச் சேர்ந்தவர்கள். இப்போதுதான் முதல்முறையாக அதற்கடுத்த தலைமுறையைச் சேர்ந்த ஒருவர் பதவி ஏற்றுள்ளார். கோர்ப்பசேவ் 54 வயதானவர். ருஷ்யக் கணக்குப்படி இது முதுமையல்ல. நடுத்தர வயதே. ஆண்ட்ரபோவுக்குப் பிறகு பதவிக்கு வந்திருக்க வேண்டியவர் இவரே. இவரைத்தான் ஆண்ட்ரபோவ் தமக்குப்பின் பதவி ஏற்கத் தயார்ப்படுத்தி வந்தார். ஆனால் மிகவும் குறைந்த வயது என்பதால் (53) அப்போது இவருக்குப் பதில் செர்னன்கோ பதவிக்கு வந்தார்.

உடல் உழைப்புக்கு எப்போதும் முக்கியத்துவம் தரப்படும் ருஷ்யாவில் வேளாண்மைக் குடும்பத்தில் பிறந்து, பதினைந்து வயதிலேயே மெஷின் ஆபரேட்டராக வேலைக்கு அமர்ந்தவர் கோர்ப்பச்சேவ். மாஸ்கோ பல்கலைக்கழகம் ஸ்டோவரோபோல் வேளாண்மைப் பயிற்சி நிலையம் ஆகியவற்றில் படித்துப் பட்டம் பெற்றவர். விருதுகள் பல பெற்றுப் படிப்படியாக முன்னேறி, இந்த உயர்நிலைக்கு வந்தவர்.

சமீபத்தில் பிரிட்டனுக்குப் பயணம் சென்றபோது ஒரு வித்தியாசமான சோவியத் தலைவர் என்று பலவிதங்களிலும் நிரூபித்துப் பிரபலமானார் கோர்ப்பச்சேவ். தம்து மனைவியையும் உடன் அழைத்துப் போனதே பல ருஷ்யப் புருவங்களை நெரியச் செய்தது. போதாக் குறைக்கு ரெய்ஸா மாக்ஸிமோவ்னா உடை அலங்கார விஷயத்தில் அதிக சிரத்தை எடுத்துக் கொண்டு அனைவரையும் ஆச்சர்யத்தில் ஆழ்த்தினார். ருஷ்ய நோக்கில் இவையெல்லாம் துணிகரமான சம்பிரதாய மீறல்கள்! மார்கரெட் தாட்சரையே மனம்விட்டு, வாய் திறந்துப் பாராட்டும்படி செய்துவிட்டது ரெய்ஸாவின் உடை அலங்காரம்!

இதுபோன்ற சிறிய விஷயங்களில் மட்டுமின்றி மிகப் பெரிய அம்சங்களிலும் கூட தாம் மற்ற சோவியத் தலைவர்களிலிருந்து வித்தியாசமானவர் என்பதைப் பதவி ஏற்றபின் தந்த முதல் சொற்பொழிவிலேயே நிரூபித்திருக்கிறார் கோர்ப்பச்சேவ். அணு ஆயுதங்கள் ஒழிப்பது பற்றி அவர் கூறியது உலகை நிமிர்ந்து நோக்கச் செய்துள்ளது.

''அமெரிக்காவை விடவும் நேட்டோ நேச நாடுகளை விடவும் அதிகமான ராணுவ பலம் பெற்றிருக்க வேண்டும் என்று ருஷ்யா நினைக்கவில்லை. அணு ஆயுதக் கிடங்குகள், தொழிலகங்களை இனி விருத்தி செய்யாமல் இப்போதுள்ள நிலையிலேயே தேக்கி வைக்க ருஷ்யா சம்மதிக்கிறது'' என்ற சொற்கள் கோர்ப்பச்சேவின் பிரசங்கத்தில் மிக முக்கியமான பகுதியாகும். இதன் மூலம் அமெரிக்காவும் இதற்கு உடன்படுகிறதா, இல்லையா என்று பார்த்துக் கொண்டிராமல், காத்திராமல் தம்மளவில் துணிந்து ஒரு முடிவெடுத்து அறிவித்திருக்கிறார் கோர்ப்பச்சேவ். அவர் மேலும் கூறுகிறார்:

''விண்வெளியிலாகட்டும், நிலவுலகிலாகட்டும் ஆயுதக் குவிப்புக் குறைய வேண்டும் என்றே நாம் விரும்புகிறோம். புதிய நூதன ஆயுதங்கள் உருவாவதை விரும்பவில்லை. நமது இறுதி லட்சியம் உலகில் எந்த மூலை முடுக்கிலும் அணு ஆயுதங்களே இருக்கக் கூடாது என்பதுதான்.''

இவ்வாறு கூறியுள்ள கோர்ப்பச்சேவ், உடனடியாக நமது மதிப்பில் மிக உயர்ந்துவிட்டதுடன் உலகின் நன்றிக்கும் பாத்திரராகிவிட்டார். திரு. கோர்ப்பச்சேவின் இந்த நல்லெண்ணத்தை ஏற்று, பிரதிபலித்து உலக மக்களிடம் அச்சமின்மையையும் மன அமைதியையும் நிலவச் செய்ய வேண்டியது அமெரிக்காவின் தலையாய கடமையாகிறது. கோர்ப்பச்சேவ் வெடித்த சமாதானக் குண்டு கதிரியக்கத்துக்குப் பதில் களிப்பு இயக்கத்தைப் பரப்பட்டும்.

– ஜெயஸ்பால்

சந்திப்பு: ஸ்ரீமதி ஸ்ரீகாந்த்

பெசன்ட் நகர் அஷ்டலக்ஷ்மி கோவிலுக்கருகில் இருக்கிற கிரிக்கெட் வீரர் கிருஷ்ணமாச்சாரி ஸ்ரீகாந்த் வீட்டுக்குப் போனேன். வீட்டின் பெயர் கல்பதரு.

(விசாலமான டிராயிங் ஹால். ஸ்ரீகாந்தின் கலர் போட்டோக்கள், அவர் வாங்கிய கோப்பைகள் நிறைய இருந்தன.)

திருமதி வித்யா ஸ்ரீகாந்தைச் சந்தித்தேன். வாழ்த்துக்கள் சொன்னேன். 'கல்கி' சார்பாக. வித்யாவுடன் ஸ்ரீகாந்தின் அம்மா, சகோதரி கலா, கலாவின் கணவர் பரத்குமார் எல்லாரும் இருந்தனர். முதலில் வித்யா பேசத்தயங்கினார். முன்பு ஒருதடவை ஒரு பத்திரிகையாளர் பேட்டி என்று வந்து, இவர் சொல்லாததையெல்லாம் எழுதிவிட்டாராம். இப்போது அதுமாதிரியெல்லாம் நடக்காது என்று உறுதியாய்ச் சொன்னதும், எல்லாரும் கலகலப்பாகப் பேசினார்கள்.

ஸ்ரீகாந்த், சண்டிகாரில் ஒரு நாள் மாட்ச் ஆடிக் கொண்டிருந்த சமயம், வித்யா டில்லியில் அப்பா வீட்டில் இருந்தாராம். பத்திரிகைகளில், ஆஸ்திரேலியா போகிறவர்கள் லிஸ்ட் வெளிவரும் முன்பே ஸ்ரீகாந்த் டெல்லிக்குப் போன் பண்ணி, விஷயத்தைச் சொல்லிவிட்டாராம் தன் திருமதிக்கு. ஒரு நாள் மாட்சுகளில், பொதுவாக, ஸ்ரீகாந்த்தின் பர்ஃபாமன்ஸ் சிறப்பாக இருக்கவே, அவர் நிச்சயம் டீமில் இருப்பார் என்று எதிர்பார்த்தாராம் வித்யா. சென்னையிலிருந்து பிப்ரவரி 10-ம் தேதி பம்பாய் புறப்பட்டு, அங்கிருந்து, ஆஸ்திரேலியா சென்றாராம் ஸ்ரீகாந்த்.

முதல் மாட்சின் போது, மிகச் சிறப்பாய் ஆடுவார் என எதிர்பார்த்தேன். ஆனால் 12 ரன்களே எடுத்து, இம்ரான் பந்தில், மொஹ்ஸின் காட்ச் பிடிக்க, அவுட் ஆகி எங்களை ஏமாற்றி விட்டார். எனக்கு ரொம்ப ஏமாற்றம். எல்லாரும் என்னைத் துக்கம் விசாரிக்க ஆரம்பித்து விட்டார்கள். அவர் மாட்ச் முடிந்ததும், ஆஸ்திரேலியாவிலிருந்து போன் பண்ணினார். 'கவலைப்பட வேண்டாம்; அடுத்த மாட்ச்சில் சேர்த்து அடிப்பீர்கள்' என்று ஆறுதல் சொன்னேன். அதற்கேற்றாற் போலவே, இங்கிலாந்துக்கெதிரான இரண்டாவது மாட்ச்சில், 57 ரன்கள் எடுத்து, மேன் ஆஃப் தி மாட்ச் ஆகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இங்கிலாந்தின் பக்கம் 5 விக்கெட்டுகள் விழுந்தவுடனேயே மேன் ஆஃப் தி மாட்ச் இவர்தான் என்று யூகித்து விட்டேன். அப்படியே தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் சந்தோஷத்தில் திக்கு முக்காடிப் போய்விட்டேன்'' என்றார் வித்யா.

''ஆனால் இரண்டாவது மாட்ச் முடிந்தவுடன், ஸ்ரீகாந்த் போன் பண்ணினார். அப்போது பார்த்து வித்யா வெளியில் போயிருந்தார். வீடு திரும்பியதும், போன் வந்த போது, தான் இல்லாதது குறித்து ரொம்ப வருத்தப்பட்டு, இங்கிருந்து, ஆஸ்திரேலியாவுக்குப் போன் பண்ணினார்'' என்றார் கலா.

வித்யா தொடர்ந்தார்:

''ஆஸ்திரேலியாவுடன் ஆடின 3-வது மாட்சின் போது ஒரே திரில். அவர் 93 ரன் எடுத்தபோது ரொம்ப சந்தோஷப்பட்டேன். ஒவ்வொரு தடவையும் அவர் பந்தை அடிக்கும்போதும், எங்கே அவுட் ஆகிவிடுவாரோ என்கிற டென்ஷனும் கூடவே இருந்தது. மாட்ச்சில், இவரைவிடக் குறைந்த ரன் எடுத்திருந்தாலும், ரவி சாஸ்திரிக்கு மேன் ஆஃப் தி மேட்ச் கிடைத்தது ரொம்ப கரெக்ட். மூன்றாவது மாட்ச் முடிந்ததும் போன் பண்ணிப் பேசினார் அவர். செண்டிமெண்டலாக், அவர், மாட்ச்சுக்கு முந்தைய

ஸ்ரீமதி வித்யா ஸ்ரீகாந்த்.



ஸ்ரீகாந்த்



அடுத்த வாரம்:

பல பெண்களை மோசடிசெய்து கல்யாணம் செய்துகொண்ட ராகவன் பற்றி தமிழகத்தில் இன்று அறியாதார் இல்லை. ஆனால் இந்த ராகவனின் ''திருவிளையாடல்''களை எப்படிக் கண்டுபிடித்து அம்பலப்படுத்தினார் மாமனார் பத்மநாபன்? துப்பறியும் நாவலை விட விறுவிறுப்பான தகவல்களைப் படியுங்கள்!

போனஸ்: ராகவனால் பாதிக்கப்பட்ட பெண்களுக்காகப் போராடும் [redacted] மாதர் சங்கம் பற்றிய விவரங்கள்.

மருமகனைத் துப்பறிந்த மாமனார்

இதிகாச ராகவன் ஏகபத்தினி விரதன் இந்த ராகவனோ?...

நான் எனக்குப் போன் பண்ணுவதை நான் விரும்புவதில்லை. ஆனால் அவர் 4-வது மாட்ச்சின் முந்தின நாள் போன் பண்ணினார். நான் வாழ்த்துச் சொன்னாலும், கொஞ்சம் உள்ளூர நர்வஸாக இருந்தேன். பயந்தது போலவே, 9 ரன்னிலேயே அவுட் ஆகிவிட்டார்.

''இறுதி ஆட்டத்தின் ஆரம்பத்தில் ஒரே சஸ்பென்ஸ். இந்தியா பேட்டிங்கின்போது, ரவியும், அவரும் ஆரம்பத்தில், கொஞ்சம் மெதுவாக ரன்கள் எடுத்துக் கொண்டிருந்த போது எனக்குள் ஒரே டென்ஷன். நேரம் ஆக ஆக மேன் ஆஃப் தி மாட்ச் இவருக்குத் தான் என யூகித்துவிட்டேன். பரிசு வழங்கிய போது, ஸ்ரீகாந்த் ஏதோ பேசினார். ஆனால் அவர் என்ன பேசுகிறார் என்பதைக் கேட்கிற மூடில் நான் இல்லை. அன்றைக்கு, கிரௌண்டிலிருந்து ஹோட்டலுக்குப் போன உடனே, எனக்குப் போன் பண்ணினார். வீட்டில் அத்தனை பேரும் ஒவ்வொருவராய் கங்கிராட்ஸ் சொன்னோம். பிறகு, பரிசளிப்பை, செய்திச் சுருக்கம், தமிழ் நியூஸ், டெல்லி நியூஸ், ஹை லைட்ஸ் என அத்தனை தடவையும் பார்த்தோம்! மாட்ச் முடிந்ததுதான் தாமதம்! அடுத்த சில மணி நேரங்களுக்கு எங்கள் வீட்டுப் போன் ஓய வில்லை. ஒரு நூறு பேராவது போன் பண்ணியிருப்பார்கள். டெலிகிராம்கள் வேறு! அவரது வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்,'' என்று முடித்தார் திருமதி வித்யா ஸ்ரீகாந்த்.

அவருடன் பேசிக் கொண்டிருந்த போது கிடைத்த இன்னும் சில தகவல்கள்.

* ஸ்ரீகாந்த் ரொம்பக் கடவுள் பக்தி உடையவர்; குருவாயூரப்பன் பக்தர்; வெளியூர் போகும் போதெல்லாம், கூடவே குருவாயூரப்பன் படத்தை எடுத்துக் கொண்டு போவார்.

* தன வருமானத்தில் ஒரு சதவீதத்தைக் குருவாயூரப்பனுக்குக் காணிக்கையாய்ச் செலுத்துவார். இன்னொரு சதவீதத்தை அம்மாவிடம் கொடுத்து விடுவார். அந்தப் பணம் முதியோர் இல்லம் போன்ற நிறுவனங்களுக்கு நன்கொடையாய்ப் போய் விடும்.

* 'சென்ட்டிமெண்ட்டலாக, ஸ்ரீகாந்த் பாட்டிங்கைத் தொடங்கும் முன்னால், சூரியனைப் பார்க்கிற பழக்கம் உடையவர்.

* ஸ்ரீகாந்த்தின் அம்மா, ஸ்ரீகாந்த் ஆடுகிற போது, ரொம்ப நர்வஸ் ஆகிவிடுகிற டைப். அதனால், ஸ்ரீகாந்த் ஆட ஆரம்பித்ததும், டீ.வி.யிடமிருந்து, எழுந்துபோய், வேறு ஏதாவது வேலை செய்யப் போய் விடுவார்.

* ஸ்ரீகாந்த்தின் ஆட்டம் முழுவதையும் வீட்டில் வீடியோவில் பதிவு செய்து வைத்திருக்கிறார்கள். ஸ்ரீகாந்த்தின் அம்மா, வீடியோப் பதிவைத்தான் பார்த்து ரசிப்பார்.

* மிஸ். வித்யாவுக்கு 83 மார்ச் 27-ம் தேதி 12-வது வகுப்புப் பரீட்சைகள் முடிந்தன. மார்ச் 30-ம் தேதி அவர் திருமதி ஸ்ரீகாந்த் ஆனார். இப்போது ஒரு வயதில் ஒரு ஆண் குழந்தை! ஆதித்யா. டீ.வி.யில், ஸ்ரீகாந்த்தின் முகம் க்ளோஸ்-அப்பில் காட்டப்படும் போது, 'அப்பா பார்... அப்பா, பார்...' என்றால், டீ. வி. யைப் பார்த்துச் சிரிக்குமாம்!

எஸ். சந்திரமௌலி

புகைப்படங்கள்: **யோகா**

உலக கிரிக்கெட் சாம்பியன்ஷிப்

கிரிக்கெட் உலக சாம்பியன்ஷிப் போட்டி பற்றிய சில ரசமான தகவல்களின் தொகுப்பு:

* விக்டோரியா மாநிலத்தின் 150-வது ஆண்டு விழாவை, எப்படி பிரமாதமாய்க் கொண்டாடுவது என்று விக்டோரியா கிரிக்கெட் கிளப் திட்டமிட ஆரம்பித்தது. கடைசியில் இந்தக் கிளப்பின் தலைவர் ரே ஸ்டீலே உலகத்தின் முழுகவனத்தையும் ஆஸ்திரேலியா பக்கம் இழுக்கும் வகையில் உலக சாம்பியன்ஷிப் கிரிக்கெட் போட்டி நடத்தத் தீர்மானித்தார்.

* இதற்கு ஆஸ்திரேலியா கிரிக்கெட் போர்டும், மெல்போர்ன் கிரிக்கெட் கிளப்பும் பெருமளவில் ஆதரவு தந்தன.

* இதில் ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, நியூஜிலாந்து, வெஸ்ட் இண்டீஸ், இந்தியா, பாகிஸ்தான், ஸ்ரீலங்கா ஆகிய 7 நாடுகள் கலந்து கொண்டன.

* போட்டியை 'ஸ்பான்ஸர்' செய்த 'பென்ஸன் அண்ட் ஹெட்ஜஸ்' நிறுவனம் ஆஸ்திரேலியாவின் மிகப் பிரபலமான மது, சிகரெட் உற்பத்தி நிறுவனம்.

* கிரிக்கெட் கிரவுண்டில் சுமார் 4 மில்லியன் ஆஸ்திரேலியன் டாலர் செலவில் 'ஃப்ளட் லைட்'டுகள் போடப்பட்டன. சுமார் 72 மீட்டர் உயரக் கம்பங்களில், மொத்தம் 844 இரண்டாயிரம் வாட் பல்புகள் போடப்பட்டன. ஒவ்வொரு கம்பமும் 120 டன் இரும்பும், 200 ச. அடி கான்கிரீட்டும் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்டது.

* பென்ஸன் அண்ட் ஹெட்ஜஸ் நிறுவனம், இந்தப் போட்டியில், பரிசாய்த் தருகிற பணம் மட்டும் மொத்தம் ஒரு லட்சத்து முப்பத்தையாயிரம் ஆஸ்திரேலிய டாலர்கள்.

* முதல் ரவுண்டில் ஜெயிக்கிற டீமுக்கு 3000 டாலர். தோற்கிற டீமுக்கு 1500 டாலர்.

* இந்த சாம்பியன்ஷிப் போட்டியில் ஜெயித்ததன் மூலம், இந்தியாவுக்குக் கிடைத்துள்ளது சுமார் 52,000 ஆஸ்திரேலிய டாலர்கள். அதாவது சுமார் ஐந்து லட்சத்து இருபதாயிரம் ரூபாய். (ஆஸ்திரேலிய டாலர் = ரூ. 9.50) இதை மானேஜர் உட்பட அத்தனை ஆட்டக்காரர்களும் பங்குபோட்டுக் கொள்வார்கள்.

* இறுதி ஆட்டத்தில் "மேன்" ஆஃப் தி மாட்ச் ஸ்ரீகாந்துக்குக் கிடைத்த பரிசு 2000 ஆஸ்திரேலிய டாலர். ஆனால் ஒரு விஷயம். மேன் ஆஃப் தி மாட்ச், சாம்பியன் ஆஃப் சாம்பியன் பரிசெல்லாம், தனி நபர்களுக்குக் கொடுக்கப்பட்டாலும், பரிசுப் பணம் மொத்த ஆட்டக்காரர்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படுகிறது. பரிசாய் அளிக்கப்படும் பொருட்களை மட்டுமே ஆட்டக்காரர்கள் தாங்களே வைத்துக் கொள்ளலாம்.

* பரிசுப் பணம் தவிர, ஜெயித்ததற்காக பென்ஸன் அண்ட் ஹெட்ஜஸ் கோப்பையும், இந்திய அணிக்குத் தரப்பட்டது! இந்தக் 'கப்'பின் உயரம் 14 அங்குலம். மதிப்பு ரூ. 8000. பீட்டர் கார்பென்டர் என்கிற சிட்னிநகர வாசியால் டிசைன் செய்யப்பட்டது. மரத்தாலான அடிப் பகுதியில், தங்கக்கோப்பைப் பொருத்தப்பட்டு, அதிலே பங்கேற்ற ஏழு நாடுகளின் பெயர்களும், பென்ஸன் அண்ட் ஹெட்ஜஸ் கோப்பை '85 என்றும் பொறிக்கப்பட்டிருக்கும்.

* சாம்பியன் ஆஃப் சாம்பியன் பட்டத்துக்குப் பரிசாய் அளிக்கப்பட்ட 'ஆடி 100' கார் (டி. ராஜேந்தர் ஸ்டைலில் சொன்னால், 'நன்றாக ஆடி வாங்கினார் ஆடி') ரவிசாஸ்திரிக்கே சொந்தம். அநேகமாக இதற்கு கஸ்டம்ஸ் வரி விலக்குக் கிடைக்கும் என எதிர் பார்க்கப்படுகிறது. ரவிசாஸ்திரி, "இந்த 'ஆடி 100' காரை பம்பாயில் சுற்றுவதற்குப் பயன்படுத்த மாட்டேன்; பூனா போன்ற தொலைதூர இடங்களுக்குப் போய்வர மட்டும்தான் பயன்படுத்துவேன்" என்று சொல்லி இருக்கிறார்.

தகவல்: தமிழ்நாடு கிரிக்கெட் அசோசியேஷன் ஸ்ரீராமன்
தொகுப்பு: மௌஷ்மி



உங்கள்
குடும்பத்தின்
திட்டமிட்ட பரிபூரண உணவு
இப்போது
ஃபேமிலி பேக்கிலே

சாக்கலேட் சுவை காம்ப்ளான் இப்போது 1 கிலோ பேக்கிலே!

இரண்டு 500 கிராம் பேக்குக்குப் பதிலாக இப்போது வாங்குங்கள் புதிய 1 கிலோ காம்ப்ளான் பேக். 4 ரூபாய் மிச்சமாக்கிடுங்கள். அத்துடன், உங்களுக்குக் கிடைக்கிறது கவர்ச்சிகரமான ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் டம்ளர்-இலவசமாக!

காம்ப்ளான் ஒன்றுதான் உங்கள் குடும்பத்தின் ஒவ்வொருவருக்கும் அன்றாடம் தேவைப்படும் 23 மூலாதார ஊட்டச்சத்துக்களைக் கொண்டுள்ளது— கார்போஹைட்ரேட்டுகள், கொழுப்புச் சத்து, வைட்டமின்கள், தாதுக்கள், மற்றும் மிகச்சிறந்த புரதமான பால்புரதம் (20%)

உங்கள் குடும்பத்தினருக்கு அன்றாடம் அளியுங்கள் இருவேளை காம்ப்ளான்.

இலவசம்!
பெற்றிடுவீர்
கவர்ச்சிகரமான
ஸ்டெயின்லெஸ்
ஸ்டீல் டம்ளர்
1கிலோ
பேக்குடன்







காம்ப்ளான்® – திட்டமிட்ட பரிபூரண உணவு

GK&E B95.GLC.11.Tm-R



* சங்கீதா — கலாவதி



* டாக்டர் கிரன் ஸேத்

"என்ன ஸார் இது? என்ன சொல்றீங்க, நீங்க?" என்று ஒன்றும் புரியாமல் கேட்டாள் சாரதா.

சாரதா புதுதில்லியில் ஒரு கல்லூரி மாணவி. அவளிடம் ஐ. ஐ. டி. பேராசிரியர் கிரன் ஸேத் ஒரு கோரிக்கை விடுத்தார். சாரதாவை அப்படிக் குழப்பத்தில் ஆழ்த்திய அந்தக் கோரிக்கைதான் என்ன?

"இந்தியப் பண்பாடு பற்றி இளம் தலைமுறையினர் நன்கு அறிந்துகொள்ள, நீ எனக்கு உதவுவாயா? இந்தியக் கலைகள் இளைஞர்களிடையே பரவ உதவி செய்வாயா?"

இந்தக் கேள்வி சாரதாவைத் திணற அடித்ததில் வியப்பில்லை. இளம் தலைமுறையினரான கல்லூரி, உயர்நிலைப் பள்ளி மாணவ, மாணவிகள் இப்போதெல்லாம் சம்பிரதாய ரீதியான சாஸ்திரீய சங்கீதம், நடனம் இவற்றுக்கு எங்கே மதிப்புத் தருகிறார்கள்? அவர்கள் ரசிப்பதெல்லாம் சினிமாப் பாடல்கள்; வெள்ளித்திரையில் காணப்படும் நைட் கிளப் நடனங்கள் அல்லது 'பாப்' எனப்படும் மேற்கத்திய நவீன இசை — இவைதாமே! இவர்களிடையே போய் பரதநாட்டியம், குச்சிப்புடி என்றும் ஹிந்துஸ்தானி, கர்நாடக இசை என்றும் எப்படிப் பேசுவது? நையாண்டி பண்ணி அனுப்பிவிட மாட்டார்களா?

"ஏன் ஸார், நிஜமாகத்தான் பேசுகிறீர்களா?"

டாக்டர் கிரன் ஸேத் சிரித்தார். "சரி, என்னுடன் வா. நான் பண்ணுகிற காரியங்களைக் கவனி. அப்புறம் ஒரு முடிவுக்கு வா" என்றார். இருவரும் புதுதில்லி ஐ. ஐ. டி.யில் இறுதி ஆண்டு மெக்கானிகல் இன்ஜினியரிங் வகுப்பு ஒன்றுக்குப் போனார்கள்.

"ஸ்பிக் மெக்கே சார்பில் அம்ஜத் அலி கான் ஸரோடும் நிகில் பானர்ஜி ஸிதாரும் ஏற்பாடு செய்யப் போகிறோம். இந்தப் பெயர்களைக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?" என்று கேட்டார் பேராசிரியர்.

ஐம்பது மாணவர்களும் விழித்தார்கள். சாரதா, "இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்ய எனக்கு நாலு தொண்டர்கள் தேவை" என்றாள். ஆறு, ஏழு பேர் முன்வந்தார்கள் — சாஸ்திரிய இசையில் உள்ள ஆர்வத்தால் அல்ல; புரொபஸரைத் திருப்திப்படுத்தி வைக்கலாமே என்றுதான்!

சீக்கிரமே இவர்கள் அந்த இசை மேதைகளைப் பற்றித் தெரிந்து கொண்டதுடன் அவர்களுடன் தொடர்பு கொண்டார்கள்; அவர்கள் வந்து சேர்ந்ததும் அவர்களின் தேவைகளைக் கவனித்துக் கொண்டார்கள்; கச்சேரி ஏற்பாடுகளைச் செய்தார்கள்; இசை நிகழ்ச்சிக்கு நண்பர்களை அழைத்து வந்தார்கள்; ஏன், இந்தக் கலை விழாவையொட்டி வெளியிடப்பட்ட நினைவு மலருக்கு விளம்பரங்கள் கூடச் சேகரித்துவிட்டார்கள்! இப்போது புதுதில்லி ஐ. ஐ. டி.யில் நூற்றுக்கணக்கான ஸிதார், ஸரோட் ஆர்வலர்கள் இருக்கின்றனர். சம்பிரதாய இசையிலும் நடனத்திலும் இந்த இளைஞர்கள் அசாத்திய ஈடுபாடு காட்டுகிறார்கள். மந்திரம் மாயம் போல் இந்த அற்புத மாற்றம் எப்படி நிகழ்ந்தது?

"மாணவர்களை நேரடியாக அதில் பங்கேற்கும்படி செய்ததுதான் காரணம்" என்கிறார் டாக்டர் கிரன் ஸேத். "யாரோ

இளைஞர்கள் இளைஞர்களுக்காக நடத்தும் கலைவிழா

வருகிறார்கள். யாருக்காகவோ இசை நிகழ்ச்சி நடக்கிறது என்றில்லாமல் நாம் நமக்காக ஏற்பாடு செய்த நிகழ்ச்சி என்ற எண்ணம் உருவாகும் போது' ஆர்வமும் உண்டாகிவிடுகிறது. இசை மேதைக்கு ஒரு கப் காப்பிக் கொடுத்து உபசரித்த உடனேயே இவர்கள் போக்கே 'அடியோடு மாறிப் போகிறது!''

இன்றைக்கு சாரதா, ஸ்பிக் மெக்கேயின் சென்னைக் கிளைக்குக் காரியதரிசி. ஸ்பிக் மெக்கே என்றால் என்னவோ ஏதோ என்று மூளையைக் குடைந்து கொள்வானேன்? விளக்கிவிட்டால் போகிறது: **Soci ety for the Promotion of Indian Classical Music And Cultuse Among Youth**என்பதன் முதல் எழுத்துக்களின் சேர்க்கைதான் ஸ்பிக் மெக்கே!

எதிராஜ் கல்லூரி மாணவி உமா, சென்னைக் கிளைக்குப் பொருளாளராகப் பொறுப்பேற்கும் வரையில் தாம் ஒரு கர்நாடக சங்கீதக் கச்சேரிக்கோ அல்லது நடனத்துக்கோ கூடப் போனதில்லை என்று ஒப்புக் கொள்கிறார். ஆனால் இன்று? நமது புராதனமான இசை, நடனக் கலைகளில் புதிது புதிதாக அற்புதங்களையும், அதிசயங்களையும் வண்ணங்களையும் பார்த்து ஒவ்வொரு தடவையும் வித்தியாசமான அனுபவச் சிலிர்ப்புக்களைப் பெற்று வருவதாகக் கூறுகிறார்.

1977—ல் டாக்டர் கிரன் ஸேத் ஆரம்பித்து வைத்த ஸ்பிக் மெக்கே இன்று இளைஞர்களிடையே ஆழ வேரூன்றி இருப்பதுடன் ஆலமரமாகத் தழைத்தும் வருகிறது. இன்று 16 நகரங்களில் இதற்குக் கிளைகள் உள்ளன. 'நமது இளைஞர்கள் சம்பிரதாய இசை, நடனங்களைப் புறக்கணிக்கிறார்கள் என்றால் காரணம் என்ன?' என்று யோசித்தார் கிரன் ஸேத். 'அவர்கள் அவற்றைப் பார்க்கவோ, கேட்கவோ வாய்ப்பு வசதி இல்லை; அதனால் அவற்றில் ஈடுபாடு ஏற்படவில்லை — இதுதான் விஷயம்' என்ற முடிவுக்கு வந்தார். 'சாஸ்திரீய இசை அல்லது நடனத்தை மாணவர்கள் பார்க்கப் போகுமாறு ஊக்குவிக்க முடியாது; அதற்கான காசு பணம் அவர்கள் செலவழிக்க இயலாது; அதற்குப் பதில் இசையும் நடனமும் மாணவர்களைத் தேடி வர வேண்டும்' என்று முடிவு கட்டினார். 'கல்லூரிக்கு வரவேண்டும் கலைஞர்கள். அங்குள்ள அரங்கம், இசை, நடன நிகழ்ச்சிக்கு நூறு சதம் ஏற்றதாய் இல்லாமல் போனாலும் அங்கேதான் அவர்கள் பாட வேண்டும், ஆட வேண்டும். மாணவர்களிடம் அதிகமாகப் பணம் எதிர்பார்க்கவும் கூடாது. இளைய தலைமுறையினரிடம் உயர்ந்த தெய்வீகக் கலைகளில் ஆர்வம் ஏற்பட வேண்டுமானால் இது ஒன்றே வழி!'

இந்தக் கருத்தைப் பல கலைஞர்கள் ஏற்றுக் கொண்டு ஸ்பிக் மெக்கே நிகழ்ச்சிகளுக்கு வருகிறார்கள். பலர் இலவசமாகவே கலை நிகழ்ச்சிகள் அளிக்கிறார்கள்.

கல்வி நிலையங்களில் கலைநிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்வது ஸ்பிக் மெக்கேயின் முதல் வேலை. இரண்டாவது பணி நமது கலைகளின் சிறப்புக்களையும் நுணுக்கங்களையும் மாணவர்களுக்கு எளிதில் புரிகிற மாதிரி கலைஞர்களைக் கொண்டே எடுத்துக் கூறச் செய்வது. இதன் மூலம் பார்க்கின்ற, கேட்கின்ற கலையை இன்னும் நன்றாகப் புரிந்து கொண்டு ரசிக்க முடிகிறது. அதனால் ஆர்வம் வளர்ந்து, மேலும் அதுபற்றித் தெரிந்துகொள்ள மனம் விழைகிறது. இந்த நிகழ்ச்சி ஏதோ வகுப்பறை விரிவுரை போலன்றிக் கலந்துரையாடல் போல நிகழ வேண்டும் என்பது முக்கியம். பாடகர் பேச வேண்டும்; பேசியதைப் புரியவைக்கப் பாடிக்காட்ட வேண்டும்; பாடியதைப் புரிய வைக்கப் பேச வேண்டும்!

மூன்றாவதாக ஒரு பணியும் இருக்கிறது. அது, சாஸ்திரீயக் கலைகளில் நன்கு பரிச்சயமாகி ஆழ்ந்த ஈடுபாடு காட்டுவோருக்கென நடக்கும் சிறப்பு நிகழ்ச்சி. இதில் பங்கேற்போர் எண்ணிக்கை குறைவாக இருந்தாலும் கலைஞரின் திறனும் ரசனையின் தரமும் நிறைவானதாக இருக்கும். ஆழ்ந்த புலமையோடு கலைநிகழ்ச்சியும் அதைப் பின்தொடரும் சர்ச்சையும் விளங்கும்.

• ஸஞ்ஜுக்தா பாணிக்ரஹி



• டாகர் சகோதரர்கள்



சரி, ஸபிக் மெக்கே பற்றிக் கலைஞர்கள் என்ன நினைக்கிறார்கள்? பண்டிட் ஜஸ்ராஜ் கூறுகிறார்: "நான் சில காலமாகவே ஹிந்துஸ்தானி இசையின் எதிர்காலம் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன். இளம் தலைமுறையினரிடம் இதில் ஆர்வமே காணப் படவில்லையே, இந்தக் கலையே நாளடை வில் நசித்துப் போய்விடுமோ என்ற பயம் கூட எனக்கு இருந்தது. ஆனால் இன்று என் கவலையெல்லாம் பறந்து விட்டது. ஸ்பிக் மெக்கே இருக்கும் வரை ஒரு அபாயமும் இல்லை என உணர்கிறேன்!"

சென்ற ஆண்டு டில்லியில் ஸ்பிக்மெக்கே செயல்படும் விதத்தைப் பார்த்து பிரமித்துப் போன லால்குடி திரு. ஜெயராமன், 'சென்னையில் இப்படி ஓர் அமைப்பு உருவாக வேண்டாமா?' என்று ஏங்கினார். அவர் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்யவே போல் இவ்வாண்டு பிப்ரவரியில் ஸ்பிக் மெக்கேயின் சென்னைக் கிளை முதல் கலைவிழாவை நடத்தியது. ஸன்ஜுக்தா பாணிகிரஹியின் ஒடிஸி நடனம்; டாக்டர் என். ராஜம் வயலின் இசை; டாகர் சகோதரர்கள் ஹிந்துஸ்தானி வாய்ப்பாட்டு; உமையாள்புரம் சிவராமன் நடத்தித் தந்த தாளவாத்திய ஜுகல்பந்தி என்று நிகழ்ச்சிகளின் அமைப்பிலேயே ஸ்பிக் மெக்கே தன் பரவலான ரசனையையும் தனித்தன்மையையும் வெளிப்படுத்தியது. இளம் கலைஞர்களையும் விட்டுவிடவில்லை. சுதா ரகுநாதன், ஸங்கீதா, கலாவதி ஆகியோரும் கலைநிகழ்ச்சிகள் அளித்தனர்.

எம். எல். வி. யின் சிஷ்யையான சுதா, ஏற்கெனவே சென்னை ரசிகர்களிடையே நன்கு அறிமுகமாகிப் பாராட்டுப் பெற்றவர். ஆனால் ஸங்கீதாவும், கலாவதியும் வயலினில் அளித்த ஹிந்துஸ்தானி இன்னிசை மெய் சிலிர்க்க வைத்த புது அனுபவம். இவர்கள் திரு. டி. என். கிருஷ்ணனின் சகோதரியான டாக்டர் என். ராஜத்தின் மகளும் மருமகளும்-ஆவர். இசையில் முதிர்ச்சியும், ஒருவருடன் ஒருவர் இழைந்து அனுசரித்து வாசிப்பதில் தேர்ச்சியும் பெற்றிருந்தனர். இருவருமே கல்லூரி மாணவிகள். காசி பல்கலைக்கழகத்தில் இசைத் துறையில் பி. ஏ.; எம். ஏ., பட்டங்களைப் பெறப் பயின்றுவருபவர்கள்.


ஸ்பிக் மெக்கேயின் சென்னைக்கிளை முதன் முதலாக நடத்திய இந்த இசைவிழாவில் தொடக்க காலக் கோளாறுகள் சில இருக்கத்தான் செய்தன. ஒவ்வொரு நாளும் கச்சேரிகள் குறித்த நேரத்தை விடத் தாமதமாகவே தொடங்கின! இதனாலேயே பலர் எழுந்து 'போய்விட்டார்கள்! ஆனால் அடுத்தடுத்த நாட்களில் முதல் தரமான கலைநிகழ்ச்சிகள் நடக்கிற விஷயம் வெளியே பரவி, ரசிகர்களைக் கணிசமாக ஈர்த்து வந்து விட்டது. ராஜத்தின் கச்சேரி முடிந்த பிறகு மாணவர்கள், "இன்னும் ஒண்ணே ஒண்ணு, ப்ளீஸ்!" என்று கெஞ்சவே ஆரம்பித்து விட்டார்கள்!

ஸ்பிக் மெக்கேயின் பணி வெற்றிபெற்று வருகிறது என்பதற்கு இதைவிட வேறு சான்று என்ன வேண்டும்?

—கௌரி ராமநாராயணன்.

மேனுடுகளில் 'டிஜிடல் டீ.வி.' கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. வீடியோ பார்த்துக் கொண்டிருக்கும் போதே டெலிவிஷனில் என்ன நிகழ்ச்சி என்பதையும் 'டிஜிடல் டீ. வி. யில் தெரிந்து கொள்ளலாம். திரையின் ஒரு மூலையில் டெலிவிஷன் நிகழ்ச்சி தெரியும். உருவங்களைப் பெரிதாக்கவோ, சிறிதாக்கவோ முடியும். ஒரு குறிப்பிட்ட காட்சியை அப்படியே நிறுத்திவைத்து மெதுவாக ரசித்தும் பார்க்கலாம். சீக்கிரமே விற்பனைக்கு வர இருக்கும் இதன் விலை 1000 டாலர்கள்.

சொசைட்டியிலிருந்து: சீதாபஞ்சு.





"என்னப்பா சர்வர்! மூணு பேப்பர் ரோஸ்டைப் பார்சல் பண்ணச் சொல்லியிருந்தேன். வீட்டுலே போய்ப் பிரிச்சுப் பார்த்தா ரெண்டுதானே இருக்குது...!"

"நல்லாப் போய்ப் பாருங்க சார். ஒரு பேப்பர் ரோஸ்டுலதான் மத்த ரெண்டையும் வச்சுக் கட்டியிருக்கேன்."

—ஜா. ரவி.

ஸ்ரீராம் டிரஸ்ட்

145, லிங்கிச் செட்டி தெரு, சென்னை - 600001.
போன்: 28545.

அன்பார்ந்த சிந்தனைச் சிற்பிகளே,
இந்த இளைஞர் ஆண்டில்,
உங்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு!

நம் நாட்டு இளைஞர்களுக்கு வழிகாட்டி, அவர்களுக்கு ஏற்ற திட்டங்களை வகுத்துக் கொடுத்து அறிவுரைகள் கூறி, நாட்டு முன்னேற்றப் பணியில் அவர்களை ஈடுபடுத்துவதே எங்கள் நோக்கம்.

அதற்கான சிந்தனைக் கட்டுரைப் போட்டியிது.

இதன் மூலம் சிறந்த எழுத்தாளர்களுக்கு ஒரு பொன்னான வாய்ப்பை ஸ்ரீராம் டிரஸ்ட் (அமுதசுரபி வெளியிடுவோர்) பெருமையுடன் அளிக்க முன்வந்துள்ளது.

கட்டுரைப் போட்டியின் தலைப்பு:

கனவுகளைக் கரை சேர்ப்போம்.

இதற்கான இரு பரிசுகள் - மொத்தம் ரூ.20,000.

1. **மாண்புமிகு எம்.ஜி.ஆர் சார்பில் அளிக்கப்படும் பரிசு - ரூ.10,000.**
   20 முதல் 35 வயது வரை உள்ள எழுத்தாளர்கள் மட்டுமே கலந்து கொள்ளலாம்.

2. **ஸ்ரீராம் டிரஸ்ட் அளிக்கும் பரிசு - ரூ.10,000.**
   35 வயதுக்கு மேற்பட்ட எல்லா எழுத்தாளர்களும் கலந்து கொள்ளலாம்.

கட்டுரை கையெழுத்துப் பிரதியாகவோ, டைப் செய்தோ 400 பக்கங்களுக்குள் இருக்க வேண்டும்.

பரிசு பெறும் கட்டுரை புத்தக வடிவில் வெளியிடப்படும்.

அனுப்ப வேண்டிய முடிவு தேதி: 30.4.85.

மேலும் விபரங்களுக்கு:
'அமுதசுரபி' மார்ச் இதழைப் பார்க்கவும்.

அமுதசுரபி (ஸ்ரீராம் டிரஸ்ட்)
145, லிங்கிச் செட்டி தெரு, சென்னை - 600001.
தபால் பை: 5043. போன்: 28545.

ADWAVE/ST/2846


ரயில் கட்டண உயர்வு
இவ்வளவு பாரம் சுமக்கிற உனக்கு இந்த சின்ன மூட்டை ஒரு பாரமா?
பழைய ரயில் கட்டணம்
பன்ஸிலால்
பஞ்சாப் கவர்னர் பதவி
ம.பி. முதல்வர் பதவி
கோயில் நிலங்களை ஏழைகளுக்கு மலிவு விலையிலே கொடுக்கப் போகிறோம்!
க்யூவிலே வரிசையா நில்லுங்க...
ஏழைகளுக்கு 'மலிவு விலை'... எங்களைப் போல யார ஏழைகளுக்கு...?



கல்கி

1985 மார்ச் 24
மலர்: 43 இதழ்: 34
ரக்தாக்ஷி பங்குனி 11



பகைமை ஒழியட்டும்; பாசம் பெருகட்டும்!

ராஜீவ் பிரதமராக வந்தபின் எடுத்த பல நல்ல முடிவுகளுள் மிகவும் முக்கியமானது அகாலி தலைவர்கள் சிலரை விடுதலை செய்ததாகும். இதற்காகப் பிரதமரைப் பாராட்டுகிறோம். ''பஞ்சாப் பிரச்னை தீரப் பேச்சு வார்த்தை துவங்கட்டும்'' என்றால் ''யாருடன் பேசுவது?'' என்ற பதில் கேள்வி எழுப்பப்பட்டது நேற்றுவரை. இன்று இத்தகைய எதிர்க்கேள்விக்கு இடமில்லை. வேறு சில முக்கிய தலைவர்கள் இன்னமும் சிறையில்தான் இருக்கிறார்கள் என்றாலும் லாங்கோவாலும் மற்றும் ஏழு தலைவர்களும் விடுவிக்கப்பட்டதானது, பிரச்னை சுமுகமாகத் தீரவேண்டும் என்பதில் மத்திய அரசுக்கு உள்ள ஈடுபாட்டை உணர்த்துகிறது. இந்த நல்லெண்ணத்தை அகாலி தலைமையும் எதிரொலித்துக் கட்டுப்பாட்டுடனும் கண்ணியத்துடனும் நடந்து கொள்ள வேண்டும் என்று தேசமே எதிர் பார்க்கிறது.

தலைவர்கள் சிலர் விடுவிக்கப்பட்டதாலேயே பிரச்னை சுலபமாகத் தீர்ந்துவிடப் போவதில்லை. மனக்கசப்புக்களும், விரோத உணர்வுகளும் பயங்கரமான அளவுக்கு வளர்ந்துவிட்டிருக்கின்றன. எனவே அரசுத்தரப்பில் மிகுந்த பொறுமையும் சாதுர்யமும் பேச்சு வார்த்தைகளின்போது தேவை. அதோடு விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையும், பகைமையை ஒழித்துப் பிரச்னைக்கு எவ்வாறேனும் தீர்வு கண்டே ஆக வேண்டும் என்ற மன உறுதியும் இருதரப்பினருக்கும் இருக்க வேண்டியது அவசியம்.

விடுதலை பெற்ற லாங்கோவால், ஆனந்த்பூர் சாகிப் தீர்மானங்கள் தேசத் துரோகமானவையல்ல என்றும் அரசுடன் அகாலிதளம் பேச்சு வார்த்தை நடத்த அதையே அடிப்படையாகக் கொள்ள வேண்டும் என்றும் கூறியுள்ளார். ''அது பிரிவினை வாதமல்ல, தேசத்தின் ஒற்றுமையைக் குலைப்பதும் அல்ல. மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் தருவதன் மூலம் தேசம் மேலும் பலம் பெறவே செய்யும்'' என்று சொல்லியிருக்கிறார். ''பலமான மாநிலங்கள் ஐக்கியமடையும் போதுதான் பலமான தேசம் உருவாகும். நாங்கள் கோரும் உரிமைகள் பஞ்சாபுக்கு மட்டுமல்ல எல்லா மாநிலங்களுக்காகவும்தான்.''

ஆனால் ராஜீவ்காந்தியோ, ஆனந்த்பூர் சாகிப் தீர்மானங்கள் ஆபத்தானவை, தேசத்தின் ஒற்றுமையைக் குலைப்பவை என்பதாகக் குற்றம் சாட்டி அதையே தேர்தல் பிரச்னையாகவும் ஆக்கியுள்ளார்.

மற்றொரு பெரும் பிரச்னை இந்திராகாந்தி மறைவுக்குப்பின் சீக்கியர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறை. இதற்கு அதிகாரபூர்வமான நீதி விசாரணை நடத்த ராஜீவ் மறுத்து வந்திருக்கிறார். ஆனால் சுதந்திரமாக நடந்த வேறு இரு விசாரணைகளில் காங்கிரஸ்காரர்கள் பலரே இந்த வன்முறையைத் தூண்டிவிட்டதாகத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. எனவே ராஜீவ் இவ்விஷயத்தில் தம் பிடிவாதத்தைத் தளர்த்தி நீதி விசாரணைக்கு வழி வகுப்பதுடன் இத்தகைய கயவர்களைத் தம் கட்சியிலிருந்து வெளியேற்றவும் முன்வர வேண்டும்.

இதற்கெல்லாம் தேவையான துணிவையும் பஞ்சாப் பிரச்னையைப் பழங்கதையாக்கிவிடத் தேவையான விவேகத்தையும் ராஜீவுக்குக் கொடுத்தருளுமாறு இறைவனைப் பிரார்த்திப்போம்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா—பாரதியார்.

போதை பழகும் பேதைகள்!

மிட்டு ரொம்பவும் சூட்டிகையான பையன். அப்பா அம்மாவிடம் அபரிமிதமான செல்லம். ஒரே பிள்ளை, வசதியான குடும்பம் என்று எத்தனையோ கூட்டல் குறிகள் உண்டு. அவ்வளவும் படிப்பிலும் பிரதிபலித்தன.

எல். கே. ஜியிலிருந்து தொடங்கி, ஹையர் செகண்டரி வரை என்று எல்லா வகுப்புக்களிலும் அவன் முதல் மாணவன் தான். தவறிப் போய்க் கூட இரண்டாம் இடமோ, மூன்றாம் இடமோ மிட்டுவுக்குக் கிடைத்ததில்லை.

அகில இந்திய அளவில் நடைபெறுகிற போட்டித் தேர்வு ஒன்றிலும் வெற்றி பெற்ற மிட்டுவுக்கு, என்ஜினியரிங் அல்லது அது மாதிரி ஒரு கல்லூரியில், தகுதி அடிப்படையில் சுலபமாகச் சேர்ந்துவிட முடிகிறது.

அதன் பின்னர்தான் பிரச்சினை வருகிறது. கல்லூரியில் சேர்ந்த சில மாதங்களுக்கெல்லாம் ஏதோ ஒரு வகுப்புத் தேர்வு. முதல் பத்து ராங்குகள் கூடக் கிடைக்கவில்லை. பதின்மூன்றாவதாக வருகிறான் இது மிட்டுவுக்குக் கிடைத்த முதல் அடி.

பயங்கரமான அடிதான். தாங்கிக்கொள்ளவே அவனால் முடியவில்லை. அப்பாவுக்குப் 'புரோக்ரஸ் கார்டு' போகும் என்பது அவனுக்குத் தெரியும். இத்தனை வருஷமும் முதல் மாணவனாக இருந்த மிட்டு இப்போது பதின்மூன்றாவது இடம் பெற்றது ஒன்றும் வியப்பூட்டுவதில்லை. காரணம் அந்தப் படிப்பில் சேர்ந்த அவ்வளவு பேருமே மிட்டுவைப் போல் அவர்கள் படித்த பள்ளிகளில் முதல் மாணவர்களாய் இருந்தவர்கள்தான் இந்தப் போட்டியும் ஓரளவு தோல்வியும் தவிர்க்க முடியாதவை; ஓட்டப் பந்தயத்தில் யாராவது ஒருவர்தான் முதலில் வர முடியும் என்பதெல்லாம் மிட்டுவுக்கு யார் புரிய வைப்பது?

இதை ஒரு 'சாலஞ்ச்' என்று எடுத்துக் கொள்ள வேண்டும். 'ஸ்போர்ட்டிவ்' ஆகவே எதையும் அணுக வேண்டும் என்கிற பாலபாடங்களையெல்லாம் மிட்டுவுக்கு யாரும் கற்றுத்தரவில்லை. விளைவு?

மிட்டுவின் மன உளைச்சலும், கவலையும் சாதாரணமானவை அல்ல. அவனைப் பொறுத்தவரை இது ஒரு கௌரவப் பிரச்சினை. இதுபோன்ற நேரங்களில் 'உதவு'வதற்காகவே சில நண்பர்கள். கவலையை மறக்க முதலில் கஞ்சா பழக்கமாகிறது. வகுப்புக்கு மட்டம் போடுகிறான். யாருடனும் கூடிப் பழகாமல் தனித்து இருக்க வேண்டும் போல் தோன்றுகிறது. மாத்திரைகள், கூட அவனுக்கு அறிமுகமாகிவிடுகின்றன.

''இதில் ஒண்ணும் தப்பே இல்லே மிட்டு! கொஞ்ச நாள் ஆனால் சுலபமாக விட்டு விடலாம்,'' என்று நண்பர்கள் கூறுகிறார்கள். ஆனால் சிறுகச் சிறுக இந்தப் பழக்கம் அவனைத் தின்று விடுகிறது.

பெற்றோரின் கட்டுப்பாட்டு எல்லைகளை விட்டு, மேற்பார்வை வட்டாரத்தைவிட்டு வெளியே பிள்ளைகள் தனித்து விடப்படும் போது இதுபோன்ற விபத்துக்கள் சாதாரணமானவைதான்.

பெற்றோர்களோ நல்லெண்ணம் கொண்ட நண்பர்களோ, மிட்டுப் போன்றவர்கள் பாதை மாறுகிறார்கள் என்று இலேசாகத் தெரிய வந்த உடனேயே அவர்களைத் தக்க மனநோய் மருத்துவரிடம் அழைத்துச் செல்ல வேண்டும். போதைப் பழக்கம் ஆரம்ப நாட்களிலேயே குணப்படுத்திவிட வேண்டிய ஒன்று.


இதற்கெல்லாம் ஒரு குறிப்பிட்ட வயது நிர்ணயம் ஏதாவது இருக்கிறதா என்று யாரும் கேட்க வேண்டாம். பெற்றவர்கள் எச்சரிக்கையோடு இருக்க மறந்து விட்டால் போதும் போதை நோய் தொற்றிக்கொள்ள ஏற்ற சூழ்நிலை உருவாகிவிடுகிறது.

பல நேரங்களில் பெற்றவர்கள் பிள்ளைகளை அளவுக்கு அதிகமாகக் கண்டிப்பதும் கூட அவர்களுக்கு 'வேறு' பாதைகளைக் காட்டிவிடுகின்றன.

ஒழுங்கான குடும்பச் சூழலில் வளர்ந்த தங்கள் பிள்ளைக்கு இப்படியொரு வேண்டாத பழக்கம் வரக்கூடும் என்று பெற்றவர்கள் எப்படி எதிர்பார்க்க முடியும்?

° டாக்டர் ராஜ்குமார்





● போதை மருந்துகள் உலகம் முழுவதும் பரவுவதை சித்தரிக்கும் அட்டைப்படக் கட்டுரையுடன் 'நியூஸ் வீக்' பத்திரிகை.

சின்னக் குழந்தைக்குக் காய்ச்சலோ தலை வலியோ வந்தால் உடனே டாக்டரிடம் கொண்டுபோய்க் காண்பித்து வைத்தியம் பார்க்கிற மாதிரிதான் இது என்கிறார் மன நோய் மருத்துவர் டாக்டர் எஸ். ராஜ்குமார். வெட்கப்படக் கூடாது.

இப்போதெல்லாம், பள்ளிகள் கல்லூரிகள் இவற்றின் அருகிலேயே மாணவர் சமுதாயத்தைச் சீரழிப்பதற்கான விதம் விதமான 'போதை' மருந்துகளும், மாத்திரைகளும் தாராளமாகக் கிடைக்கின்றன. சட்ட வரம்புகளையும் மீறி இந்தப் போதை விவகார புரோக்கர்கள் எப்படியோ பெருகிவிட்டார்கள்.

ஒரு மாணவன், போதைப் பழக்கத்துக்கு அடிமையாகிக் கொண்டிருக்கிறான் என்பதை ஆரம்பத்திலேயே எப்படிக் கண்டறிவது? டாக்டர் கூறுகிறார்:

—அடிக்கடி அர்த்தமில்லாமல் கோபம் வரும்.


—எதிர்பாராத அளவில் படிப்பில் பின்னடைவு காணப்படும்.

—நண்பர்கள், உறவுக்காரர்கள் என்று மிகவும் கலகலப்பாகப் பழகுகிறவன் திடீரென்று விலகிப் போய்த் தன்னைத் தனிமைப் படுத்திக் கொள்ள முயல்வான். பெற்றோர்களுடனும், தம்பி தங்கைகளுடனும் நெருக்கமாக இருந்த நிலை வரவரக் குறைந்து தன்னை ஒரு அந்நியன் போல எண்ணிக் கொள்வான்.

போகப் போக சரியாகிவிடும் என்று இதை விட்டுவிடக் கூடாது. நமக்கென்ன என்று அக்கம்பக்கத்தில் உள்ளவர்களும் அலட்சியமாக இருக்கக் கூடாது. நல்லெண்ணம் கொண்ட நண்பர்களோ, உறவினர்களோ, யாரேனும் இதையும் ஒரு சேவை என்றெண்ணி உரியவர்களுக்குத் தெரியப் படுத்தியாக வேண்டும்.

* * * * *

அப்புறம் மது. ஒரு பெக் இரண்டு பெக் என்று விஸ்கி போன்றவற்றைத் தொட்டால் அது தப்பில்லை என்பது ஒரு வாதம். ஆனால் எவ்வளவு பேர் குடிப்பழக்



அவள்: என் குழந்தைகள் மாலாவையும், கலாவையும் நான் வேற வேற அறையில் தான் படுக்க வைப்பேன்.

இவள்: ஏன்?

அவள்: இரண்டு குழந்தைகளுக்கு இடையே நீண்ட இடைவெளி விடணும்னு அரசாங்கமே சொல்லுதே!

அ. வசந்தா.

க்த்தால் அழிந்து போனார்கள் என்பது சிந்திக்க வேண்டிய ஒன்று. 'ஒரு லிமிட்டாகக் குடிப்பதுடன் நிறுத்திக் கொள்கிறேன்' என்று வைராக்கியமாய் இருப்பவர், வைராக்கியத்துடன் குடிக்காமலே இருக்கலாமே! எனவே இது சரியான வாதமாகாது. நாளடைவில் இன்னும் கொஞ்சம் இன்னும் கொஞ்சம் என்று அளவு அதிகரித்துக் கொண்டே போகும். முதலில் காணப்பட்ட வைராக்கியமெல்லாம் சிதறிப் போகும்.

எதற்காகக் குடிக்கிறார்கள் என்பதைக் கவனிக்க வேண்டும். டென்ஷன் குறைய, மனநிம்மதி பெற என்று குடிப் பழக்கம் ஆரம்பிக்கும். ஐந்து பத்து ஆண்டுகளில் இது அடிக்ஷன் ஆகிவிடும்.

'கம்பெனி கொடுக்க வேண்டியிருக்கிறதே' என்று நண்பர்களுடன் குடிக்கத் தொடங்குகிறவர்கள் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்கிறார்கள்; நண்பனுக்குக் கம்பெனி கொடுக்கக் குடிப்பதற்கு எந்த விதமான மனோபலமும் தேவையில்லை. கம்பெனி கொடுப்பதற்காகக் கூடக் குடிக்க மாட்டேன் என்று கூறத்தான் துணிவும் மன உறுதியும் தேவை. அப்போதுதான் ஒருவனைத் தைரியசாலி என்று குறிப்பிட முடியும்.

ஒரு சொற்பொழிவாற்ற வேண்டியிருக்கிறது, நண்பர்களுடன் கலகலப்பாகப் பேச வேண்டியிருக்கிறது, ஒரு கச்சேரி பிரமாதமாக அமைய உடலில் தெம்பும், உள்ளத்தில் உற்சாகமும் தேவைப்படுகிறது என்பது போன்ற எண்ணங்களால் ஒரு பெக் இரண்டு பெக் என்று சாப்பிடுகிற பழக்கம் சிலருக்கு ஏற்படுகிறது. ஒரு தவறான நம்பிக்கை இப்படித்தான் உருவாகிறது.

துயரை அல்லது தோல்வியைச் சகித்துக் கொள்ளும் மனவளத்தை இழந்துவிடுகிற நேரங்களில் சிலருக்கு மதுப் பழக்கம் ஏற்படலாம். ஆனால், சீக்கிரமே மதுவின் அளவு கூடிக் கொண்டே போகுமே ஒழிய மன நிம்மதி கிடைக்காத நிலை ஏற்படுகிறது. சுயக் கட்டுப்பாடு என்பது அறவே போய்விடும்.

மதுவுக்குப் பழகிவிட்டவர்களின் உடல் நிலை மிகவும் பரிதாபகரமானது. மதுவுக்காக உடம்பின் ஒவ்வொரு செல்லும் ஏங்கித் தவித்துத் துடிக்கும். அனாவசியமான சந்தேகங்கள் மனசைக் குடைந்தெடுக்கும். பாலுணர்வின் மீதான நியாயமான ஆர்வம் கூட மரத்துப் போய்விடும். மனைவியின் மீதும் வேலையாட்களின் மீதும் பிள்ளைகளின் மீதும் இன்னும் யாரைப் பார்த்தாலும் வேண்டாத சந்தேகங்கள் எல்லாம் எழும்.

வன்முறை எண்ணங்கள் தோன்றும். பொய்யாகக் கணக்கு எழுதுவது, முதல் நாள் நடந்த சம்பவங்களைக் கூட அறவே மறந்து போவது என்று எத்தனையோ வடிவங்கள்.

குடல் சேதமடையலாம், மூளைப்பகுதி படிப்படியாக நாசமடையும். இருதயம் பலவீனப்பட்டுக் கெட்டுப் போகும். இந்தமாதிரி அவலங்கள் வளர விடக் கூடாது என்பதற்காகத்தான் ஆரம்பத்திலேயே ஒருவனை மது அரக்கனிடமிருந்து மீட்டுக் காப்பாற்ற வேண்டும் என்பது.

* * * * *

அடாலசன்ஸ் என்பார்கள் ஆங்கிலத்தில். சிறு குழந்தையும் இல்லை. வளர்ந்துவிட்ட பெரியவனுமில்லை. இரண்டுங்கெட்டான் வயசு என்று பேச்சு வழக்கில் பெரியவர்கள் சரியாகவே சொல்வார்கள். அந்த வயதில்தான் குழந்தைகளிடம் நிரம்ப அன்பும் பரிவும் காட்ட வேண்டும். அப்பா கர்நாடகம், அம்மாவுக்கு ஒன்றுமே தெரியாது. நண்பர்கள் சொல்வது தான் வேத வாக்கு என்று ஒரு தவறான எண்ணம் இந்தப் பருவத்தில் நம் குழந்தைகளிடம் ஏற்படுகிறது. தன்னையொத்த வயதுடைய மற்றவர்களிடையில் தன்னையும் ஒரு ஹீரோவாக வெளிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்கிற எண்ணம் வருகிறது. இதில் தவறில்லை; ஆனால் இந்த ஹீரோத்தனம் ஆரோக்கியமான விதத்தில் விகசிக்கிறதா என்பதைக் கண்காணிக்க வேண்டியது பெற்றோர்களின் கடமை. ஆனால் பெற்றோர்களே இரட்டை வாழ்க்கை நடத்தினால்?

இளைஞர்கள் கெட்டுப் போகப் பெற்றோரின் இரட்டை வாழ்க்கை ஒரு முக்கிய காரணம். குடித்து கூச்சல் போடுவார் அப்பா, அம்மா, அப்பாவை மதிக்காமல் எதிர்த்துப் பேசுவாள். இரைவாள். கவனித்துக் கொண்டேயிருக்கிற பையன் என்ன செய்வான் பாவம்? வெறுத்துப் போய் அவனும் சிகரெட்டில் ஆரம்பித்துக் கஞ்சாவில் இறங்குகிறான். பையனுக்குத் தாங்களே நல்ல முன்மாதிரியாக விளங்க வேண்டும்

என்ற எண்ணமின்றி அவனைப் பெற்றோர்களால் நன்கு வளர்க்க முடியாது.

* * * * *

'டெக்ஸிட்ரின்' என்று ஒரு மாத்திரை மூளையைச் சுறுசுறுப்பாகப் பண்ணும். அப்புறம் மோசமாகக் களைப்படையச் செய்து விடும். தேர்வு காலங்களில், இரவு நேரங்களில் கண் விழித்துப் படிக்க என்று தொடங்கி, நாளடைவில் இது தவிர்க்க முடியாத ஒரு பழக்கமாகிவிடும். மாண்ட்ரெக்ஸ், தூக்க மாத்திரை போன்ற மற்றவையும் கூடவுக்கும் பொதுவான உடல்நலனுக்கும் பெரும் தீங்கு விளைவிக்கக் கூடியவை.

* * * * *

நர்சரிப் பள்ளிக் கூடங்களில் தொடங்கி, பிள்ளைகள் வகுப்பிலேயே முதலாவதாக வர வேண்டும் என்ற கருத்தில், பெற்றோர்கள் படுத்துகிற பாடு... துன்புறுத்தல் என்று கூடச் சொல்லலாம். அப்பா அம்மாவின் ஆசை வேகத்துக்குப் பல பிள்ளைகளால் ஈடுகொடுக்க முடிவதில்லை. அத்தகையவர்களும் திசை தப்பிப் போகிறார்கள்.

படித்துப் பட்டம் பெற்ற பிறகு எதிர்காலம் பற்றி நம்பிக்கை வைக்க முடியாத ஒருநிச்சயமற்ற நிலையும் மாணவமணிகளை அச்சுறுத்தி அந்தச் சூன்யத்திலிருந்து தப்புவதற்காகவே 'போதை மருந்துகளை நாடச் செய்யலாம். போதாக்குறைக்கு அயல்நாட்டு நாகரீகங்களின் மீதான தேவையற்ற மோகம். சில சமயங்களில் ஏற்படுகிற தாழ்வு மனப்பான்மை. இவையும் தூண்டுதலே.

எல்லாவற்றிலிருந்தும் இளைஞர்களை மீட்டு வந்து நல்வழி காட்டுவது என்பது கட்டுப்பாடு இல்லாத தற்காலச் சூழலில் சுலபமானதில்லைதான். எனினும், சுலபமில்லை என்பதால் அசிரத்தையாக இருந்துவிடக் கூடாது. வந்தபின் காப்பதைவிட வருமுன் காப்பது நல்லது. இதற்கு முக்கியமாகச் செய்ய வேண்டியது குழந்தைகளுக்கு வாழ்க்கையில் ஒரு பிடிப்பும் உற்சாகமும் ஏற்படுகிற மாதிரி அடிக்கடி அவர்களிடம் பேசுவதுதான்; அவர்கள் பிரச்னைகளைப் புரிந்து கொண்டு அனுதாபத்துடன் நம்மால் இயன்ற உதவி புரிவதுதான்; அவர்களுக்கு முன் மாதிரியாக நாம் நடந்து கொள்வதுதான்

ஆதாரத் தகவல்கள்:

டாக்டர்: என். ராஜ்குமார்

கட்டுரை: —சுப்ர. பாலன்.

ஆபீஸ் சங்கு ஊதி ஓய்ந்த போது மணி சரியாக ஐந்து.

மணிக்கு ஆபீஸை விட்டு வெளியே செல்லவே தயக்கமாக இருந்தது. காரணம் இல்லாமலில்லை. ஆபீஸின் செக்யூரிட்டி கேட்டுக்கு அப்பால் செல்லும் சாலை மேல் ஒரு பட்டாணிக்காரன் நின்று கொண்டிருந்தான். அவன் பார்வை மணியின் வருகையையே எதிர்நோக்கி இருந்தது.

முதல் தேதிக்கான சம்பளக் கவருடன் பம்மிப் பம்மி வெளியே வந்தவனைக் கழுகைப் போல் வந்து கவ்வி நிறுத்தினான் பட்டாணிக்காரன்.

''அப்புறம் தரேன் பட்டாணி...''

''எப்ப, நான் செத்த பிறகா?''

—மணியின் பாச்சா பலிக்கவில்லை. சம்பளக் கவரைப் பிடுங்கிக் கொண்டு பாக்கிக்காக அடுத்த மாதம் வருவதாகக் கூறி சைக்கிளில் ஏறிப் பறக்க ஆரம்பித்தான் பட்டாணி. மணியின் முகம் சுண்டி வதங்க ஆரம்பித்திருந்தது. இதயத் துடிப்பில் கூட வலுவில்லை. தடுமாறிக் கீழே விழாத குறையாக நடக்க ஆரம்பித்தவன் தோள்மேல் ஒரு கரம் வந்து விழுந்தது. திரும்பிப் பார்த்தான். பாஸ்கரன்! பாஸ்கரனின் முகத்தில் மணியின் நிலைக்கான கவலை முன்பே தேங்கிக் கிடந்தது.

''இந்த மாசம்பூரா உனக்கு நான் செலவு பண்றேன். கவலைப்படாதே. குடிக்கறதில்லேன்னு சத்தியம் பண்ணு...''—பாஸ்கரன் கோரிக்கையோடு கையை நீட்டிய போது மணியால் மறுக்க முடியவில்லை. ஆனாலும் உள்நாக்கு உபத்திரவப்படுத்தியது.

'சத்தியத்துக்கு நான் கட்டுப்பட முடியாது. அப்பப்பப் பட்டையும் பிராந்தியும் எனக்கு நீ தந்தே தீரணும்... என்றது.

அறைக்குள் நுழைந்தவுடன் தட்டுப்பட்டது தரையில் கிடந்த தபால் கார்டு. மணியின் அப்பா அம்மா பாஸ்கரனுக்கு எழுதியிருந்தனர்.

அன்புள்ள பாஸ்கரனுக்கு,

''நலம். நலமறிய ஆவல். என் மகன் மணி எப்படி இருக்கிறான்? இப்பொழுது திருந்திவிட்டானா? நாங்கள் எல்லாவற்றுக்கும் உன்னையே நம்பி இருக்கிறோம். நீயும் எங்களுக்கொரு மகன்தான்! அவனுக்கில்லாத பொறுப்பு உனக்கிருக்கிறது. அவனை நல்வழிப்படுத்து. உன்னை நம்பித்தான் வெளியூரில் அவனை வேலையில் தனியாக இருக்க வைத்திருக்கிறோம். எங்களால் இந்தக் கிராமத்தை விட்டு வர முடியாது. இதை நீ புரிந்து செயல்படவும். உன் தங்கை திருமண முயற்சி எதுவரையில் உள்ளது? எழுது. அவள் திருமணம் விரைவில் நடந்து உன் திருமணமும் விரைவாக நடக்க என் ஆசீர்வாதங்கள். பதில் போடு. உன் அன்புள்ள அப்பா மற்றும் அம்மா.''

—கடிதத்தைப் படித்து முடித்தபோது பாஸ்கரன் கண்களில் நீர் தேங்கிவிட்டிருந்தது.

''என்னடா அழுறே, உன் தங்கச்சி லெட்டர் எழுதியிருக்காளா?'' மணி கேட்டான்

''இல்லடா என் அப்பா, அம்மா...'' பாஸ்கரன்.

''அவங்கதான் செத்துப் பல வருஷமாச்சே...?'' மணி.

''உன் அப்பா, அம்மா வேற, என் அப்பா அம்மா வேறயா?'' — பாஸ்கரனின் வினா மணியை நெகிழ வைத்துவிட்டது.

சற்றைக்கெல்லாம் சட்டையைக் கழற்றி ஹேங்கரில் மாட்டிவிட்டுப் பாஸ்கரன் குளிக்கக் கிளம்பினான். காத்திருந்தது போல் சட்டைப் பையில் கையைவிட்டுச் சில்லறையை அள்ளிக் கொண்டு பெட்டிக்கடையைக் குறிவைத்தான் மணி.

* * * * *

நட்பென்பது...

இப்பொழுதெல்லாம் பாஸ்கரன் மணியிடம் அவ்வளவாகப் பேசுவதில்லை. சத்தியத்தை மீறி அவன் மறைமுகமாகக் குடிப்பது தெரிந்துவிட்டிருந்தபடியால் பழைய சர்ப்போடு பழக முடியவில்லை. அதே சமயம் வெட்டிக் கொண்டு விலகுவதும் சரியான நட்பாகப் படவில்லை.

அன்றைய விடுமுறையில் பாஸ்கரன் தலைக்கு எண்ணெய் வைத்துக்கொண்டு பாத்ரூமில் அடைபட்டிருந்தான்.

சிகரெட்டுக்குக் காசில்லாமல் மணி மல்லாந்திருந்தான். அன்றைக்கு வெளியே ஒரு சிறுவன், ''சார்'' என்ற கனிவான அழைப்போடு!

''யாருப்பா, என்ன வேணும்?''

''லாட்டரி சீட்டு சார், லாட்டரிச் சீட்டு... ஒரு சீட்டு வாங்கிக்குங்க சார், விழுந்தா லட்ச ரூவா...''

மணி சுணங்கிக் கொண்டு திரும்பின போது, பாஸ்கரனின் சட்டைப் பை பளிச்சென்று கண்ணில்பட்டது. மெல்ல எழுந்திருந்து சட்டையை நெருங்கியவன் ஒரு ஒற்றை ரூபாயை உருவி எடுத்துக் கொண்டு

இந்திரா சௌந்தர்ராஜன்

வந்து தந்து ஒரு லாட்டரிச் சீட்டை வாங்கிக் கொண்டு.

'பரிசு மட்டும் விழட்டும்: இந்தப் பயலுக்குத் தண்ணி காட்டறேன். அப்புறம் தினம் ஹோவார்ட்ஸ் விஸ்கிதான், ராயல் புளு சிகரெட்தான்...'

மனத்துக்குள் முடிவு முடிச்சுக்கள் வேறு இறுகின.

* * * * *

டீக்கடையில் தினசரியைப் புரட்டும் போது லாட்டரி முடிவு வந்திருப்பது தெரிந்தது. அசுவாரசியமாக முடிவைப் பார்த்துக் கொண்டே வந்தான். திடும் என்று கால் நரம்பை நண்டு ஒன்று வந்து கடித்த மாதிரி ஒரு அதிர்ச்சி. அவன் வசமுள்ள சீட்டுக்கு ரூபாய் பத்தாயிரம் விழுந்திருப்பது தெரிந்தது. பட்டை அடிக்காமலே ஜிவ்வென்று அவன் உடம்பு வானத்து மேகத்தைத் தொட்டது.

'ஆமாம். யாருக்கும் தெரியக் கூடாது. தெரிந்தால் பொறாமைப்படுவார்கள். பாஸ்கருக்கு?

கட்டாயம் தெரியக்கூடாது. தெரிந்தால் லாட்டரி வாங்க ஏது பணம்? என்று கேட்பான். பிறகு பரிசு தன்னுடையது என்பான் அவனுக்குத் தெரியவே கூடாது...

முடிவுகளோடு அறைக்குத் திரும்பிய போது பாஸ்கரன் கவலையோடு உட்கார்ந்திருந்தான்.

''என்னப்பா?'' — சாதாரணமாகக் கேட்டான் மணி. பதிலுக்குக் கடிதத்தை நீட்டினான் பாஸ்கரன். ஊரிலிருந்து பாஸ்கரனின் மாமா எழுதியிருந்தார்.

சிரஞ்சீவி பாஸ்கரனுக்கு,
மாமா ஆசீர்வாதங்களுடன் எழுதுவது.

உன் தங்கைக்கு நல்ல இடத்தில் வரன் அமைந்துள்ளது. மாப்பிள்ளைக்குப் பெரிய உத்தியோகம்! ஆனால் வரதட்சிணையாக 5000 ரூபாய் கேட்கிறார்கள். நான் அன்று சொன்னது போல் கல்யாணச் செலவுகளை ஏற்கச் சித்தம். நீ ஐயாயிரம் ரூபாயைப் புரட்டி எடுத்துக் கொண்டு உடன் வந்து சேரு. மற்றவை நேரில்.

இப்படிக்கு,
உன் அன்பு மாமா.

மணிக்குப் பகீரென்றது. நல்லவேளை நாம் முன்னெச்சரிக்கையாக நாக்கை அடக்



திக் கொண்டிருப்பது நமக்கே நல்லதாகப் போயிற்று. இல்லையென்றால் பணம் அவ்வளவுதான்...

நினைப்போடு "என்னப்பா பண்ணப் போறே?" — கேட்டான் மணி.

"யாருகிட்டயாவது கடன் தான் மணி வாங்கணும்." — பாஸ்கரன்.

மணி லாட்டரிச் சீட்டு விஷயம் பற்றி மூச்சுக்கூட விடவில்லை.

* * * * *

நடையாய் நடந்து அலைமோதி அல்லல் பட்டு எவரிடமும் பணம் பெற முடியாமல் பாஸ்கரன் களைத்து உட்கார்ந்த போது ராக்ஷதன் போல் எதிரே வந்தான் பட்டாணிக்காரன். பட்டாணிக்காரனுக்கு ஆரம்ப முதலே பாஸ்கரன் மேல் ஒரு அலாதி ஈடுபாடு.

பாஸ்கரனின் வாட்டம் பார்த்துப் பட்டாணிக்காரன் பரிவோடு கேட்டான்.

"அரே ... ஏப்பா டல்லா இருக்கே..?" — பாஸ்கரன் விரக்தியாகச் சிரித்தான்.

"சும்மா சொல்லு. ஏதும் மணி ட்ரபுளா?" — 'ரப்' கொட்டியது பாஸ்கரனின் தலை.

"எவ்ளோ?"

"ஐயாயிரம்."

"அச்சா நான் தருது உனக்கு." — சில விநாடி யோசனைக்குப் பிறகு பணத்தை எடுத்து நீட்டினான் பட்டாணி. பாஸ்கரனுக்குள் ஒரு மின் நிலையமே செயல்பட ஆரம்பித்திருந்தது.

"பட்டாணிக்காரரே எங்கிட்ட வைக்க எதுவுமில்லியே?" — நாக்குழறப் பேசினான் பாஸ்கரன்.

"அரே ... உன்னைப் பத்தி எனக்கும் தெரியாதா? நீ ஒரு கொழுந்தப்பா. அந்தப் பரதேசி மணி ஒரு குடிகாரன், ஊதாரி. இருந்தும் உன் பிரெண்ட்ஷிப்பை நீ கட் செஞ்சுக்கலை. இருத்த முயற்சி பண்றே. எல்லாம் எனக்குத் தெரியும்."

"இந்தப் பணத்துக்கு வட்டி கூட வேண்டாம். கொடுக்கும் போது கொடு. ஆனா நீ மத்தவங்களை விட சீக்கிரமாவே கொடுத்துடுவே. எனக்கும் தெரியும்."


—பட்டாணி பொரிந்து தள்ளிவிட்டான். பாஸ்கரன் பட்டாணிக்காரன் கைகளை நன்றியோடு பற்றிக் கொண்டான். சந்தோஷத்துடன் அறைக்குத் திரும்பிய போது தூக்கிவாரிப் போட்டது.

மணியைச் சிலர் ஆம்புலன்சில் ஏற்றிக்கொண்டிருந்தனர்!

"என்ன ஆச்சய்யா?"

"என்ன ஆச்சா? குடிகாரனுக்கு எதுதான் ஆகாது! உள் ரூமுக்குள்ள போய்ப் பார் தெரியும். ஒரே ரத்தவாந்திதான்!"

—ஆஸ்பத்திரியில் டாக்டர் பல்ஸைப் பிடித்துப் பார்த்துவிட்டுப் புருவத்தைச் சுருக்கினார். பின்னர் பல சோதனைகளை



முடித்துவிட்டுப் பாஸ்கரனை நெருங்கியவர் முகத்தில் சிந்தனை ரேகைகள்.

"என்ன டாக்டர், சீரியஸ் ஒண்ணுமில்லையே...?" பாஸ்கரன்.

"அப்படிச் சொல்வதற்கில்லை" — டாக்டர்.

"பின்னெ?"

"லிவர் ரொம்ப புவரா இருக்கு. அதுக்குள்ள பிளட் சர்க்குலேஷன் இல்லை.. இதே நிலை நீடிச்சா வயிறு வீங்கி மோசமான விளைவுகள்ளாம் ஏற்படலாம்."

"அதுக்கு என்ன பண்றது டாக்டர்?"

"ஆபரேஷன்தான் ஒரே வழி. குடலெல்லாம் ஆல்கஹாலால அரிக்கப்பட்டிருக்கு. பெப்டிக் அல்சர் பல மில்லி மீட்டர் குடலையே சாப்பிட்டிருக்கு. இட் ஈஸ் எ சிவியர் கேஸ், நிறைய செலவாகும்..."

"ஓ. கே. டாக்டர், நீங்க செய்ங்க, எனக்கு மணியோட உயிரும், ஆரோக்கியமும் தான் முக்கியம்..."

மணி மயக்கத்திலிருந்தான். எதுவுமே அவன் காதில் விழவில்லை.

* * * * *

இரண்டு நாள் ஆஸ்பத்திரி செலவில் ரூபாய் ஐயாயிரமும் போன இடம் தெரியவில்லை. ஒரு வழியாக மணி கண் திறந்த போது அதைப் பார்த்து அவன் பெற்றோரை விட அதிகம் சந்தோஷப்பட்டது பாஸ்கரன் தான்.

டாக்டர் தனது முயற்சியின் வெற்றியை நினைத்துப் பெருமிதப் பட்டபடி மணியிடம் பேசினார்.

"மிஸ்டர் மணிகவலைப்படாதீங்க... உங்களுக்கு ராஜ வைத்தியம் பார்த்திருக்கார் உங்க நண்பர். இன்னும் ஒரு வாரத்துல நீங்க முழுசாய் குணமாயிடுவீங்க. தயவு செய்து குடிக்கறதை மட்டும் மறந்துடுங்க. இல்லேன்னா உங்களை ஆண்டவனாலே கூடக் காப்பாத்த முடியாது..." —பேசிவிட்டு நகர்ந்தார். கண் திறந்த மணிக்கு எல்லாமே ஒரு கனவு போலப்பட்டது. எமன் வீடுவரை போய்விட்டவனை எப்படியோ இழுத்து வந்துவிட்ட பாஸ்கரனை ஆர்வத்துடன் தேடினான்.

பாஸ்கரன் ஆஸ்பத்திரி காரிடாரில் பட்டாணிக்காரனுடன் பேசிக் கொண்டிருப்பது தெரிந்தது. 'பட்டாணிக்காரன் கடன் பாக்கிக்காக ஆஸ்பத்திரிக்கே வந்துவிட்டானா?' — மணியினுள் அதிர்ச்சி அலை மோதும் பொழுது அதைவிட அதிர்ச்சியாகப் பட்டாணிக்காரன் குரல் வந்து மோதியது.

"ஏ. பாஸ்கர், என்னப்பா நீ பைத்தியக்காரன் மாதிரி வேலை செஞ்சுட்டே... உன் தங்கச்சிக் கல்யாணத்துக்குன்னு ஐயாயிரம் வாங்கிட்டு, இந்த கஸ்மாலத்துக்குப் போய் அதைச் செலவு பண்ணியிருக்கியே. இவன் செத்தா என்ன குடிமுழுகிடும்? குடிக்கறவன் இப்படித்தான் ஆவான். ஆவட்டுமே.. மத்தவங்களுக்கு அப்பத்தானே புத்திவரும்? எல்லாத்தையும் கெடுத்துட்டியே..."

பாஸ்கரனின் பதில் மணியை அதைவிட அதிகமாகத் தாக்கியது. "பட்டாணி, அதிகம் பேசாதீங்க. நட்புன்னு பழகியாச்சுன்னா அங்க நல்லவன் கெட்டவன் பாக்கக்கூடாது. இந்த ஐயாயிரத்தை நாளைக்கே நான் சம்பாதிக்க முடியும். என் தங்கைக்கும் இன்னொரு மாப்பிள்ளை.. கிடைக்காமலா போய்விடுவான்? ஆனா மணியோட உயிர் போயிருந்தா திரும்பக் கிடைச்சிருக்குமா? அவன் அப்பாவும், அம்மாவும் என்னைத் தன் மகனாகவே நினைக்கிறாங்க. அந்த நம்பிக்கைக்குத் துரோகம் பண்ண என்னாலே முடியாது பட்டாணி. உங்க பணத்தைத் தலையை அடகு வைச்சாவது திருப்பிடுவேன். கவலைப்படாதீங்க..."


—மணியின் விழிகளில் ரத்தமே கொப்பளிக்கும் போல் தோன்றியது. "பாஸ்கரா.." —நினைவுடன் கத்தினான் மணி. நெருங்கிவந்த அவன் பாதங்களில் லாட்டரிச் சீட்டுடன் சரிந்தது அவன் உடம்பு!

அருள்வாக்கு

கோபதாபமில்லாமல், காம மோஹங்களில்லாமல் பதற்றப்படாமல் அதற்காக ஒரேயடியாக மந்தமாகச் சோம்பியும் வழியாமல் சாந்தமாகவும், பிரியமாகவும் இருந்து கொண்டே நல்ல சிந்தனை சக்தியுடனும் க்ரியா சக்தியுடனும் இருப்பது தான் ஸத்வ குணம், ஸாத்விகம் என்பது. ஒரே பதற்றம், காமக்ரோதாதி உணர்ச்சி வசப்படுவது இவையெல்லாம் ரஜஸ்— ரஜோ குணம் அல்லது ராஜஸ குணம் என்பது. ஒரே சோம்பல், மந்த புத்தியாயிருப்பது தமஸ்— தமோ குணம் அல்லது தாமஸ குணம். இப்படி மூன்று குணங்கள். உணர்ச்சிமயமாக, ஓவர் இமோஷனலாக, தடபுடா என்று தாறுமாறாகக் காரியம் பண்ணுவது ரஜஸ். அது ஒரு எக்ஸ்ட்ரீம். (கோடி). ஒரே டல்லாக எதற்கும் பிரயோஜனமில்லாமல், புத்தியுமில்லாமல் காரியசித்தியுமில்லாமலிருப்பது தமஸ். இன்னொரு எக்ஸ்ட்ரீம். இரண்டுக்கும் நடுவே ஸமநிலையில் 'பாலன்ஸ்டாக' இருப்பது ஸத்வம். மனசின் எழுச்சி ரஜஸ். தாழ்ச்சி தமஸ். ஸமநிலை ஸத்வம். எண்ணம், காரியம் இதுகளைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிற ஸத்வத்தையும் விட உசந்த ஒரு நிலை உண்டு. அங்கே மனஸ் (எண்ணம்), சரீரம் (காரியம்) இதுகளை ஒருத்தன் அடியோடு கடந்து விடுவான். தமஸ் மனசின் தாழ்ச்சி என்றால் இது மனஸின் வீழ்ச்சி. தமஸிலே தூங்குவான். இதிலே ஸமாதி நிலையை அனுபவிப்பான். என்ன வித்தியாசமென்றால் தூங்குகிறவனுக்குத் தன்னைத் தெரியாது. ஸமாதியிலிருக்கிறவனும் வெளியில் பார்த்தால் தூங்குகிறாற்போலத்தானிருந்தாலும் அவனுக்குத் தன்னை நன்றாகத் தெரியும். தான் ஒன்றுதான் இருக்கிற எல்லாம் என்று தெரியும். இப்படியிருக்கிறவன் நாமெல்லாம் சின்னதாக 'நான்' 'நான்' என்று எதையோ சொல்லிக் கொண்டு அதற்காக இத்தனை ஹிம்ஸையும் பட்டுக் கொண்டிருக்கிறோமே, அந்த நானைப் பற்றின நினைப்போ அரிப்போ கொஞ்சம் கூட இல்லாமல், ஈச்வரன் கைக்கருவியாக லோக கல்யாணத்துக்காக ரஜோ குணக்காரனைவிட நிறைய சிந்தித்து நிறையக் காரியமும் பண்ணுவான். நாம் பட்டுக் கொண்டு அடிபட்டுக்கொண்டு பண்ணுவதைவிட ஜாஸ்தியாகவும் சவரணையாகவும் இவன் பட்டுக் கொள்ளாமலே பண்ணிவிடுவான்.

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி
சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்




"எனது, பதினாறு
வயதுக் கால்பந்தாட்டக்
கில்லாடி. அவன், ஒரு
நாள் உலகிலே மிகச்
சிறந்த ':பார்வர்டு'
ஆவான்!"
போர்ன்விடாவின் இனிமைக் காலம்
போர்ன்விடா அளித்தவரை பாச மனங்கள்
நேசத்தோடு நினைத்து மகிழும் ஒருநாள்!
வளரும் குழந்தைகள் வேறு எந்த
மால்ட்டட் பானங்களையும்விட
போர்ன்விடாவை விரும்புவதேன்?
போர்ன்விடா அருந்தி வளர்ந்த இரு
தலைமுறையினர் தங்களுடைய
குழந்தைகளுக்கு போர்ன்விடா தவிர
வேறு எதுவும் உகந்ததல்ல என்று
வலியுறுத்திக் கூறுவதேன்?
அதில்...உற்சாகம் துள்ளும் சுவை
மட்டுமல்ல, காட்பரியின் பிரபல
பெயர் மட்டுமல்ல. அவற்றைவிட
அதிகமோ அதிகம். அதுதான்
போர்ன்விடா! அதோடு வளருங்கள்.
காட்பரிஸ்
போர்ன்விடா
நல்ல வளர்ச்சி,
போர்ன்விடா பயிற்சி.
Bournvita
Bournvita
SAVE Rs.1.50
The Tastier Food Drink

4

பலராமனைப் பார்க்கப் பலமுறை முயன்றாள் ராஜம்.

முடியவில்லை.

வயிற்றில் கரு வளர, வளர இதுதான் வாழ்க்கை என்று தனித்து வாழப் பழகிக் கொண்டாள்.

பழைய ஊர். அநேகமாகப் பழகிய மனிதர்கள். அம்மா விட்டுச் சென்ற சமையல் தொழில் கைகொடுக்கவே, தன்னம்பிக்கையுடன் ஏற்றுக் கொண்டாள். அவள் அம்மா சம்பாதித்து வைத்திருந்த நல்ல பெயர் அவளுக்குத் துணையாயிற்று

சிவா பிறந்தான்.

காணாத தெய்வங்களையெல்லாம் வேண்டி, அதன் பயனாகத்தானோ என்னவோ பிள்ளையாக பிறந்ததும் மனத்தின் துயரங்கள் எல்லாம் கனம் குறையலாயின.

பிள்ளை பிறக்கவில்லை என்றுதானே என் மீது கோபம்? இப்போதுதான் லட்சணமாய் அப்பா மாதிரிச் சுருட்டைத் தலையுடன் பிள்ளைப் பிறந்திருக்கிறானே! மனம் மாறாதா என்ன?

பக்கத்து வீட்டுக் கிழவருடன் மாலாவையும் துணைக்கு அனுப்பி, பலராமனிடம் பிள்ளை பிறந்த விவரத்தைச் சொல்லச் சொன்னாள்

'யாருக்குன்னு கேள்' என்று திருப்பி அனுப்பிவிட்டான் என்று அந்தக் கிழவர் வந்து சொன்ன போது மூச்சே நின்றுவிடும் போலிருந்தது? இப்படியெல்லாமா கேட்கத் தோன்றும் என்று துடித்துப் போனாள். ''அம்மா, ஏம்மா அழறே?'' என்று புரியாமல் கேட்டது மாலா.

வரவுக்கும், செலவுக்கும் சடுகட்டச் சிரமப்பட்டுக் கொண்டிருக்கையில்தான் லாட்டிரியில் பலராமனுக்கு இருபத்தைந்து லட்ச ரூபாய் பரிசு விழுந்திருக்கிறது என்று பத்திரிகையில் புகைப்படத்துடன் செய்தி வெளிவந்திருந்தது.

எல்லாம் சிவா பிறந்த வேளைதான் என்று இப்போதாவது ஏற்றுக் கொள்ள மாட்டாரா என்ற ஆவலுடன் குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு பலராமனைப் பார்க்க முயன்றாள்.

அவன் நிழலைக்கூடப் பார்க்க முடியவில்லை.

ஆள் வைத்துக் துரத்தியடித்தான் மனேன் மணி.



புதிதாய்ப் பிறந்தான்

ஜெயரதன்

மனம் உடைந்து, தன் இருப்பிடம் வந்தாள் ராஜம்.

பலராமன் மதராஸுக்குப் போய்விட்டான் என்று யாரோ சொன்னார்கள். சினிமாக் கம்பெனி ஆரம்பித்திருப்பதாகச் செய்திகள் காதில் விழுந்தன. படம் எடுப்பதாகவும் பணத்தில் மிதந்து கொண்டிருப்பதாகவும் சொன்னார்கள்.

பாரீசில் பிரபல நடிகை குந்தளாவுடன் பார்த்ததாகக் 'கிசுகிசு'வில் யாரோ படித்துக் காண்பித்தார்கள்.

நியூயார்க்கில் ஒரு இத்தாலிய நடிகை



யுடன் சுற்றுப்பயணம் செய்த புகைப் படத்தை, பத்திரிகையில் அவளே பார்த்தாள்.

பக்கத்து ஊருக்கு ஷூட்டிங் சம்பந்தமாக அவன் வந்திருந்ததாகவும், அப்போது அவனைப் பார்க்க நேர்ந்த பக்கத்துவீட்டுக் கிழவர் ராஜத்தைப் பற்றிப் பேச முயன்றதாகவும், 'ஷட் அப்' என்று முகத்தில் அறைந்தாற்போல் சொல்லிவிட்டான் என்றும் சொன்னார்கள்.

நாளடைவில் பலராமனைப் பற்றித் தெரிந்து கொள்வதையே தவிர்த்து, தனித்த வாழ்க்கைக்குத் தன்னைத் தயார் செய்து கொண்டாள்.

மாலா வளர்ந்தாள்.

சிவா பள்ளிக்கூடம் செல்ல ஆரம்பித்தான்.

'இனி இவர்களுக்கு அப்பாவாகவும் நான் இருந்து வளர்ப்பேன்'' என்ற வைராக்யம் எழுந்தது. ஒரு தாயாரால், தகப்பனை மாறி, குழந்தைகளை நல்ல முறையில் வளர்த்திட முடியும் என்று நிரூபிக்க வேண்டும் என்ற உந்தல் விசுவரூபம் எடுத்தது.

அன்பையும், கண்டிப்பையும் உணவோடு சேர்த்து ஊட்டி வளர்த்தாள் ராஜம். பலராமனின் எந்தக் குணமும் படிந்துவிடாமல் பார்த்துப் பார்த்து வளர்த்தாள். அவ்வப்போது தான் பட்ட கஷ்டங்களையும் சிரமங்களையும் குழந்தைகள் இருவரிடமும் கூறுவாள். கண்ணீர் பொங்கப் பொங்கக் கேட்பாள் மாலா.

''அம்மா... நீ அழாதேம்மா.. நான் படிச்சு வேலைக்குப் போய் உன்னைக் காப்பாத்தறேம்மா...'' என்று அவன் முகத்தை நிமிர்த்தி விம்மலும், விசும்பலுமாகச் சின்ன சிவா சொல்கிற போது மனம் குளிரக்குளிர இருவரையும் நெஞ்சோடு சேர்த்து அணைத்துக் கொள்வாள்...

ஒரு சின்னப் பெண்ணையும், சின்னப் பையனையும் சின்ன வயதுக்காரியாய்த் தன்



ஜப்பானியர்களுக்கு கவிதைகள் என்றால் உயிர். அங்கு கவிதைகளை மட்டுமே பிரசுரிக்கும் ஐம்பது பத்திரிகைகள் இருக்கின்றன! கடைகளில் விளம்பர போர்டுகள் கூட கவிதை வடிவில் இருக்கும். மூக்குக் கண்ணாடி வாங்கினால் அதன் உறையில் ஒரு கவிதை அச்சிடப்பட்டிருக்கும்!

ஆதாரம்: குங்குமம் (மலையாளம்).

—அனிதா ராமச்சந்திரன்.

ணைந்தனியாய் நின்று வளர்ப்பது எவ்வளவு கடினம் என்பதை ஒவ்வொரு கட்டத்திலும் அவள் உணர நேர்ந்தது.

தனி வாழ்க்கை துவங்கிய புதிதில் எல்லாரும் அனுதாபமாகத்தான் பார்த்தார்கள். நாட்கள் செல்லச் செல்லப் பிற ஆண்களின் பார்வை தன்னைத் துளைப்பதை அவளால் உணர முடிந்தது.

சிலர், ஜாடை மாடையாய்க் கோடி காட்டினர்.

சிலர் நேரடியாகவே கேட்டனர்.

''என் வொய்ஃப் பத்து நாள் குழந்தைகளுடன் தன் பிறந்தகத்துக்குப் போயிருக்கிறாள். தனியாக் கஷ்டமாயிருக்கு. நீ வர்றியா?''

அவள் கண்களை விரித்துச் சுடுகிறமாதிரிப் பார்த்ததும் ''சமைச்சு வச்சுட்டுப் போறியான்னு கேட்டேன். சமைக்கச் சிரமமாய் இருக்குன்னு சொல்ல வந்தேன்'' என்பார்கள்.

தனியாய் இருப்பதுதான் எவ்வளவு சிரமம் என்று பல நாட்கள் தவித்துப் போயிருக்கிறாள். குழந்தைகளுக்குத் தெரியாமல் அழுதிருக்கிறாள்.

ஆனாலும் கிராமங்களில் ஒரு சௌகர்யம். சமுதாயத்தின் கண்காணிப்பு தனி மனிதர்கள் மீது அதிகமாகவே இருப்பது ராஜத்திற்குச் சௌகர்யமாக இருந்தது. இந்தக் கண்காணிப்புத்தான் சமுதாயத்தின் மனசாட்சி போலிருக்கிறது என்று அடிக்கடி நினைத்துக் கொள்வாள்.

இந்த வாழ்க்கை அவளுக்குப் பல பாடங்களைச் சொல்லிக் கொடுத்தது. ஒருவரது பார்வையை வைத்தே எண்ண ஓட்டங்களைத் துல்லியமாய்க் கணிக்க முடிந்தது. நடையை வைத்தே மனவிகாரங்களைக் காண முடிந்தது.

ஆண்கள்தாம் இப்படியென்றால் பெண்களைப் பற்றிக் கேட்க வேண்டியதே இல்லை.

பெண்ணுக்குப் பெண் தான் பகை என்பதை நாளடைவில் அவள் மிக நன்றாகப் புரிந்து கொண்டாள்.

மனம் நோக எத்தனை பெண்கள் மறைமுகமாகவும், நேரடியாகவும் பேசியிருக்கிறார்கள்?

''தலையிலே யாருக்காகப் பூ வச்சுக்கறா...? தான் தொரத்தியடிச்சுட்டானே?''

என்பார்கள். ''அவன்தான் இருக்கானோ.. போயிட்டானோ...? இவளென்னமோ நித்ய கல்யாணி மாதிரி தாலிக்கயிறும், மஞ்சளுமாய்ப் பழுத்த சுமங்கலியாத்தான் மினுக்குறாள்'' என்று இவள் காது கேட்கவே சிலர் கூறுவதைக் கேட்டும் கேட்காதவளாய்ப் போயிருக்கிறாள். ''வீட்டுக்குள்ளே, ரொம்ப நாழித் தனியா இருக்க விடாதே... காரியம் ஆனதும் காசைக் குடுத்து உடனே அனுப்பிச்சுடு... வாழாவெட்டி. உன் புருஷனும் பாவம், வெகுளி. சூதுவாது தெரியாது... ஒண்ணு கெடக்க ஒண்ணு ஆகிவிடப் போகிறது...'' என்று சில முதிய பெண்கள், இளம் பெண்களை எச்சரிக்கிற சாக்கில் அவளைக் குத்திக் குதறுவார்கள்.

கழுகுகள் வானத்தில் மட்டுமில்லை, தரையில் புடவை, வேட்டி அணிந்து கொண்டும் இருக்கின்றன என்பதை நிறையவே காண நேர்ந்தது அவளுக்கு.

அவ்வளவு சிரமங்களுக்கும் இடையில் அவளுக்கு ஆதரவு கொடுத்தவர், வக்கீல் ராமதுரைதான்.

பக்கத்து ஊரில் தொழில் பார்த்து வருபவர், நகரத்தின் ஜனசந்தடி பிடிக்காமல் கிராமத்தில் வீட்டைக் கட்டிக் கொண்டு குடியேறினார். ஏதோ ஒரு விசேஷத்திற்கு அவர்கள் வீட்டில் சமைக்கப் போனவள், அவரது மனைவியின் அபிமானத்திற்குப் பாத்திரமாக நேர்ந்தது. அவளது அதிர்ஷ்டமே. நல்ல எண்ணங்களைத் தவிர வேறு விகாரங்களே தோன்றாத தெய்வமனம் கொண்ட அவர் மனைவி, ராஜத்தின் வாழ்க்கைப் பிரச்னைகளைத் தெரிந்து கொண்டதும், மனம் உருகி அவள் மீதும் குழந்தைகள் மீதும் அன்பைப் பொழியலானாள்.

''ஒரு வார்த்தை 'உம்'னு சொல்லுங்கோ. ஜீவனாம்சம் வாங்கித் தர்றேன்... கோர்ட்லே அவனைக் கூண்டிலே ஏத்திப் பீஸ் பீஸாக் கிழிச்சுடறேன்... விவாகரத்து வாங்கித் தர்றேன்...''

தார்மீகக் கோபத்துடன் ராமதுரை கேட்டபொழுது, அழுத்தமாய் மறுத்துவிட்டாள் ராஜம்.

''விவாகரத்து வாங்கிண்டா மட்டும், நான் அவரோட வாழ்ந்தது இல்லேன்னு ஆயிடுமா...? இந்த ரெண்டு குழந்தைகளுக்கு அவர் அப்பா இல்லேன்னு போய்

டியா...? தன் கடமையையும், பொறுப்பையும் உணராமே சட்டத்துக்குப் பயந்து அவர் குடுக்கற ஜீவனாம்சத்தை வாங்கிக்கறதுக்கும் பிச்சையெடுக்கறதுக்கும் என்ன வித்தியாசம்...? எனக்கு யாரோட பிச்சையும் வேண்டாம்...''

ராமதுரையின் மதிப்பில் உயர்ந்து போனாள் ராஜம்.

அவ்வப்போது அவளுக்கு வேண்டிய ஆலோசனைகளை வழங்குவார். தேவையான உதவிகளைச் செய்வார்.

''கவலைப்படாதீர்கள், அம்மா... உங்க மனோதைரியம் எனக்குப் பிடிக்கிறது... பெண்ணைப் படிக்கவையுங்கோ.. வேலைக்கு அனுப்புங்கோ... எகனாமிக் இன்டிபென்டன்ஸ்தான் பெண்களுக்கு செக்யூரிடி. பெருமாள் கட்டாயம் காப்பாத்துவார்...'' என்று மனம் தளர்ந்த சமயங்களில் எல்லாம் உற்சாகம் அளிப்பார்.

''எகனாமிக் இன்டிபென்டென்ஸுனு என்ன?...''

''கரெக்ட். இங்கிலீஷ்லே சொல்லிட்டேன்லியா?'' என்று பெண்களின் வாழ்க்கை முறையினை விளக்குவார்

''நீங்க மட்டும் மாசம் ஆயிரம் ரூபாய் சம்பாதிச்சுண்டு இருந்திருந்தா, உங்களை பலராமன் இப்படி விட்டுட்டுப் போயிருப்பானா...? தன்னைத்தானே காப்பாத்திக்கற சக்தி ஒவ்வொரு பொண்ணுக்கும் இருக்கணும்... தாம்பத்யம்னாப் புருஷனும், மனைவியும் சம அந்தஸ்தோட ஒண்ணா வாழணும்... ஒருத்தர் இன்னொருத்தரை டாமினேட் செய்யறதுன்னு அர்த்தமில்லே... நம்ம பெண்கள் ஒண்ணு கணவனுக்கு அடிமையா இருக்கிறார்கள். அல்லது 'விமன்ஸ் லிப்' அப்படீங்கற பேர்லே, மூர்க்கத்தனமா எல்லாக் கட்டுப்பாடுகளையும் மீறணும்னு நினைக்கிறார்கள். . ரெண்டு எக்ஸ்ட்ரீமும் தப்பு... படிச்சு, வேலைக்குப் போய்ச் சம்பாதிக்கறதுனாலே, எல்லா அடிப்படை கலாச்சாரத்தையும் மீறணும்னு அர்த்தமில்லே... நம்மளோட வாழ்க்கைக் கலாச்சாரம், உலகத்திலேயே ரொம்ப உயர்ந்தது... கடற்கரையிலே அஞ்சு ரூபாய்க்குச் சுண்டல் வியாபாரம் பண்றானே, அவனோட சொல்ப வருமானத்தைப் பெரிசா மதிச்சு, அவன்கிட்ட உண்மையா இருக்க ஒரு மனைவி இருக்கா... ஏழ்மையிலேயும் சந்தோஷமாக இருக்கிறார்கள். லட்சம் டாலர் சம்பாதிக்கறவனோட மனைவி, அயல் நாட்டிலே கணவனோட மல்லுக்கு நிற்கிறான்.... நம்மளோட வாழ்க்கை முறை அடிப்படையிலேயே எத்தனை பலமானதுன்னு புரியறதில்லையா...? அதைத்தான் சொல்ல வந்தேன்.... மாலாவைப் படிக்க வைச்சு, வேலைக்கு அனுப்பித் தன் காலிலே நிற்கப் பண்ணுவோம்... அதே நேரத்திலே நம்மளோட அடிப்படை வாழ்க்கை முறைகளை அவள் மதிக்கற மாதிரியும் வளர்க்கணும்...''

அவர் சொல்லச் சொல்லக் கண்களில் நீர் மல்கக் கேட்டுக் கொண்டிருப்பாள் ராஜம்.

''தெய்வம் மனித உருவில் வரும்'' என்பதற்கு இதைவிட வேறு உதாரணம் உண்டா?' என்று மனத்துக்குள் நெகிழ்ந்து போவாள். வீட்டில் இருக்கும் சுவாமி படங்களில், சுவாமியின் முகமெல்லாம் ராமதுரையாகவும், அம்பாளின் முகமெல்லாம் அவர் மனைவியாகவும் தெரியும்...

நாட்கள் துரிதமாய் ஓடின.

கிராமத்துக்கு அருகே ஒரு பெரிய உரத் தொழிற்சாலை உருவாயிற்று. அது கிராமத்தின் முகத்தை மாற்றியது. வங்கிகள் கிளைகளை நீட்டின. சாலைகள் விரிந்தன. பேருந்துகள் விரைந்தன. கிராமம் பேரூராய் மாறலாயிற்று...

மாலா வளர்ந்தாள். படித்தாள். முதல் வகுப்பில் தேறினாள். வக்கீலின் செல்வாக்கினால், ஒரு வங்கியில் டைப்பிஸ்டாக வேலைக்குச் சேர்ந்தாள். வின்னாமல், விரியாமல் அம்மாவிடம் சம்பளக் கவரைக் கொடுத்து நமஸ்கரிப்பாள். பெரும் பகுதியைப் பெண்ணின் கலியாணத்திற்காகச் சேமிக்கிறாள், ராஜம்...

சிவா நன்றாகப் படித்ததனால், உதவிப் பணத்திற்கு ஏற்பாடு செய்து, கல்லூரியில் படிக்க ஏற்பாடு செய்தார் ராமதுரை. அம்மாவைக் கண்ணின் மணியாய்க் காக்க வேண்டும் என்று, தான் படித்து முடிக்கும் நாளுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறான், சிவா...

தனித்து வாழப் பழகி, அந்த வாழ்க்கையை ஓர் அர்த்தமுள்ள கட்டுக்குள் கொண்டு வந்துவிட்ட நேரத்தில், மாலாவுக்கும், சிவாவுக்கும் அப்பாவாகவும், அவள் புதிதாய்ப் பிறந்துவிட்ட நேரத்தில்தான், ஓய்ந்து, உலர்ந்து ஆடாத ஆட்டமெல்லாம் ஆடி, நோய்களுக்கு நிரந்தர வாசஸ்தலமாகி, நாடி தளர்ந்து, ராஜத்தைத் தேடி, மனைவி என்னும் உறவைப் புதுப்பித்துக் கொள்ள வந்திருக்கிறான் பலராமன்...

(தொடரும்)

''என்டா பிரதீப்! நேத்து நீ ஒரு நடிகையைப் பெண் பார்க்கப் போனயே, என்னாச்சு?''



''எல்லாம் ஓ.கே. ஆச்சு. ஆனா கல்யாண முகூர்த்தத்துக்கு ஏப்ரல் 86—லே தான் கால்ஷீட் கொடுக்க முடியும்னு சொல்லிட்டா!''

டெல்லியிலிருந்து அன்று தான் விமானத்தில் திரும்பியிருந்தான் துரை. ஆபீஸ் செலவில் பல தனிப்பட்ட விவகாரங்கள். விமானத்திலிருந்து இறங்கும் போது கூடச் சென்னையில் அவனுக்குக் காத்திருந்த பேராபத்தை உணரச் சந்தர்ப்பம் இல்லை.

கம்பெனி கார் அவனுக்காகக் காத்திருந்தது. பேச்சுவாக்கில் டிரைவர், "ஆபீஸில் ஆடிட் நடக்குதுங்க" என்று சொன்னதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை "ஆடிட்டர்" அவனுக்கு ரொம்பவும் வேண்டியவர். "கிம்பிசமான" ஒரு தொகையைத் தனியாக அவனிடம் பெற்றுக் கொள்பவர். அவன் திருவிளையாடல்களை அரங்கேற்றம் செய்ய மாட்டார்.

வீடு திரும்பியதும் அவனை எதிர்கொண்டழைத்தது டெலிபோன். பேசியது அவன் நண்பர் ஆடிட்டர்தான். குரலில் பதற்றமும், அவசரமும் தொனித்தன.

"தங்கள் "பார்ட்னர்" விழித்துக் கொண்டுவிட்டார். இந்த வருஷம் "ஆடிடிங்" செய்ய என்னைக் கூப்பிடவில்லை. "மோகன் அண்ட் குமார்" கம்பெனியிலிருந்து வந்திருக்கிறார்கள். போன வருஷம் மட்டும் இல்லை... இதற்கு முந்தைய மூன்று வருஷங்களையும் கூட மறுபடி சரிபார்க்கச் சொல்லி இருக்கிறார்கள்..."

துரைக்கு அந்த "ஏர்கண்டிஷண்ட்" அறை வியர்த்தது.

பன்னிரண்டு வருஷங்களுக்கு முன் அந்தக் கம்பெனியை ஆரம்பித்த போது அவன் தோழன் ஸலீமிடம் பணம் இருந்தது. புத்திசாலித்தனம் இல்லை. இவனிடம் பணம் இல்லை. சாமர்த்தியம் இருந்தது.

அவனுடைய பணமும் இவனுடைய மூளையும் சேர்ந்து ஆரம்பித்த வியாபாரம் இன்று ஆலமரம் போல் தழைத்தது. ஸலீம் அவனைத் தன் கூட்டாளியாக்கி வியாபாரத்தில் வரும் லாபத்தில் பாதிப் பங்கை அளித்துவந்தான்.

மேற்கு மாம்பலத்தில் ஒண்டுக் குடித்தனம் இருந்த துரைக்கு இப்போது அசோக் நகரில் மூன்று வீடு இருக்கிறது. பெரிய பிள்ளை அமெரிக்காவில் மானேஜ்மெண்ட் படிக்கிறான். பெண்ணிற்குப் பெரிய இடத்தில் கல்யாணம் செய்து கொடுத்தாகிவிட்டது.

நியாயமாக அவனுக்குச் சேர வேண்டிய லாபம், சம்பளத்தைத் தவிர்க் குறுக்குவழி




யில், சில ஆட்களைத் தன் கைக்குள் போட்டுக் கொண்டு, துரை சுருட்டியது பல இலட்சங்கள்.

ஸலீமுக்கு யார் இதைச் சொல்லியிருப்பார்கள்? எதற்காக மறுபடியும் தணிக்கை?

இப்போது "ஆடிட்" செய்ய வந்திருக்கும் "மோகன் அண்ட் குமார்" நேர்மைக்கும் திறமைக்கும் பெயர் பெற்றது. எந்த மூலையில் சிறு கடுகளவு தவறு இருந்தாலும் அவர்கள் கவனத்திற்குத் தப்பாது.

துரை தப்பிக்க ஒரே வழி—அவர்கள் தங்கள் அறிக்கையைத் தாக்கல் செய்யுமுன் ஸலீமை ஒழித்துக் கட்டிவிட வேண்டும். அந்த அறிக்கையில் காணப்படும் குற்றங்களுக்கும், தவறுகளுக்கும் அவனையே பொறுப்பாக்கிவிட வேண்டும்.

ஸலீமை இப்போது போனில் கூப்பிட வேண்டுமே!... எங்கு வெளியே போனாலும், திரும்பிச் சென்னை வந்தவுடன் ஒருவரையொருவர் கூப்பிட்டுப் பேசுவது வழக்கமாயிற்றே. துரை டெலிபோன் நம்பர்களைச் சுழற்றினான்.



காதலி: இன்னும் எப்பத்தான் உங்கப்பர் நம்ம கல்யாணத்துக்குச் சம்மதிப்பார்?

காதலன்: எங்கப்பாக் கல்யாணத்துக்கு அவர் மாமனார் எப்ப சம்மதிக்கறாரோ, அப்போ!

ஸலீம் வீட்டில் இல்லை... அவன் பெண் தான் பேசினாள்... "வாப்பா பம்பாய் போயிருக்கிறார்... எங்கள் சின்னத் தாத்தா இந்த வருஷம் "ஹஜ்" போகிறாரில்ல... வழி அனுப்பத்தான்... இ ன் னி க் கு க் காலை "பிளேன்"லே திரும்பிடுவாரு..."

"அப்படியா...? மீனம்பாக்கம் போய்க் கூட்டிவரக் கார் அனுப்பிவிட்டாயா?" என அக்கறையோடு கேட்டான் துரை.

"இல்லை... அங்கிள்...! எங்கள் கார் ரிப்பேர்...! உங்களைக் கூப்பிடலாம் என்று நினைத்தேன்... நீங்களே "போன்" செய்து விட்டீர்கள்!" என்றாள் ஸலீமின் பெண்.

"நீ கவலைப்படாதே!... நான் பார்த்துக் கொள்கிறேன்!" என்ற துரையின் மூளை வெகு துரிதமாக வேலை செய்தது.

துரை ஏதோ தீர்மானத்திற்கு வந்தவனாகக் கீழே இறங்கி "கார் ஷெட்"டிற்கு வந்தான். அங்கே டிரைவர் "சோமு" காருக்குப் "பாலிஷ்" போட்டுக் கொண்டிருந்தான்.

"என்னப்பா சோமு! நீ சாப்பிட்டாகி விட்டதா?" என்று பரிவுடன் விசாரித்தான் துரை.

"இல்லே, ஸார்!"

"பெரிய முதலாளியைக் கூட்டிவர வண்டி மீனம்பாக்கம் போக வேண்டும். நீ போய்ச் சாப்பிட்டுவிட்டுச் சீக்கிரமாய்த் திரும்பி வா!" என அவனை அனுப்பினான்.

சோமு புறப்பட்ட ஐந்தாவது நிமிஷம் துரை காரை எடுத்துக் கொண்டு தானே புறப்பட்டான்.

"எனக்கு ஆபீஸில் வேலை இருக்கிறது... சோமு வந்தால் பஸ்ஸில் மீனம்பாக்கம் வரச் சொல்! நான் அங்கே காத்திருக்கிறேன்!" என்று தோட்டக்காரனிடம் கூறிவிட்டுப் புறப்பட்டான் துரை.

சோமு அவசரம் அவசரமாகச் சாப்பிட்டு, பஸ் பிடித்து விமான நிலையம் வந்த போது, துரை அங்கே காத்திருந்தான். "பம்பாய் விமானம் ஒரு மணி நேரம் தாமதம். நான் 'டாக்ஸி'யில் போகிறேன்... நீ இருந்து பெரிய முதலாளியைக் கூட்டிவா!" என அவசரமாக நகர்ந்தான் துரை.

சோமு தலை அசைத்தான்.

அவன் அறியாதது ஒன்று. துரை வழியில் வண்டியை நிறுத்திக் காருடைய "பிரேக்" — நிறுத்தும் விசையை — வெகுவாகத் தளர்த்திவிட்டு இருந்தான். இன்னும் ஒரு முறை இரு முறை தாங்கும். அப்புறம்..?

எப்போதும் ஸலீம்தான் வண்டியை ஓட்டுவான்... டிரைவர் இருந்தாலும் கூட. அதுவும் வெகு வேகமாகத்தான்...

துரை டாக்ஸியில் போய்க் காத்திருந்தான் — அந்தச் செய்திக்காக.

மணி பதினொன்று.

டெலிபோன் மணி அடித்தது.

பேசியது ஸலீம்!

துரைக்குப் பேரதிர்ச்சி. எப்படித் தப்பித்தான் அவன்?

"துரை... உன் மனத்தைக் கல்லாக்கிக்க.. நம்ம வண்டி வர்றப்போ "பிரேக்" பிடிக்காமே பல்லவன்லே மோதிடுச்சு... சோமு அங்கேயே காலி... நம்ம சேகர்... என்னோட பம்பாயிலேருந்து கூட வந்தான்... திடீர் பயணம்.... உங்கிட்டக் கூடச் சொல்லலியாம்... பிடிவாதமா அவன் தான் காரை ஓட்டிவந்தான்... இங்கே நர்ஸிங் ஹோமில் சேர்த்தவுடன் அடங்கிட்டான்... விலாசம் தர்றேன்... குறிச்சுக்கிறியா...? துரை.... துரை... துரை...!"

துரை பதில் பேசும் நிலையில் இல்லை... அதிர்ச்சியில் உறைந்து போயிருந்தான்.

சேகர்... அவனுடைய ஒரே பிள்ளை... அமெரிக்காவிலிருந்து இன்று பார்த்து இந்த விமானத்திலா திரும்ப வேண்டும்...?

ஆண்டவன் கணக்கில் ஒன்றும் ஒன்றும் இரண்டல்ல—எப்போதுமே!

23

நீர்ப்பண்டம் நான்!

மதாம் தூப்ளேயிடம் சிறிதுநேரம் பேசுவதற்குள் அவள் குணங்கள் வர்மனுக்குப் புலப்படலாயின.

பணத்திலும், பொன்னிலும் நிறைய ஆசை இருந்தது. வேன் ஸானின் வர்த்தக விஷயங்களைப் பற்றி நிறைய விசாரித்தாள் அவருடைய கப்பல்கள் எங்கெங்கேயிருந்து



மோகினித் திருக்கோலம்

வர இருக்கின்றன, என்னென்ன பொருள்கள் வரப்போகிறது எல்லாம் கேட்டாள். எந்தப் பொருளை இந்தியாவில் விற்றால் அதிக லாபம் கிடைக்கும் என்று கேட்டாள்.

பிறகு வேன் ஸானை அருகில் அழைத்து அவர் போட்டிருந்த சங்கிலி, மோதிரம், இவைகளின் நூதனங்களையும், விலையையும் கேட்டுத் தெரிந்து கொண்டாள்.

இடையில், "எனக்கும் இதுபோல ஒன்று வேணும்!" என்று பொதுப்படையாகச் சொன்னாள். கொச்சையாகப் பேசினாலும், தமிழ் நன்றாகப் பேசினாள்.

பிறகு, வர்மனிடம் பேசிக்கொண்டிருந்த போது, "மதாம், எக்ஸ்க்யூஸே மூவா!" (மன்னியுங்கள்) என்று வேன் ஸான் குறுக்கிட்டார்.

பிறகு அழகான பிரெஞ்சில் வர்மனைப் பற்றியும், அவன் தேடி வந்த செஞ்சுகா பற்றியும் கூறினார். வர்மன் தீரசாலி, அபூர்வ திறமைக்காரன். அவனிடம் மதாம் தூப்ளே நல்ல பொறுப்பான காரியங்களையும் கொடுக்கலாம். இந்த இளைஞன் ஒரு பெண் மீது மையல் கொண்டிருக்கிறான். இந்த மையல்தான் அவனைச் சந்தாசாகிப் படை வீட்டுக்குக் கொண்டுவந்து, ஒரு மோசமான நிலையில் சந்தாசாகிப்பையே காப்பாற்றியது. அவர் உயிரைக் காப்பாற்றியதற்கு நல்ல வெகுமதிகள் அளிக்கப்பட வேண்டியவன். இவனுக்கு உதவி செய்து இவனை நம்பிக்கையில் வைத்திருந்தால் விலை மதிப்பில்லாத சேவைகளை அவனிடமிருந்து பெறலாம்.

இத்தனை விஷயங்களையும் பரபரவென்று கூறிவிட்டு, அவசரமாக அவர் போக வேண்டியிருப்பதாக மதாமிடமிருந்து விடை பெற்றுப் போய்விட்டார்.

அவர் போன பிறகு மதாம் தூப்ளே வர்மனை மேலும் மதிப்போடு பார்த்து, "உட்காருங்கள்" என்று பானம் கொண்டு வந்து தரச் சொல்லி உபசரித்தாள்.

ஒரு கூப்பில் அது மது என்று தெரிந்ததும் வர்மன் வைத்துவிட்டான்.

"தம்பி! உனக்கு நான் என்ன செய்யணும் சொல்லு! செய்யறேன். வேன் ஸான் ராஜ் அவ்வளவு சொல்லிவிட்டுப் போய்விட்டாரே!" என்றாள்.

வர்மன் சிறிதுநேரம் தயங்கினான். மதாம் மேலும் வற்புறுத்தவே, அவன் செஞ்சுகாவைப் பற்றிக் குறிப்பிட்டான்.

"ஓ! அந்தச் சின்னப் பொண்ணு! கார்வேட் ராஜா பொண்ணு!"

"ஆமாம்!" என்று பாய்ந்து சொன்னான் வர்மன்.

"நம்ப ஊர்லே தான் இருக்கா! நம்ப துரை (தூப்ளே) தயவிலேதான் இருக்கா! நவாப் அனுப்பிச்சு வச்சிருக்கார்" என்றாள் மதாம்.

"எங்கே இருக்கிறாங்க?"

"நெல்லித் தோப்பு பங்களாவிலே."

"நான் அவங்களை உடனே பார்க்கணும்."

"கொஞ்சம் இருங்க!"

மதாம் மணியைத் தட்டினாள். சிப்பந்தி ஒருவன் ஓடி வந்து வணங்கினான்.

"நாராயணனைக் கூப்பிடு."

நாராயணன் இளவயதுக்காரன். குடுமி வைத்து மேலே சட்டை போட்டிருந்தார். கீழே பஞ்சகச்சம். மதாம் தூப்ளேயின் துபாஷி அவன்.

"இந்தா நாராயணா! இவர் நமக்கு ரொம்ப வேண்டியவர். கார்வேட் ராஜா மகளை இவர் பார்க்கணும் என்கிறார். ராஜாவே



ஸ்ரீவேணுகோபாலன்

அனுப்பியிருக்கார். நீ ரங்கப்பிள்ளைகிட்டே போய்ச் சொல்லி ஏற்பாடு செய்யணுமே!''

''இதோ போறேன், மதாம்!''

ஏற்பாடு முடிவதற்குள் சாயங்காலம் ஆகிவிட்டது. நாராயணன் தகுந்த பாதுகாப்போடு வர்மனை நெல்லித்தோப்புப் பங்களாவுக்கு அனுப்பி வைத்தான்.

புதுச்சேரியின் நேர் குறுக்கும், நேர் நெடுக்கும் செல்லும் தெருக்களைப் பார்த்தவாறு வர்மன் சென்றான். பல்லக்கு மட்டுமின்றி தெருவில் குதிரைகள் இழுத்த ஷார்தேக்களையும் (சாரட்டு) மனிதர்கள் பின்னாலிருந்து தள்ளிய ஷார்தேக்களையும் பார்த்தான். விசித்திரமான உடைகளில் சில பிரெஞ்சுப் பெண்கள் நல்ல வெளுத்த நிறத்தில் ஆங்காங்கு தென்பட்டார்கள்.

நெல்லித் தோப்பு அரியாக்குப்பம் ஆற்றின் வடகரையில் இருந்தது.

ரங்கப்பிள்ளை வழங்கிய உத்தரவுக் காகிதத்தைக் காண்பித்த பின்னரே அவனை உள்ளே அனுமதித்தார்கள்.

தோப்புச் சூழ்ந்த பெரிய மாளிகை அது. சுற்றிவர பிரெஞ்சுக்காரரும் இந்தியர்களும் காவல் புரிந்து கொண்டிருந்தார்கள்.

உள்ளே மாளிகை முகப்பில் அவனைச் சோதனை செய்து உள்ளே பெரிய கூடத்தில் உட்கார்த்தினார்கள்.

மெள்ள இருட்டத் தொடங்கிய நேரம் அது. காற்று எங்கும் சில்லிட்டுக் கிடக்க, அந்தப் பிரதேசமே நிசப்தமாக இருந்தது.

கூடத்தில் கண்ணாடிக் கூண்டுகளுக்குள் மெழுகுவர்த்திகள் எரிந்தன.

உருக்கிய தங்கம் போல ஒரு பொன் வெளிச்சம் கூடத்தில் பரவியிருந்தது.

ஓரங்களில் கிடந்த தூபச் சட்டிகளிலிருந்து மென்மை மணத்தில் புகை சூழ்ந்த வண்ணம் இருந்தது.

ஏதோ காலடிகளைக் கேட்க, ஆவல் கொந்தளித்துத் திரும்பினான்.

எதிரே உப்பரிகை போலக் கட்டுமானத்தில் ஒரு கதவு போன்ற வாசல் திறந்தது.

அதன் உள்ளிருந்து வந்த உருவத்தைக் கண்டதும் அவன் மூச்சு ஸ்தம்பித்தது. உள்ளே எழுந்த உணர்ச்சித் ததும்பலில் கண்ணால் சரியாகப் பார்க்க இயலவில்லை. உருவம் சிதறிக் கொண்டு தெரிந்தது.

''வீரரே!'' என்றாள் அவள். நடுக்கத்துடன் மெள்ள எழுந்தான். இன்னும் உணர்ச்சிகள் சீராகவில்லை. உருவத்தை நோக்கி, ''செங்கா!'' என்றான். நாத் தழுதழுப்பில் வார்த்தை சிலும்பியது.

அவள் அந்த வெளி விளிம்பு வரை வந்தாள்

கூடத்து ஒளி தங்க ரேகைகளாக அவள் மீது விழுந்தன.

மெல்லிய பால் கட்டி போல் வதனம் துலங்கியது. இருள் போன்ற கூந்தல் இரு பக்கமும் வழிந்தது. சின்ன முத்துக்கள் போல் புன்னகைகள் உருண்டன.

மெய்மறக்க அவளைப் பார்த்தான்.

கண்கள்தான் அவன் கண்களில் லயித்தன. அந்த லயிப்பில் ஆன்ம லயிப்பே ஏற்பட்டது. உடல் மயமான கோசம் எல்லாம் மறந்து வெறும் எண்ண சொரூபனாக மட்டும் இருப்பதாகத் தோன்றியது.

ஒரு அமிர்தக் கடலில் மிதப்பது போலத் தோன்றியது.

''வீரரே!''

இரண்டாம் முறை அழைக்கவும் அவன் நினைவுகள் தரைதட்டின.

இன்னும் நீர்த்திவலைகளில் பட்டு அவள் உருவம் சிதிலமாகத் தெரிந்தது.

கொட்டிக் கொட்டிக் கண்ணீர்களை உள் வாங்கினான்.

கடைசியில் பார்த்த போது ஒரு வன தேவதைபோல் புத்தம்புது வனப்பில் அவள் தெரிந்தாள்.

சந்திரக் கதிர் போல் முகம்.

சுனைச் சுழிகள் போல் விழிகள்.

பிறப்ப ஜயந்து நிலா போலச் சற்றே வெளிறியிருந்தாள்

இடுப்பு ஒரு சேர்பையான மெலியலில் இருக்க.

கண்கள்! அவை கண்களா!

இரண்டும் கவிதைகளாக இருந்தன.

இப்போது காவியங்களாகித் துள்ளலும் சிருங்காரமுமாய்க் காட்சி அளித்தன.

"இளவரசி செளக்கியமா?"

குரல் விம்மியது.

"செளக்கியந்தான் வீரரே!"

"நானோ தாபத்தில் எரிகிறேன் இளவரசி! உங்கள் தந்தையார் என்ன பாடு படுவாரோ?"

"பட்டபாட்டார் வீரரே! மனம் இசைந்து தான் அனுப்பியிருக்கிறார்கள்!"

"இன்னும் எத்தனை நாள் பிரிந்திருப்பார்கள்?"

"ஏழுமலையான் தீர்மானிக்கும் வரை!"

"எப்போது தீர்மானிப்பார்?"

"அசோகவனத்துப் பிராட்டியை அவர் நினைத்தால் ஒரு கணத்தில் கொண்டு வந்திருக்கமாட்டாரா? இருந்தாலும் இந்த உலகத்தின் நியதிக்கு ஏற்பப் பெற வேண்டும் என்று நினைத்து அல்லவா பொறுமையாக அத்தனை சம்பவங்களையும் நிகழவிட்டுக் காத்திருந்தார். அந்தப் பிராட்டியின் விடுதலையே அத்தனை காலம் கழிந்து வந்த போது இந்தப் பிராட்டியின் விடுதலைக்கு அதற்குள் என்ன அவசரம்!"

அவள் வார்த்தைகள் அவன் மனத்தை எங்கேயோ தைத்தது.

கண்களில் நீர் ஸ்படிகங்கள் ததும்பி உருண்டன.

"இன்னும் சொல்லுங்கள்! நான் தங்களுக்காக..." என்று மேலே போக இயலாமல் பிறழ்ந்தான் அவன்.

"வீரரே! எனது லிகிதம் கிடைத்ததோ!" என்றான் அவன்.

"கிடைத்தது இளவரசி! அதை வாசித்து ஆனந்தப் பரவசத்தில் இருக்க வேண்டியவன் இப்படிச் சோக சாகரத்தில் இருக்கிறேன் இளவரசி!"

"ஆனந்தங்களின் விளிம்புகள் எல்லாமே சோகங்கள்தான் வீரரே!"

"இளவரசி...!" மேலே பேச முடியாமல் தத்தளித்தான்.

"சொல்லுங்கள் வீரரே!" என்றாள் முகிழ்நகை.

"நீங்கள் எப்படித் தனியாக இருக்கிறீர்?" மனைந்தவாறு வினவினாள் அவள்.

அவள் கண்களில் பாஷ்பம் மினுத்தது.

"நான் எப்படி இருக்கிறேனோ, நீராக இருக்கிறேன்!" தழுதழுத்தாள் அவள்.

"நீராகவா?"

"ஆமாம்! நீராகத்தான்! நீர்ப் பண்டமாக!"


"நீர்ப் பண்டமா?" விழித்தான் அவன்.

"ஆமாம், வீரரே! நீர்ப் பண்டம் ஒன்று இருந்தால் அதன் தன்மை என்ன தெரியுமோ?"

நிறுத்தினாள்.

பிறகு அவளே தொடர்ந்தாள்.

விழிகளை விரிவாக்கி அவனை நோக்கி "திருவாய்மொழியை அநுபவிப்பார் கதி தெரியுமோ, வீரரே!" என்றாள்.



"இளவரசி! நான் அதிசய [illegible]வன் அல்ல!"

"கேளுங்கள் வீரரே! 'தென் குருகூர்ச் சடகோபன் சொல் ஆயிரத்துள் இவை ஒன்பதோடு ஒன்றுக்கும் மூவுலகும் உருகுமே!' இது நம்மாழ்வார் சொல்! திருவாய்மொழியை அனுபவிக்க முனைந்தவர் நீர்ப் பண்டமாக உருகுவார்கள்! நானும் இங்கே நீர்ப்பண்டம்தான்! ஆனால் ஆழ்வாரோ அடியாரோ போன்று அருள் பெற்றவள் அல்ல! வெறும் சிறியவள்! அதனால் நான் உருகுவது உலகைக் கடந்தவனுக்கு அல்ல! உலகுக்குள்ளே அமிழ்ந்து, அதன் இன்ப துன்பங்கள் ஏற்ற இறக்கங்கள் இத்தனையிலும் தத்தளிக்கும் பாமர மயமான ... வீரரே ஏன், தவிக்கிறீர்கள்!... உங்களைப் பற்றித்தான்!"

சொல்விழவும் அவள் கண்கள் உடைந்து அருவித் துமளியாய் வழிய, கைகளில் முகத்தை மறைத்துக் கொள்ள,

"இளவரசி! இளவரசி!" என்று பொருமலாய்ச் சொல்லிச் செய்வதறியாது திகைத்தான் அவன்.

அவனது மனத்தின் நினைத்தறியாத பகுதியை எல்லாம் அவள் சொற்கள் தொடுவது போலத் தோன்றின.

வார்த்தைகள் சொல்ல முடியாமல் தத்தளித்தான். கடைசியில், "இளவரசி! இளவரசி! என் மனம் அமிர்தமாய் நிரம்புகிறது. தங்களுக்கேதான் இந்த வாழ்க்கை! என்ன வேண்டுமானாலும் உத்தரவு இடுங்கள்! செய்து முடிக்கிறேன்!" என்றான் அவன்.

சிறிது நேரம் மௌனம் சூழ்ந்தது.

இருவரும் தங்கள் தங்கள் கண்ணீரை வழிப்பதிலும், உணர்ச்சியை நிலைப்படுத்துவதிலும் நேரத்தைப் போக்கினார்கள்.

கடைசியில், "வீரரே!" என்றாள் செங்கா. அவள் குரல் கனத்திருந்தது. "என் வாழ்வுக்கு ஏது தனி ஆசை! சிந்துவின் ஆசைதான் என் ஆசை! அதை முதலில் நிறைவேற்றுங்கள்! மற்றவையெல்லாம் 'புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்' போன்றவை, தானே நிறைவேறும்!" என்றாள்.

பிறகு இருவரும் தங்கள் தங்களுக்கு நடந்தவைகளைப் பற்றி விவரித்துக் கூறினார்கள். ஒருவர் பட்ட கஷ்டத்திற்காக மற்றவர் அனுதாபப்பட்டார்கள். பேசும் பேச்சினாலேயே மனங்கள் இதம் அடையச் சீக்கிரம் ஒரு சகஜ நிலைக்கு வந்தார்கள்.

இரவு திரும்பும்போது வர்மனுக்கு இன்பமும் இருந்தது. துன்பமும் இருந்தது. சத்திரத்துக்கு வந்து உணவு அருந்தியதும், சிந்து வந்து அவனை அவசரமாக அழைத்துப் போனான்.

கிழக்குக் கோட்டைப்புறம் சென்று ஒரு கட்டடத்தில் நுழைந்து அதன் பாதாளப் படிகளில் தீவர்த்தி ஏந்தி வர்மன் இறங்கும் போது, சிந்து அவனைப் பின்தொடர்ந்தான்.

சட்டென்று நின்றான் வர்மன். "அம்மணி! இது என்ன இடம்?" என்றான்.

(தொடரும்)



சிறை வாசம்!

1944 — ஆம் ஆண்டு. காலை 9.50—க்குச் சரித்திரம் — பூகோளம் பரீட்சைக்கான வினாத்தாள் (ஆங்கில மீடியம்) வினியோகிக்கப்பட்டது. ஆனால் எங்கள் கரங்களில் இருந்ததோ தெலுங்குப் பரீட்சைக்கான வினாத்தாள்! விஷயமறிந்ததும் அதிகாரிகள் கேள்விகளை அம்பலப்படுத்திவிடுவோமோ என்பதால் எங்கள் அனைவரையும் ஓர் அறையில் பூட்டி வைத்துவிட்டனர்! இந்த வினாத்தாள் போக வேண்டிய இடத்துக்குப் போய்ச் சேர்ந்து எங்களுக்குரிய வினாத்தாள் வந்து சேரும் வரை சுமார் மூன்று மணி நேரத்துக்குச் சிறைவாசம்!

எம். சுப்பிரமணியம், மதுரை.


நடுக்கம்!

நான் எஸ். எஸ். "எல்.-ஸி. தேர்வு எழுதிய போது என் வகுப்பு சகோதரி ஒருத்திக்குப் பயத்தில் உடல் நடுங்க ஆரம்பித்துவிட்டது. அந்த 'டெஸ்க்' கால்கள் சற்று ஏற்றமும் இறக்கமுமாக இருந்ததால் அவள் உடலோடு டெஸ்க்கும் கடகடவென்று ஆட ஆரம்பித்தது. அதே டெஸ்க்கில் பரீட்சை எழுதிய எனக்குத் தர்ம சங்கடமாய்ப் போயிற்று. நல்லவேளை, கண்காணிப்பாளர் ஒரு பெண்மணியாக இருந்தார். சிறிது நேரம் சென்று நிலைமை உணர்ந்த அவர் சகோதரியைத் தட்டித் தடவிக் கொடுத்துத் தைரியமூட்டினார். அப்புறம் தான் என்னால் பரீட்சை எழுத முடிந்தது!

ஆர். பரமேசன், திருமலையடி

பகிர்ந்தளிக்க வேண்டிய பரிசு!

செய்முறைப் பரீட்சையில் என்ன முயன்



றும் தயாரிக்க வேண்டிய பொருள் சரியாக வரவில்லை. மனமுடைந்து போனேன். படிப்பில் என்னுடன் போட்டி போட்ட சக மாணவர் மனமிரங்கி மற்றவர்களிடமிருந்து சிறிது சிறிதாக வாங்கி மொத்தமாய் என்னிடம் தர அதைச் சமர்ப்பித்துவிட்டேன். வகுப்பில் முதலாவதாக வந்து ராஜா சர் அவர்களிடம் பெற்ற பரிசைப் பார்க்கும் போதெல்லாம் இது வகுப்பு மாணவர் பலருக்கும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய பரிசல்லவா என்ற எண்ணம் நன்றி கலந்து எழும்.

ஆர். தமிழரசி, மதுரை.

ஆணா பெண்ணா?

ஹிந்தி பரீட்சை எழுதிய போது ஹாலில் என்னைத் தவிர மற்ற அனைவரும் ஆண்கள்.



எனக்குப் பரீட்சை எழுதவே ஓடவில்லை. போதாக் குறைக்கு மேற்பார்வையாளர் வந்து, என் பெயரை உரக்கப் படித்துவிட்டு, 'ஓ! உன் பெயர் ஆண் பெயர் போல் இருப்பதால் தவறுதலாக உனக்கு இந்த ஹாலில் இடம் ஒதுக்கிவிட்டார்கள் போலிருக்கிறது!' எனவும் கொல்லென்று கூடத்தில் சிரிப்பு அலை! நான் நெளிந்து, குனிந்து கால் மணி நேரம் சென்ற பிறகு எப்படியோ பரீட்சை எழுதி முடித்தேன்.

எஸ். திருவேங்கடம், தென்காசி

பத்தாம் வகுப்பில் இரண்டாம் ஆண்டு.

பத்தாம் வகுப்பு இறுதிப் பரீட்சை. மளமளவென்று நான் விடை எழுதும் போது பின்னாலிருந்த சக மாணவன் என் விடைத்தாள் கேட்டுக் கெஞ்சினான். பரிதாபப்பட்டு நான் தர, அவன் திருப்பித் தந்தபோது மணியடிக்கும் நேரம் நெருங்கிவிட்டது. அவசரத்தில் அவன் தன் விடைத்தாளை என்னிடம் தந்துவிட நானும் பரபரப்பில் என் நம்பரை அதில் எழுதிவிட்டேன். நான் கவனிக்காததை விடைத்தாள் திருத்திய ஆசிரியர் கவனித்துவிட, இரண்டு பேருக்கும் மேலும் ஓர் ஆண்டு அதே வகுப்பு வாசம்.

பி. வேணுகோபால், சென்னை—34.

பரீட்சை ஹாலில் பெண் பார்த்த படலம்

காலையில் என்னைப் பெண் பார்க்க வருவதாய் இருந்தவர் தாமதிக்கப்பட்டார். எனக்கோ எஸ். எஸ். எல். ஸி. பரீட்சை

பரீட்சை அனுபவம்

வாசகர் பங்கு



கோட்டைவிட மனமின்றிக் கிளம்பி
ன். மனக்கிலேசத்தில் ஹால் டிக்
மறந்துவிட்டேன். வெளியேற்றி
கள். கையைப் பிசைந்துகொண்டு
போது 'அவர்' ஓடோடி வந்தார்.
பார்க்க வந்த இடத்தில் ஹால் டிக்
டப் பார்த்தேன். எடுத்துக்கொண்டு
பிடித்துப் பறந்து வந்தேன்' என்றார்.
றி ஏறிட்டேன். 'இங்கேயே பெண்
விட்டேன் ஓ.கே.' என்றார். புல்லரிப்
ரீட்சை எழுதினேன்!

உஷாதேவி, பட்டம்பாளையம்.

லை தூக்கம்

மகன் வகுப்பில் எப்போதும் இரண்
ராங்க். முதல் ராங்கில் வரச் செய்ய
ம் என்பதற்காகக் காலை ஆறு
க எழுப்பிப் படிக்கச் சொன்னேன்
லவு பரீட்சை ஹாலில் தூங்கிவிட்
ராங்க் குறைந்து போயிற்று. அன்று
ணவர் எனக்கு விட்ட டோஸில்
அதன்பிறகு அவன் போக்கில் விட்டு
ன். இப்போதும் அவன் வகுப்பில்
ாவது ராங்க்!

எம். சீதாலக்ஷ்மி, பம்பாய்.

நிமிஷ டியூஷன்

எஸ். எஸ். எல். ஸி இறுதித் தேர்வு. பிற்
மட்டுமே பரீட்சைகள். முற்பகலே
சென்று விஞ்ஞானப் பாடங்களை
ஸ்'' செய்து கொண்டிருந்த போது
ஒருவன் சரித்திரப் பரீட்சை என்ற
த்தில் சரித்திரம் படிக்கக்கண்டேன்.
ந்தை உணர்த்தியதும் அலறினன்.
ம் கூறி விஞ்ஞானத்தில் முக்கியமான
ு கேள்விகளுக்குப் பாடம் புகட்டி
அவன் அதிர்ஷ்டம் வினாத்தாளில்
கேள்விகள்! பரீட்சை ஹாலிலேயே
கண்கள் என்னைத் தேடி நன்றி கூறி
வாழ்நாளில் மறக்க முடியாது.

என். பாலு, திருச்சி—18.

முதலில் உருப்போட...?

பத்து மூன்று ஆண்டுகளுக்கு முன்
அமெரிக்கன் கல்லூரியில் பி. எஸ்ஸி
ண்டு கடைசித் தேர்வு எழுதக் கல்லூ
நுழைந்தபோது எதிரே வந்த நண்பன்
டா உன்னைப் பரீட்சை ஹாலில்
காணோம் என்று கேட்டு அன்றைய தேர்வு அப்போதுதான் முடிந்த விவரத்தைத் தெரிவித்தான். எல்லா நாட்களிலும் பிற்பகலில் நடந்த தேர்வு அன்று மட்டும் முற்பகலில் நடக்கும் என்பதை நான் கவனிக்கவில்லை. கண்ணீர் மல்கக் கல்லூரித் தலைவர் சவரிராயன் அவர்கள் முன் நின்றேன். என் தரம் அறிந்த அவர் என்னை மன்னித்து அவ்வாண்டு பிரமோஷன் கொடுத்தார். அன்று முதல் தேர்வுகள் எழுதுவதெனில் பாடங்களை உருப்போடுவதை விட பரீட்சை டைம் டேபிளை உருப்போடுவது முக்கியம் என உணர்ந்தேன்.

டி. விஸ்வநாதன், மதுரை.



பதற அடித்த பின்னல்

வங்கித் தேர்வு எழுதச் சென்றேன். ஒரு நிமிஷத்துக்கு இத்தனை விடைகள் என்று ஒவ்வொருவரும் மும்முரமாக எழுதிக் கொண்டிருந்த போது எனக்கு முன்னலிருந்த பெண், முன்புறம் தொங்கிய நீண்ட ஜடையைத் தூக்கிப் பின்பக்கம் வீச, அது என் மேஜைமீதிருந்த வினாத்தாள், விடைத்தாள், பேனா ஆகிய அனைத்தையும் பெருக்கிக் கீழே தள்ளிவிட, அவற்றைப் பொறுக்குவதில் பல நிமிஷங்கள் வீணாக, திரும்பவும் தேர்வு எழுதும் மூட் வருவதற்குள் போதும் போதும் என்றாகிவிட்டது!

ஜி. கீர்த்திவாசன்; மயிலாடுதுறை.

அன்று மாணவன்; இன்று மேலாளர்

பட்டதாரி ஆசிரியரான நான் அஞ்சல் வழிக் கல்விமூலம் **M.Ed.** படித்துச் சென்ற ஆண்டுத் தேர்வு எழுதச் சென்றேன்



தேர்வு அறை கண்காணிப்பாளரான உதவிப் பேராசிரியரைக் கண்டதும் எனக்குச் சிறு அதிர்ச்சி. அவர் பத்தாண்டுகளுக்கு முன் என்னிடம் பதினோராம் வகுப்புப் படித்த மாணவன்!

மு. பன்னீர்செல்வம், விழுப்புரம்.

கேள்வித்தாளிலேயே விடை!

சமஸ்கிருதப் பரீட்சை எழுதும் போது ஒரு கேள்விக்கு விடை தெரியாமல் சற்று நேரம் விழித்துக் கொண்டிருந்தேன். ஆனால் அந்தக் கேள்விக்கான விடை, மொழி பெயர்க்கப்பட வேண்டிய பகுதியாகக் கேள்வித்தாளிலேயே அச்சாகியிருப்பதைப் பார்த்த போது ஏக குஷி!

ஜி. ராஜேஸ்வரி, சென்னை—88.

கொழுப்பாய் வந்த களிப்பு

விஞ்ஞானப் பரீட்சை. கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்ய வேண்டும். ஒரு விடை தெரியாமல் எதிர் பெஞ்சில் உள்ள பெண்ணிடம் கேட்கலாம் என்றெண்ணி அவள் கவனத்தைக் கவர என் காலால் அவள் காலைத் தேய்த்தேன். சரேலென்று திரும்பி முறைத்து, ''கொழுப்பாடி உனக்கு!'' என்றாள். கோடிட்ட இடத்தில் எழுத வேண்டிய வார்த்தை உடனே நினைவு வந்து விட்டது: கொழுப்பு!

ஜி. சரோஜா, திருவையாறு.

''நவனி, என்னைக் கவனி!''

இளங்கலை வகுப்புப் படிக்கும் போது சக மாணவி நவனி ஸ்டைலாக வருவாள். ஒரு குறும்பன் அடிக்கடி ''நவனி என்னைக் கவனி'' என்று அவள் காதுபடக் கூறிக் கிண்டல் செய்வான். பத்து ஆண்டுகள் சென்று எம்.ஏ. கரஸ்பாண்டன்ஸ் பரீட்சை நான் எழுதிய போது முதல் ஆச்சர்யம், அதே குறும்பு மாணவன் என்னுடன் சேர்ந்து பரீட்சை எழுதினான்! இரண்டாவது ஆச்சர்யம், நவனி எக்ஸாமினராக வந்து சேர்ந்தாள்! மூன்றாவது ஆச்சர்யம், பழைய குறும்புத்தனத்தை அவள் நினைவு வைத்திருந்து, அந்தக் குறும்பன் பரீட்சை எழுதும் போது அருகில் போய் நின்று, ''நன்கு கவனித்து எழுது'' என்று கவனியில் அழுத்தம் கொடுத்துச் சொன்னாள்!

என். பத்மாவதி, சென்னை—26.

''நாளை சேலை உடுத்தி வா!''

பி.எஸ்ஸி. இறுதி ஆண்டுத் தேர்வு எழுதும்போது ஒரு மாணவன் பிட் அடித்து மாட்டிக் கொண்டான். பேராசிரியர் கோபமாக பிட் ஒளிக்கத்தான் சட்டையில் காலரும் பையும் மடிப்புக்களும் உள்ளனவா என்று இரைந்தார். துணிச்சல் மிக்க மாணவன், 'ஏன் ஸார் சேலை மடிப்பிலும், கொசுவத்திலும் ஒளித்து வைக்கப்படும் பிட்களை யாரும் சோதனை போடுவதில்லையே?' என்று திருப்பிக் கேட்டான். பேராசிரியருக்குக் கோபத்தை மீறிச் சிரிப்பு வந்துவிட்டது. கையில் அகப்பட்ட பிட்டைக் கிழித்து எறிந்துவிட்டு, 'நாளை நீயும் சேலையில் வா' என்றார். கூடத்தில் அலை அலையாகச் சிரிப்பொலி!

சௌந்தரா, பங்காருப்பேட்டை

குளமான கண்கள்

எனக்கு முன் வரிசையில் ஒருவர் காப்பி அடிப்பதைக் கண்டு பரிசோதகர் கோபத்துடன் வந்தார். அந்தச் சமயம் பார்த்து என் விடைத்தாள் பறந்து விழவே அது முன் வரிசை நபருடையதெனத் தவறாக எண்ணிச் சுக்கு நூறாகக் கிழித்தெறிந்துவிட்டார். வருத்தத்தில் என் கண்கள் குளமாயின. வேறு வழியின்றிக் கணக்கை மறுபடியும் போட்டேன். இப்போதும் கண்கள் குளமாயின — மகிழ்ச்சியால்! காரணம், இரண்டாவது தடவை போட்டபோது வந்த விடைதான் சரியானது என்பதை உணர்ந்ததால்!

ஜி. நித்யா, திருச்சி—18.

தம்மாத்தூண்டு பிட்

நான் உயர்நிலைப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்த சமயம் பிட் வைத்திருந்த மாணவன் பரீட்சையின் போது அகப்பட்டுக் கொண்டான். அவன் வைத்திருந்த தம்மாத்தூண்டு பிட்டில் எழுதப்பட்டிருந்தவை: இடுப்பு — அலாவுதீன் கில்ஜியின் சீர்திருத்தங்கள்; வலக்கை மடிப்பு — சிந்து சமவெளி நாகரீகம்; இடக்கை மடிப்பு — இரண்டாம் பானிபட் யுத்தம்; காலர் — சிப்பாய்க் கலகம்... இத்யாதி. அதாவது உடையின் எந்தெந்தப் பகுதிகளில் எந்தெந்தக் குறிப்புகள் பிட் வடிவில் பதுக்கப்பட்டுள்ளன என்பதற்குப் பட்டியல்! இதை ஆசிரியர் உரக்க வாசிக்க, எழுந்த சிரிப்புச் சத்தம் தலைமை ஆசிரியரையே தருவித்துவிட்டது!

எம். எம். அஷ்ரப் அலி, மணப்பாறை.

விலங்கியலில் புகுந்த வேதியல்!

சனிக்கிழமை தவறாமல் நடக்கும் வாராந்திரப் பரீட்சை எழுதிவிட்டுத் திங்களன்று கல்லூரி சென்ற எனக்குப் பேரதிர்ச்சி. பரீட்சை எழுதாததற்கு அபராதம் செலுத்துமாறு அறிவிப்புப் பலகையில் முதல்வரின் ஆணை! எத்தனை எடுத்துச் சொல்லியும் யாரும் நம்பவில்லை. எனக்கு அழுகையே வந்துவிட்டது. இரண்டு நாட்கள் கழித்துத்தான் என் வேதியியல் விடைத்தாள் விலங்கியல் விடைத்தாள்களுக்கிடையில் புகுந்துவிட்ட விவரம் தெரிய வந்தது. (இரு துறை மாணவர்களுக்கும் ஒரே இடத்தில் தேர்வு நடத்தியதன் விளைவு.) முதல்வர் அழைத்து முதல் மதிப்பெண் பெற்றதற்குப் பாராட்டியதோடு அபராதத் தொகையையும் திருப்பி அளித்தார்.

டாக்டர் எம். ராமன், மதுரை.

ராகமாலிகா வழங்கும் பட்டுப் புடவையைக் குலுக்கல் முறையில் பரிசாகப் பெறும் அதிர்ஷ்டசாலி:

மு. பன்னீர் செல்வம்,
3, சிவராமன் லே அவுட்.
விழுப்புரம்.

இதோ எளிதில் உபயோகிக்கக்கூடிய ஒரு ஹேர்-டை, மிகமிகக் குறைந்த விலையில்!



கோத்ரெஜ் பவுடர் ஹேர் டை கான்ஸென்ட்ரேட் உங்களுக்காகவே விசேஷமான கலவை முறையில் தயாரிக்கப்படுகிறது.
இந்தியாவில் பவுடர் ஹேர் டை கான்ஸென்ட்ரேட் இது ஒன்றே. இது தானாகவே பரவுகிறது. ஆகவே நீங்கள் சிறிதளவே உபயோகித்தால் போதும்!
மிகமிக முக்கியம், நீங்கள் நம்பமுடியாத அளவுக்கு குறைவான விலையில் இது கிடைக்கிறது!



கலப்பது சுலபம்
இந்தப் பவுடரை சிறிதளவு நீருடன் கலக்கவும். உபயோகிப்பதற்கு இப்போது தயார்.



உபயோகிப்பது சுலபம்
இதை சிரமமின்றி இலேசாகத் தடவுங்கள். தானாகவே ஒரே சீராக, மென்மையாக முடி மீது பரவி விடுகிறது. உங்கள் கேசத்துக்கு இளமையான அழகுத் தோற்றத்தைத் தருகிறது!

இந்தியாவில் தானாகவே பரவும் பவுடர் ஹேர்-டை இது ஒன்றே.



Godrej
பவுடர் ஹேர்-டை கான்ஸென்ட்ரேட்

CLARIAN/GS/11/203 TAM

தரமோ நீங்கள் நாடுவது விலையோ உங்களுக்குப் பிடித்தமானது.

ஆகாச த்ரிசங்க்

பி.வி.ஆர்

11

மாயா இன்னும் சிரித்துக் கொண்டிருந்தாள். அரவிந்தன் தான் உட்கார்ந்திருந்த இடத்தைவிட்டு அசையவில்லை.

தாரக்ராம் அவள் அருகே வந்தார்.

அவர் பேசுவதற்குள் மாயா முந்திக் கொண்டாள்.

''டாடி! டாடி ஒரு ஒண்டர்ஃபுல் நியூஸ்! திஸ் மேன் வாண்ட்ஸ் டு மேரி மீ! ஈஸ் இட் நாட் எ பிக் ஜோக்?''

''இதை வாயிலே போட்டுக்க மாயா!''

''ஐ டோண்ட் வாண்ட் யுவர் பிளடி டாப்ளட்ஸ்! ஐ வாண்ட் டு டாக் டு திஸ் மேன் அண்ட் லாஃப் வித் ஹிம்...''

''ஷ்யூர் டார்லிங் மாயா! யூ வில் டாக் வித் ஹிம்... பட் ஃபர்ஸ்ட் திஸ் ஸ்மால் டாப்ளட்!''

''வேர் இஸ் வாட்டர்? ஹேய், யூ வாண்ட் எ டாப்ளட்? முழுங்கிப் பாரு. அப்புறம் சிரிப்பே வராது... அப்பா மாதிரி உர்ருனு மூஞ்சியை வைச்சுக்கலாம்...''

''எனக்கும் ஒரு மாத்திரை கொடுங்க சார்!'' என்றான் அரவிந்தன். இத்தனை நேரமாக இருந்ததில் அவனுக்கு ஒன்று மட்டும் நன்றாகப் புரிந்தது. மாயாவின் மனம் எத்திசையில் திடீர் திடீரென்று திரும்பிப் பாய்ந்து ஓடினாலும் அதே திசையில் அவனுடனேயே செல்ல வேண்டும். அவள் இன்னும் ஒரு குழந்தை.

''ஸோ யூ வாண்ட் எ டேப்ளட்! குட்! வெரிகுட்... ஹூ இஸ் யுவர் டாக்டர்... ஐ மீன் ஸைக்யாட்ரிஸ்ட்?''

வாய்க்கு வந்த ஒரு பெயரைச் சொன்னான்.

''வீ ஆர் இன் தி ஸேம் போட்! டாடி! ஹி அண்ட் ஐ வில் பி ஸெய்லிங் இன் தி ஸேம் போட்! ஹௌ டு யு லைக் இட்?''

மாயாவின் சிரிப்பு அடங்கவில்லையெனினும் அதனுடைய அழுத்தம் குறைந்திருந்தது.

''மொதல்லே இதைச் சாப்பிடும்மா!''

''ஓ.கே. டாடி... சில சமயத்திலே நீ ரொம்ப போர்... ஹேய், நீயும் போரடிப்பியா?''

''போர் அடிச்சா உனக்குப் பிடிக்காது, இல்லியா மாயா?''

''ஐ ஹேட் இட்...''

''நான் போர் அடிக்க மாட்டேன்!''

''அப்ப என்ன செய்வே?''

''மாயா டார்லிங், இதைச் சாப்பிடும்மா...''

''டோண்ட் இண்டரப்ட்! நான் இந்த மேன் கூடப் பேசிட்டிருக்கேன் இல்லே...? சொல்லு மேன், நீ என்ன செய்வே?''

''உனக்கு எதெல்லாம் பிடிக்குமோ, அதையெல்லாம் செய்வேன்!''

''ராஜம்மா மாதிரிச் செய்வியா?''

''ஷ்யூர்.''

''ராஜம்மா சமைப்பா, டிபன் பண்ணுவா.. அதெல்லாம் நீ செய்வியா?''

''ஓ. யெஸ்!''

''குட்... வெரிகுட்... நீ இன்னிக்கு ராத்திரி சமைச்சுக் காட்டு... நான் சாப்பிட்டுப் பார்க்கறேன்...!''

''ஆனா அதுக்கு முன்னாடி நீ ஒண்ணு செய்யணும், மாயா?''

''வாட் இஸ் இட்?''

''அப்பா தர்ற மாத்திரையை நீ சாப்பிடணும்.''

''நீ கூட சாப்பிடுகிறேன்.''

அரவிந்தன் மறுகணமே இருக்கையை விட்டு எழுந்தான். தாரக்ராமிடமிருந்து மாத்திரையை வாங்கினான். டீப்பாயின் மேல் கண்ணாடி கூஜாவில் நீர் இருந்தது. அரைத் தம்ளர் எடுத்தான்.

''கம் ஆன், மாயா! பீ எ ஸ்போர்ட்...''

''நீயே வாயிலே போடு... ஆ... ஆஹ்..''

மாயா வாயைத் திறந்தாள்.

மாத்திரையைப் போட்ட அரவிந்தன், வாயருகே தம்ளரைக் கொண்டு போய் உதட்டில் பதித்தான்.

''யூ ஆர் ரியலி கிரேட்!'' என்றாள் மாயா மாத்திரையை விழுங்கிய பிறகு.

''தாங்க் யு...''

தூரத்தே நின்று கொண்டிருந்த ராஜம்மா ஒரு தனி சுவாரசியத்துடன் பார்த்து நின்றாள். அவள் மாயாவைக் கண்டோ, அவளுடைய சிரிப்பையும் பேச்சையும் கேட்டோ ஆச்சரியப்படவில்லை. இது நித்திய அனுபவம். அரவிந்தன் அவளை ஆச்சரியத்துக்குள்ளாக்கினான். இந்த இளம் வயதில் இப்படி ஒரு பொறுமையா? இந்தப் பொறுமையில் நூற்றில் ஒரு பங்கு தாரக்ராமுக்கு இருந்திருந்தால் மாயா என்றோ குணமடைந்திருப்பாளே?

அவள் பார்த்துக் கொண்டேயிருக்கையில் மாயா சற்றே தடுமாறுவது தெரிந்தது. கீழே விழப் போகிறாளா? அவள் பயந்த அதே கணம் அரவிந்தன் மாயாவின் தோள்பட்டையைத் தொட்டுச் சோபாவில் உட்கார வைத்தான். இரண்டாவது நிமிடம் மாயா கண்களை மூடினாள்.

''மாயாவை அவ பெட் ரூம்லே கொண்டு போய் விட்டுட்டு வந்துடறேன், அந்து!'' என்றார் தாரக்ராம்.

''எப்படி? அவ தூங்கறாளே?''

''இட் இஸ் நாட் ஸ்லீப்... மருந்தோட மயக்கம்... ஷி வில் வாக்...''

மறுநிமிடம் தாரக்ராம் மாயாவைச் சோபாவினின்றும் தூக்கித் தரையில் நிறுத்தினார். இப்போது அவள் ஆடவில்லை. அசையவில்லை. சிலை போல நின்றாள்.

தாரக்ராம் அவளை லேசாகத் தள்ளியவராய் நடக்க, அவளும் நடந்தாள்.

அவர் மீண்டும் திரும்பி வருவதற்குள் ராஜம்மா பலகாரத் தட்டுக்களுடன் வந்தாள்.

''நமஸ்காரம். நீங்கதானே ராஜம்மா?''

''ஆமாம்.''

''மாயாவுக்கு நீங்க அம்மா மாதிரி போல இருக்கு...''

''வீட்லே வேற யார் இருக்கா? அவர் பாதி நாள் வீட்லே இருக்க மாட்டார்... உள்நாட்லே சுத்தலேன்னா வெளிநாடுகள் நிறைய இருக்கு... எனக்கு மாயா துணை. மாயாவுக்கு நான் துணை.''

தாரக்ராம் வந்தார்.

ராஜம்மா சற்றே ஒதுங்கி நின்றாள்.

''இவ பெரியவளாகி ரெண்டு மூணு மாசத்துக்கு அப்புறம் ஒருநாள் கோமணி பயமும் பீதியுமா வந்தா. மாயா சிரிச்



கண்டே இருக்கான்னு... அப்புறம் ஒருநா சாப்பாட்டு நினைவே இல்லாம கட்டில்லேயே படுத்துண்டு விட்டத்தைப் பார்க்கிறான்னு... இன்னொருநாள் சமைச்சு வைச்ச சாதத்திலே பாதியை அவ ஒருத்தியே சாப்பிட்டுத் தீர்த்தான்னு...''

''அந்து சாப்பிடு... என்றார் தாரக்ராம்.

''ஏற்கெனவே வந்ததும் ராஜம்மா அல்வா வைத்தாள். சாப்பிட்டேன்.. ரொம்ப நன்னயிருக்கு. அதனாலே இன்னொரு துண்டு சாப்பிடறேன்...''

''கொஞ்சம் பொறுத்து மாயாவுக்கும் குடுங்கோ, ராஜம்மா. மயக்கம் அரை மணியிலே தெளிஞ்சுடும்'' என்றார் தாரக்ராம்.

''எனக்கு மாயாவின் கேஸ் ஹிஸ்டரி வேண்டும் சார்!'' என்றான் அரவிந்தன்.

''ஃபைலே இருக்கு...'' என்ற தாரக்ராம், ''அதில என்ன பிரயோசனம்?'' என்று கேட்டார்.

''இப்ப மாயாவை நான் நேர்லே பார்த்துட்டேன்... அவளுக்கு எல்லாம் புரியறது. அதே சமயம் எதுவும் புரியறதில்லே... கோர்வையா ரெண்டு நிமிஷம் பேசினா அசம்பந்தமாப் பத்து நிமிஷம் பேசறா... கல்யாணம்னா என்னன்னு அவளுக்கு இன்னும் தெரியலே. அதனோட ஸீரியஸ்னெஸ்ஸையும் உணரலே.''

''இது மருந்தாலும் மாயத்தாலும் குணமாறவியாதி இல்லே!'' என்றாள் ராஜம்மா.

தாரக்ராம் மௌனமாக இருந்தார்.

''எத்தனாவது வயசிலேந்து மாயா இப்படி இருக்கா?''

''ரொம்ப இண்ட்டரஸ்டிங்கேஸ். எதைப் பார்த்தாவது பயந்து போயிருப்பாளா? இல்லே ஏதாவது பயங்கரமான அதிர்ச்சி தாக்கி இருக்குமா...?'' — அரவிந்தன்.

''அதெல்லாம் இருக்க நியாயமில்லே அந்து... கோமளி பயப்பட்டப்போ, நானும் பயந்திருக்கணும்... முட்டாள் தனமாக் கொஞ்சம் உதாசீனமா இருந்தேன்...''

''சின்ன வயசிலே சில பெண்கள் இப்படி இருப்பா... டாக்டர் கிட்டே போனா இங்கிலீஷ்லே என்னவெல்லாமோ சொல்லி நம்மைப் பயமுறுத்துவா!'' என்ற ராஜம்மா, ''ஏதானும் கெட்ட காத்து வீசினால்கூட இப்படி ஏற்படறதுண்டு. சோத்தாணிக்கரை பகவதி நடையிலே ஒரு மண்டலம் இருந்தால் போதும்... யாருக்கு வந்ததுன்னு போயிடும்.'' என்றாள்.

தாரக்ராம் ராஜம்மாவை ஒரு தடவை பார்த்து, தாம் அவளுடைய கருத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என்று உணர்த்திவிட்டு அரவிந்தன் பக்கம் திரும்பினார்.

''நான். தெய்வத்தை நம்பறவன்தான் அந்து... ஆனா ஒவ்வொருத்தர் ஒவ்வொண்ணு சொல்றா. குணசீலத்துக்குப் போன்னான் ஒருத்தன்... ஏன் சோளிங்கரை மறந்து போனேன்னு கேக்கறான் இன்னொருத்தன். சரின்னு நானும், கோமளியும் இந்த இடங்களெல்லாம் எப்படி இருக்குன்னு தெரிஞ்சுக்க, மாயாவை இங்கே இவகிட்டே விட்டுட்டுப் போய்ப் பார்த்தோம்... எங்களுக்கே பயமாயிருந்தது...''

''ஏன்?''

''சோளிங்கர்லே, கோவில் நடையிலே பத்துப் பன்னிரண்டுப் பெண்கள் தலையைச் சுழற்றிச் சுழற்றி அசுர வேகத்திலே உட்கார்ந்தபடியே ஆடறா! மூக்கு மயிரிழையில் தரையைத் தொடாம இருக்கு. இந்த டீம் ஆடி ஓய்ஞ்சப்புறம் இன்னொரு டீம் தயாரா இருக்கு ஆடறதுக்கு... குணசீலத்திலே மனப்பிராந்தியோட திரியறவாளைக் கண்டா எனக்கு அனுதாபமும் அதேசமயம் ஒரு பயமும்தான் உண்டாச்சு. சிலதுகளை இரும்புச் சங்கிலியாலே கட்டிப் போட்டிருக்கா. அதுகள் இரும்புக் கனம் கூடத் தெரியாமே ஒதுங்கி உட்கார்ந்து தீபாராதனையைப் பார்க்கிறது... இதுகள் மத்தியில் மாயா போனால், நிச்சயமாக அவளுக்குக் குணமாகாது... வியாதி மேலும் முத்திடும்!''

''நானும் ஒரு விஷயத்தில் உங்களைப் போலத்தான் சார்... அதாவது நம்ப யத்தனத்தை விடக் கூடாது... ஆனா அதே சமயத்தில் நமக்கு உதவி அளிக்கத் தெய்வத்தையும் அழைக்கணும்... பிரார்த்தனை நிச்சயமா மனத்தென்பையும் பலனையும் தரும்.''

''இன்னும் ரெண்டு போண்டா போட்டுக்குங்கோ!'' என்றாள் ராஜம்மா. அவளுக்கு அவனுடைய கொள்கை பிடித்துவிட்டது.

''போதும்.''


''இதோ காப்பி கொண்டு வரேன்.''



''யானையை அடித்து உருட்டிக் கொண்டு ஓடவல்ல நீர்ப் பெருக்கு, சிறு மீன் அதனை எதிர்த்து நீந்துவதற்கு இடம் கொடுக்கிறது. ஏனென்றால், அச்சிறுமீன் தன்னையே கதியென்று நம்பியிருக்கிறது. அதுபோன்று கல்நெஞ்சம் படைத்த கொலை பாதகனும், தன்னிடம் முழு நம்பிக்கை வைத்து அடைக்கலம் புகுபவர்க்கு உதவிகள் புரிவான்.''

—ஸ்ரீ சாரதா தேவியார்.

—செல்வி. வீ. ரெங்கம்.



''இவ்வளவு நாளா எங்க வீட்டில் கடியாரம் இல்லாமே ரொம்ப அவஸ்தைப் பட்டோம்...''

''இப்போ கடியாரம் வாங்கிட்டியாக்கும்...?''

''இல்லே... கடியாரக் கடைக்கு எதிரில் வீடு மாறிட்டோம்!''

ராஜம்மா மறைந்ததும் அரவிந்தனே ஆரம்பித்தான்.

''சார், நான் மாயாவைக் கல்யாணம் பண்ணிக்கிறதுன்னு முடிவு செய்துவிட்டேன்...''

''தாங்க்ஸ்ப்பா... ரொம்பத் தாங்க்ஸ்... உன் அம்மா அப்பாவும் என்னோட கோமளியும் ஆனந்தக் கண்ணீர் வடிப்பா... உலகமெல்லாம் மழையாக் கொட்டும்...''

''நான் செத்துப் போனவங்களோட ஆத்மாக்களைக் குளிர வைக்க இந்த முடிவு எடுக்கலே. ரெண்டு காரணம்.

அவன் சொல்ல ஆரம்பிப்பதற்குள் காப்பி வந்தது.

''ராஜம்மா, நீங்க போய், மாயாவுக்கு ஸ்வீட்டும் போண்டாவும் குடுங்கோ!'' என்றார் தாரக்ராம். அவள் வந்ததே இடையூறாகப்பட்டது.

''இதோ.''

அவள் நகர்ந்து உள்ளே சென்றாள்.

தாரக்ராம் அரவிந்தனுக்காகக் காத்திருந்தார். அவன் காப்பியைப் பார்த்தானே தவிர, குடிக்க முற்படவில்லை.

''முதல் காரணம். நான் என்னுடைய படிப்புக்கும் இன்றைய நிலைக்கும் உங்களுக்குக் கடன்பட்டிருக்கிறேன்... மாயாவை மனத்தில் வைத்துக் கொண்டுதான் ஆரம்பத்திலிருந்தே என்னை ஆளாக்கும் திட்டத்தில் இறங்கியிருக்கிறீர்கள். இருந்தாலும்..''

''ஷட் அப்!'' என்றார் தாரக்ராம். திடீரென்று அவருக்கு அவரையும் மீறிக் கோபம் மூண்டது.

''ரங்கன் பிணமாக் கிடக்கறப்ப உனக்கு என்ன வயசு? ஐ.ஐ.டி. எண்ட்ரன்ஸ் எழுதியிருந்தே! அப்ப என் பெண் மாயாவுக்கு என்ன வயசு? பத்து கூட இல்லே. ஆனா நான் உன்னைப் படிக்க வைக்க முன்வந்தேன்! ஏன்? என் பெண் மாயாவை உன் தலையில் கட்டியாக வேண்டும் என்கிற நிர்ப்பந்தமோ, கட்டாயமோ அப்ப எனக்கு இல்லே!''

உடனேயே ''ஐ அபாலஜைஸ்...'' என்ற அரவிந்தன், ''ஆனா நான்தான் உங்க பெண்ணுக்குக் கணவனா வரணும்கற எண்ணம் நிச்சயமா அவளுக்கு இந்த வியாதி தோணினதுக்கு அப்புறம்தான் பிறந்தது'' என்றான்.

''பூராவும் கரெக்ட் இல்லே. கோமளியும் உன் அம்மாவும் ஆசைப்பட்டது உண்மை. உன் அப்பா ஆசைப்பட்டதும் உண்மை. ஆனா அப்ப நான் அதிகமா கேர் பண்ணலே! நினைச்சுப் பார்க்கலே... ஆனா கோமளி போனப்புறம் — அதுக்குள்ளே நீ என் கம்பெனியில் சேர்ந்து ஃபாரின் டிரெயினிங்குக்கும் போயாச்சு... நான் இதிலே பிடிவாதமா இருந்தேன்...''

''ஓகே, எது எப்படியானாலும் உங்களுக்கு நான் கடன்பட்டிருக்கேன்... என்னாலே பணத்தாலேயோ இல்லே வேறு எந்தவிதமாவோ கடனைத் திருப்பித்தர முடியாது... மாயாவை மனைவியாக்கிக் கொள்றது மூலமா அதைத் தீர்த்துக்கப் போறேன்... ரெண்டாவது காரணம்...''

அரவிந்தன் நிறுத்தினான்.

தயங்கினான்.

தாரக்ராம் காத்துக் கொண்டிருந்தார். அவருக்கு ஏற்பட்டிருந்த கோபம் சற்றே அடங்கியிருந்தாலும், சென்னையில் அவர் பார்த்த அரவிந்தனை இப்போது காணவில்லை என்ற அதிருப்தி உண்டாயிற்று.

வார்த்தைகளை மனத்தினுள் அமைத்து, உறுதிப்படுத்திக் கொண்டுப் பேசுகிறவனைப் போல அவன் பேசலானான்.

''வசுமதி என்கிற ஒரு பெண்ணுடன் நான் ஒரு வருஷம் பழகினேன். அவ திடீரென்று என்னைக் கல்யாணம் செய்து கொள்ள முடியாதுன்னா... எவ்வளவோ சங்கடங்களை அனுபவிச்சுப் பழகி எதிர்நீச்சல் போட்டுப் பழகியிருக்கிற எனக்கு இதனால் அதிர்ச்சி ஏற்படவில்லை. ஆனா அவள் தானாக இந்த முடிவை எடுக்கவில்லை என்று தோன்றியது... எங்கேயோ, யாரோ ஒரு கயிற்றை இழுக்கிறார்கள். அதன் விளைவாகத்தான் வசுமதி இப்படி ஒரு முடிவை எடுத்து என்னை ஏற்றுக் கொள்ளாமற் போனாள் என்று நம்பினேன்... ஒருநாள் எல்லாம் விவரமாகத் தெரியும்... ஆனால் அதே சமயத்தில், அதிக புத்தியுள்ள ஒரு பெண்ணைக் காட்டிலும், மன பலவீனம் கொண்ட, ஒன்றும் அறியாத பேதையை மணம் செய்து கொண்டு அவளுக்கு வாழ்வு கொடுக்க வேண்டும் என்ற வெறி உண்டாகியது. இப்ப நான் வசுமதியை மறந்தாச்சு. அதற்கு அப்புறம் மாயாதான் என் மனத்தில் நிறைந்திருக்கிறாள். அவளைக் குணப்படுத்த என்னால் முடியும் என்கிற நம்பிக்கை, குணப்படுத்திக் காட்டுகிறேன் என்ற சவால் எல்லாம் என்னைப் பிளேன் ஏற வைச்சுது...''

''தாங்க் யூ!''

''ஆனா, மாயா கழுத்திலே நான் தாலி கட்டணுமானால் என்னுடைய இரண்டு நிபந்தனைகளுக்கு நீங்க கட்டுப்படணும்! கட்டுப்பட்டே ஆகணும்!''

தாரக்ராம் உள்ளூற நடுங்கினார். 'என்ன நிபந்தனைகள்?' என்று கேட்க நா துடித்தது ஆனால் மனம் பயத்தில் மரத்துப் போயிற்று.

அரவிந்தனே பேச ஆரம்பித்தான்.

(தொடரும்)



மிக வேகமாக விற்பனையாகி வருகிறது 'சுபஸ்ரீ' வழங்கும் வீட்டு மனைகள்!

சென்னை பெருநகரை ஒட்டிய

திருவள்ளூர் நகரின் மையப் பகுதியில்

அமைந்துள்ளது எமது

வீரராகவ நகர்

அரசாங்க அங்கீகார எண் **CRDTCPM:** *84.249* **LP** *207* சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்திலிருந்து அடிக்கடி மின்சார ரயில் வசதி உண்டு. சீசன் டிக்கட் மாதம் ரூ. 38/ தான்.

✻ **அனைத்து நகர்ப்புற வசதிகளும் உண்டு.**

நல்ல குடிதண்ணீர், மின்சார ரயில் வசதி, பஸ் 'வசதி' கான்வெண்ட், மார்க்கட், உயர்நிலைப்பள்ளி, திரையரங்கம் இவையனைத்தும் உண்டு.

ஒரு மனை (1800 சதுர அடி)
விலை ரூ. 12420 மட்டுமே.

உடனே வீடுகட்டிக் குடியேற சிறந்த இடம்.

வீடு கட்டவும் ஏற்பாடு செய்கிறோம்.

பம்பாய் நகரில் எமது மனைகளை ரிசர்வ் செய்ய அணுகவேண்டிய முகவரி:—

திரு. கே. சுப்பிரமணியன், 13, லக்ஷ்மி,
17வது தெரு, செம்பூர், பம்பாய் — 400071. போன்: 525212.

Promoters:

SUBASREE REAL ESTATES

"SUGANTHI MANSION"
6/15, Ranganathan Street, T. Nagar,
Madras - 600 017. (Next to Star Bazaar)

House Construction Undertaken by

Mr. V. KASTURIRANGAN, B.E

VENKATESWARA CONSTRUCTIONS

86, Santhome HighRoad, Madras - 600 028. Phone: 417202.



ப.ரங்கநாயகி

கல்யாணக் கனவுகள்

முடியாத இரவாக நீண்டு கொண்டே இருந்த முந்தைய தின இரவு அவனுடைய நினைவில் நடு ஜாமம் தாண்டிய பிறகு தானை முடிவுற்று இதோ இந்த ஆறு மணி காலை யாக வடிவெடுத்துள்ளது.

கேட்கலாமா வேண்டாமா என்று மண்டையை உடைத்தபடி யோசித்து, கடைசியில் முடிவெடுக்காமலே உறங்கிப் போயிருக்கிறான்.

விடிந்ததுமே மனத்தில் சற்றுத் தெளிவு. கேட்பதில் என்ன தவறு? தலையையா சீவி விடப் போகிறார்கள்?

இஷ்டமிருந்தால், 'அதனால் என்ன சோமு... நீயும் சேர்ந்துக்கோயேன்' என்பார்கள்... இதில் மாறாகச் சொல்லவா போகிறார்கள் என்று அவன் மனத்தில் நிச்சயமான ஓர் அபிப்பிராயம்.

ஏனென்றால்—

சோமு அந்தக் கம்பெனியில் இரண்டு ஆண்டுகளாகப் பணியாற்றுகிறான். இது வரை அவன் வாய்விட்டு அவர்களிடம் எந்தவித அதிகப்படி விஷயத்தையும் கேட்டதில்லை.

சமயா சமயங்களில் மற்றவர்கள் முன் பணமாகச் சம்பளத்தை வாங்குவார்கள்... இவன் அதுமாதிரி கூட ஏதையும் கேட்டதில்லை...

இப்போதும் அவன் கேட்கப் போகும் உதவியால் கம்பெனிக்கு எந்தவிதமான இழப்பும் வந்துவிடப் போவதில்லை.

கம்பெனி பார்ட்னர்களுக்கும், குறிப்பாக சீனியர் பார்ட்னரான மிஸ்ராவுக்குச் சோமுவின் மேல் மிக நல்ல அபிப்பிராயம் உண்டு.



மேனேஜர்: இந்தாய்யா கந்தசாமி... நம்ம வீட்டுக்குப் போயி இந்த ஃப்ளாஸ்க்கில் காப்பி கேட்டு வாங்கிக்கிட்டு வா..

பியூன்: பெரிய வீடா, சின்ன வீடா சார்?

நாளையிலிருந்து கோர்ஸ் ஆரம்பமாகப் போகிறது. ஆறுவாரக் கம்ப்யூட்டர் கோர்ஸ் அது. விளம்பரம் கொடுத்து ஒரு வாரம் கூட ஆகவில்லை. நூறு பேர்களுக்குமேல் மனுச் செய்துவிட்டனர். ஆறு வாரக் கோர்ஸுக்கு ஐநூறு ரூபாய் ஃபீஸ்... மாலை ஆறு மணியிலிருந்து எட்டரை மணிவரை. தியரி, பிராக்டிகல் இரண்டும் அடங்கும்...

மிஸ்ரா மகா கெட்டிக்காரன்... அவனுடைய யோசனைதான் இது!

பல்வேறு கம்பெனிகளுக்கு புரோகிராம் செய்து கொடுப்பதற்காக வாங்கிய கம்ப்யூட்டரை வைத்துக் கொண்டு மாலை வேளைகளில் பலருக்கு 'டிரெயினிங்' கொடுத்துக் கூடுதலாகச் சம்பாதிக்க ஐடியா கொடுத்துத் திட்டம் அமோகமாக நிறைவேறப் போகிறது.

தானும் அந்தக் கோர்ஸில் சேர்ந்து ஆறு வாரம் பயிற்சி பெற்றால் எதிர்காலத்துக்கு உதவியாக இருக்குமே என்று சோமுவுக்குள் ஒரு நப்பாசை. ஐநூறு ரூபாய் கட்டிப் பயிற்சி பெற அவனுக்கு வசதி கிடையாது..

மாதம் வரும் சம்பளத்தில் முந்நூறு ரூபாயைத் தன் செலவுக்கு வைத்துக் கொண்டு பாக்கியைத் தாய் தந்தையர் செலவுக்குக் கிராமத்திற்கு அனுப்பிவிடுகிறான். இவனுக்குப் பிறகு பத்து வயதில் ஒரு தங்கை மட்டும்தான் என்றாலும் கிராமத்தில் அவர்களுக்குக் கஷ்ட ஜீவனம்தான்... இவன் அனுப்பும் பணம் பல ஆயிரங்களுக்குச் சமம் அங்கு...

நாற்பது ரூபாயில் ஓர் எலி வளையை வாடகைக்கு எடுத்துக் கொண்டு தானே சமையல் செய்து சாப்பிடுகிறான்!

நேரம் போதாமல், பணம் போதாமல் இதென்ன வாழ்க்கை!

இன்னும் இருநூறு, இருநூற்று ஐம்பது கூடி வந்தால் திருமணம் செய்து கொண்டு, கஷ்ட ஜீவனம் நடத்தினாலும் சற்று மன நிம்மதியுடன் சாப்பிடலாமே என்பது அவனுடைய கணக்கு ..

எப்படி அந்த அளவுக்கு வருமானத்தைக் கூட்டிக் கொள்ள முடியும் என்று அவன் உள்ளத்தை உழப்பிக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில்தான் அவன் கம்பெனியில் கம்ப்யூட்டர் பயிற்சியை ஆரம்பிக்க முடிவெடுத்தனர்.

சோமுவுக்குள் ஆயிரமாயிரம் கற்பனைகள்... அக்கற்பனைகள் தந்த புது மலர்ச்சிகள்!

'கம்ப்யூட்டர் கோர்ஸ்' முதல் படியாக முடித்து, அலுவலகத்தில் ஓய்வு கிடைக்கும் சமயங்களில் தானாகக் கூடுதல் பயிற்சிப் பெற்றுக் கொண்டால் குறைந்த பட்சம் ஒரு வருடத்திற்குள் கம்ப்யூட்டரில் புரோக்ராம்கள் அமைத்துக் கொடுக்கும் அளவுக்குத் தன்னைத் தயார்படுத்திக் கொள்ள வாய்ப்புண்டு...

அந்நிலையில் மிஸ்ராவிடம் காலில், கையில் விழுந்து கெஞ்சி ப்ரோக்ராமராக நியமனம் பெற்றுவிட்டால் எதிர்பார்க்கும் அளவுக்கு மேலாகவே சம்பளம் கூடிவிடும்... நல்லதோர் எதிர்காலம் அமைத்துக் கொள்ளத் திறவுகோலாக அது அமையும்...

ஒரு வருட காலத்தில் திருமணம் செய்து கொள்ளவும் இயலக்கூடும்...

இப்படிப்பட்ட கற்பனைக் கோட்டைகள் சோமுவின் உள்ளத்தில்...

முன்தினம் உணவு இடைவேளையின் போது தனது உள்ளத்தின் எண்ணங்களைச் சக ஊழியையான ராஜேஸ்வரியிடம் கூறி அபிப்ராயம் கேட்டான்.

"சோமு சார்... எனக்கு எந்த அபிப்பிராயமும் சொல்லத் தெரியலே சார்... ஆனா கேட்கறதுலே எதுவும் தப்பில்லேன்னு படறது!" என்று அவள் கருத்தைக் கூறினாள்...

இரவெல்லாம் சிந்தித்து, மிஸ்ராவிடம் கேட்டுவிடுவது என்று விடிந்ததும் சோமு முடிவுக்கு வந்திருந்தான்!

சற்றுக் கூடுதல் அக்கறை எடுத்துக் கொண்டு டிரஸ் செய்து கொண்டு, வழக்கத்திற்கு முன்னதாகவே கிளம்பி ஒன்பதரை மணிக்கே ஆபீஸுக்குப் போனான்...

மிஸ்ரா வழக்கமாகக் காலை ஒன்பதரை மணி அளவுக்கு வந்துவிடுவான்...

மற்றவர்கள் வந்து ஆபீஸ் சூடுபிடிக்க ஆரம்பிக்கப் பத்துமணியாகும்...

யாரும் இல்லாத சமயத்தில் மிஸ்ராவிடம் கேட்கச் சீக்கிரம் போனால் சௌகர்யமாக இருக்கும் என்பதால்தான் சோமு சீக்கிரமே போனான்...

சோமு போன ஐந்தாவது நிமிடத்தில் மிஸ்ரா வந்தான்...

மிஸ்ராவின் கார் வருவதைப் பார்த்து மனம் மகிழ்ந்த சோமுவுக்கு, மிஸ்ராவுடன் வேறு இரண்டு 'பெரிய' மனிதர்கள் உடன் வந்ததைப் பார்த்து ஏமாற்றம்...

தான் சீக்கிரம் வந்ததை மிஸ்ரா கவ

ணித்துச் சென்றதை. இவன் 'குட்மார்னிங்' போட்டதும், ஒருவித மலர்ச்சியுடன் மிஸ்ரா அங்கீகரித்துச் சென்றதிலிருந்து உணர்ந்து கொண்டான்...

பத்து மணிக்கு மேலான பிறகுதான், ஆபீஸில் மற்றவர்கள் எல்லோரும் வந்து சந்தடியான பிறகுதான், மிஸ்ராவுடன் கூட வந்த இருவரும் கிளம்பிப் போயினர்...

வந்ததும் வராததுமாக ராஜேஸ்வரி சோமுவிடம் வந்து, 'என்ன கேட்டீங்களா?' என்று விசாரித்தாள்.

சோமு விவரம் சொன்னதும் 'பெஸ்ட் ஆஃப் லக்' என்று கூறிப் போனாள்...

உள்ளத்தில் கேள்வியை வைத்துக் கொண்டு சரியான சமயம் கிடைக்காமல் மாலை நாலரை மணிவரை பிரசவ வேதனை போன்ற வேதனை உள்ளத்தை வாட்டியெடுக்க சோமு நெளிந்துகொண்டிருந்தான்...

'சோமு ஈஸ் எ சின்சியர் மேன்' என்று மிஸ்ரா டெஸ்பேட்ச் ராஜேஸ்வரியிடம் கூறியதாக அவனிடம் அவள் கூறியிருக்கிறாள்.

மிஸ்ராவிடமே நேராகக் கேட்டுவிட முடிவு செய்தான்.

நாலரை மணி குமாருக்குச் சோமுவின் அதிர்ஷ்டம் மிஸ்ராவே கூப்பிட்டு அனுப்பினான்...

ஓர் இள நடுக்கம் உடலில் பிறக்க சோமு மிஸ்ராவின் அறைக்கு விரைந்தான்... பார்வையால் சோமுவுக்கு வாழ்த்துக் கூறினாள் ராஜேஸ்வரி.

"சோமு... நாளைக்கு நாம்ப பயிற்சி ஆரம்பிக்கிறோமே... உங்களுக்கு நினைவிருக்கும் என்று நினைக்கிறேன்!" என்று தனக்கே உரிய ஹிந்தி உச்சரிப்பான ஆங்கிலத்தில் மிஸ்ரா கேட்டான்...

சோமுவின் உள்ளத்தில் எதிர்பார்ப்புக் கலந்த ஓர் படபடப்பு... நாம் கேட்குமுன் மிஸ்ராவே நம்மையும் பயிற்சிக்கு அனுப்ப முடிவெடுத்திருக்கிறான்... எத்தகைய பெருந்தன்மையானவன் இவன்!

"யெஸ் சார்... எல்லா ஏற்பாடுகளும் ஆகிவிட்டன!"

"டிரெயினிங் முடியறவரை தினமும் நீங்க தினமும் மாலை நாலரை மணிக்கு என்னைச் சந்தித்து அன்றன்றைய தினத்துக்கான ஏற்பாடுகளைக் கூறவேண்டும்... உங்கள் பொறுப்பு இது!" என்றான்...

சோமுவுக்குள் ஏமாற்றம்...

'எவனுக்கு அரிப்பெடுக்கிறதோ அவன்தானே சொரிந்து கொள்ள வேண்டும்' என்று மனத்தைத் தேற்றிக் கொண்டவனாக, தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, தனது உள்ளத்து ஆசையை சோமு தட்டுத் தடுமாறிய ஆங்கிலத்தில் கூறி முடித்தான்!

"ஸாரி... மிஸ்டர் சோமு... இது பட்டதாரிகளுக்கான பயிற்சி... இதனால் உங்களுக்கு ஏதும் உபயோகம் இருக்கும் என்று நான் நினைக்கலேல்லை..." என்றான் நிர்த்தாக்ஷிண்யமாக.



சிக்கன யோசனை

போட்டி : 47

விலைவாசி உயர வருவாயை அதிகரித்துக் கொள்ள முயல்வதுடன் சிக்கனத்தையும் கடைப்பிடிக்க வேண்டியுள்ளது. முன்பு வருவாய் பெருகவழி கூறினீர்கள். இப்போது ஓர் அனுபவ சாத்தியமான சிக்கன யோசனையைக் கீழே எழுதி, இந்த அரைப்பக்கத்தைக் கத்தரித்து அனுப்புங்கள். பிரசுரமானால் பரிசு. தவிர குலுக்கல் முறையில் ஒருவருக்குப் பட்டுப் புடவை. உறையின் மேல் "சிக்கன யோசனை" என்று குறிப்பிடல் அவசியம்.

முடிவு தேதி: 8.4.85

இன்னும் 6 பட்டுப்புடவைகளே பாக்கி. அவற்றைப் பெறப் போகும் ஆறு அதிர்ஷ்டசாலிகளுள் ஒருவராக, நீங்கள் ஏன் இருக்கக் கூடாது?


என் பெயர்:.................

விலாசம் :.................

....

பட்டுப்புடவை பரிசுத்திட்டம்

உங்கள் ஒவ்வொரு ரூபாயிலிருந்தும் அதிகபட்சம் எப்படி பிழிந்தெடுக்கலாம்...



இந்த கேள்விக்கு பெரிய பெரிய பொருளாதார வல்லுனர்களே தடுமாறலாம். ஆனால் மிகச் சாதாரணமான, அடிப்படை உபாயம் ஒன்று இருக்கிறது. அது தொன்றுதொட்டு வரும் வழக்கம்—கவலையற்ற பாதுகாப்பான எதிர் காலத்திற்கு உங்கள் வருவாயிலிருந்து ஒவ்வொரு துளியாக சேமித்து வைத்தல். உங்கள் பணத்திற்கு கூடுதல் பலனளிக்கும் வண்ணம் சவுத் இந்தியன் பாங்க் பற்பல திட்டங்களைக் கொண்டுள்ளது.

கற்பக நிதி டெபாஸிட்டுகள், கோல்டன் ஜூபிளி காஷ் சர்ட்டிபிகேட்டுகள்,நான் ரெஸிடெண்ட் அக்கவுண்ட்டுகள், சேவிங்ஸ் பாங்க் டெபாஸிட்டுகள், ரெக்கரிங் டெபாஸிட்டுகள், தினசரி சேமிப்புகள்...



தி சௌத் இந்தியன் பாங்க் லி.

பதிவு அலுவலகம்: திருச்சூர் கேரளா.

SIB உங்கள் சேவைக்காகவே எல்லா இடங்களிலும் வளர்கிறது

Touadu/SIT/07081

''ஸார்... நீங்க மனசு வைத்தால் இலவசமாக இந்தப் பயிற்சிக்கு என்னை அனுமதித்து இங்கேயே தயார் செய்து புரோக்ராமராகப் போட வாய்ப்புண்டு... சின்சியராகக் கற்றுக் கொண்டு ஐ வில் பி எ ஃபெய்த்ஃபுல் சர்வண்ட் சார்...'' கண்களில் நீர் மல்காத குறையாகச் சோமு மறுபடியும் கேட்டான்..

''என்னைப் புரிஞ்சுக்குங்க சோமு... உங்க மேலே எனக்கு நல்ல அபிப்பிராயம் உண்டு... பட் இந்த விஷயத்தில் எதுவும் செய்ய முடியாதவனாக இருக்கிறேன்...'' என்றான்.

சோமு பேசாமலிருந்தான்...

''நீங்க போய் அக்கௌண்டண்ட் ராகவனை அனுப்புங்கள்'' என்று ஒரு வழியாக முற்றுப் புள்ளி வைத்து சோமுவை மிஸ்ரா வெளியே அனுப்பி வைத்தான்.

கறுத்த முகமும், குறுகிய உடலுமாய்ச் சோமு தனது இருக்கையில் வந்து அமர்ந்து கொண்டான்...

சோமுவின் முகபாவத்தைப் பார்த்தே முடிவை ஊகித்துக் கொண்ட ராஜேஸ்வரி முகபாவத்தாலேயே தனது ஆறுதல்களை அவனிடம் தெரிவித்தாள்.

சோமு கூற, 'அக்கௌண்டண்ட்' மிஸ்ரா அறைக்குப் போனார்.

ஐந்து மணி சுமாருக்கு, அனைவரும் வீட்டிற்குக் கிளம்பும் நேரம் மிஸ்ரா அறையிலிருந்து வெளிவந்த அக்கௌண்டண்ட், மறுபடியும் சோமுவை மிஸ்ரா அழைப்பதாகக் கூற சோமுவும் மீண்டும் நம்பிக்கை பிறக்க உள்ளே போனான்...

''சோமு... இந்தப் பயிற்சியினாலே தினமும் நீங்க அரைமணி நேரம் மாலையில் கூட இருக்கும்படி இருக்கும்... அதனாலே காலேலே நீங்க அரைமணி தாமதமா வந்தால் பரவாயில்லே...'' என்று சொல்லி அனுப்பினான்...

சே... என்றாகிவிட்டது சோமுவுக்கு...

'முதலாளிகளின் மனசு எப்படியெல்லாம் வேலை செய்யறது பார்' என்று எண்ணிக் கொண்டான்.

அனைவரும் வீட்டிற்குச் சென்று விட்டிருந்தனர்...

யாருமில்லாத சமயமாகப் பார்த்துக் கம்ப்யூட்டரை ஒரு கைபார்த்து ரிப்பேராக்கினால் என்ன என்று ஓர் வக்கிர எண்ணம்...

''சே... தப்பு இது... இந்த அளவுக்காவது வாழ்க்கை செட்டில் ஆனது மிஸ்ராவால்தான்'' என்று தார்மீக மனசு வாதிட்டு மனத்தை நிலைப்படுத்தியது.

டை, டிபன் பாக்ஸை எடுத்துக்கொண்டு துவளும் மனத்துடன் தொய்ந்தபடி நடந்து தனியாளாய் வெளியே வந்தான்.

'பேசாமல் வேலையை ராஜினாமா செய்துவிட்டுக் கிராமத்திற்குப் போய்க் கூலிக்கு விவசாயம் செய்தால் என்ன?' என்று கூட அவனுள் ஓர் எண்ணம்...

'வாழ்நாள் முழுவதும் இதே தரித்திரத்தில் உழன்று கொண்டு ஒண்டிக்கட்டையாய்த் தள்ள வேண்டியதுதான்!' என்று அவனுள் கழிவிரக்கம்...

'முதலாளி வர்க்கத்தின் போக்குகளே தனியானவை... ஏற்கெனவே வேலை செய்யும் ஊழியனைத் தயார் செய்து பதவி உயர்வு கொடுக்காமல் புதிதாய் வெளியாரை நேரடி நியமனம் செய்வதால் இவர்களுக்கு என்ன கூடுதலாக வந்துவிடப் போகிறது?' என்று அவனுள் புரியாத ஓர் கேள்வி...

''என்னங்க... ரொம்பவும் ஏமாத்தமா இருக்குங்களா?'' சந்து முனையில் காத்திருந்த ராஜேஸ்வரி கேட்டதும் சோமு சுதாரித்துக் கொண்டான்...

''நீங்க இன்னும் வீட்டுக்குப் போகலீங்களா?''

''முதலாளி என்ன சொன்னார்னு தெரிஞ்சுக்கலாம்னுதான் இருந்தேன்!'' என்றாள்...

''உனக்குச் சரிப்படாது சோமு... இந்த விஷயத்தில் என்னாலே ஒண்ணும் செய்ய முடியாதுன்னு நிர்த்தாக்ஷண்யமா சொல்லிட்டான்...''

''சரி, விடுங்க... மனசுலே பெரிசா எடுத்துக்காதீங்க!''

''இல்லேங்க ராஜேஸ்வரி... இதனாலே ஏதோ ஒரு பிரமோஷன் மாதிரி வந்து இருநூறோ, முந்நூறோ கூடி வந்தா... கல்யாணம் கட்டிக்கின்னு குடும்பம் செட்டில் பண்ணலாம்னுதான்... இப்போ பணமும் போறமாட்டேங்குது.. சிரமமும் பட முடியலே..''

''வேற வழி ஏதாவது பார்த்துக்க வேண்டியதுதான்!''

''என்ன வழி இருக்குது சொல்லுங்க...''

''உங்களுக்கு ஐநூறுக்குக் கிட்டத்தட்ட சம்பளம் வர்றது. எனக்கு முந்நூத்து அம்பது... நம்ப ரெண்டு பேருக்கும் இது போதும்னு நெனைக்கறேன்... நீங்க ஒத்துண்டா...''

சடாரென நிமிர்ந்து ராஜேஸ்வரியின் முகத்தைச் சோமு நோக்கினான்.

அதில் வெட்கம் முழுமையாய்ப் பரவிச் சிவந்து நின்றது.

''இந்த டாக்டருக்குத் தன் திறமையை விடக் கடவுளின்மேல் நம்பிக்கை அதிகம்.''

''எதை வைச்சுச் சொல்றே?''

''தன்னிடம் வரும் பேஷண்டுகளுக்குச் சாமி விபூதியை நெத்தியில் இட்டதுக்கப்புறம் தான் ட்ரீட்மெண்ட்டை ஆரம்பிப்பார்!''



குட்டிச் சுவரான கூட்டுறவு இயக்கம்

* தபால் தந்தி இலாகாவில் **ED** என்றும், புறநிலை ஊழியர்கள் என்றும் அழைக்கப்படுகிற **Extra Departmental Agents** என்று பரிதாபகரமான ஒரு பிரிவு ஊழியர்கள் இருக்கிறார்கள். அவர்களின் **Ser' e Conditions** ஓட்டல் தொழிலாளியை ..ட மோசமானது. சென்னை போன்ற நகரங்களில் அதுபோன்ற ஊழியர்களை அதிகமாகக் காண முடியாது. கிராமப் புறத்தில் அதிகமாக இருக்கிறார்கள்.
உடுமலைப்பேட்டை, வி.எஸ். சுப்பிரமணியன்
தலைவர், அ. இ. தபால் ஊழியர் சங்கம்.

* மின்வெட்டு பற்றி, "பழிவிட்ட பரிதாபம்!" தலையங்கம் மக்கள் உள்ளப் பிரதிபலிப்பை வெளிக்காட்டுகிறது. கல்கி ஒன்று தான் தைரியமாகத் தவறுகளையும், குளறுபடிகளையும் சுட்டிக் காட்டுகிறது. சரியான எதிர்க்கட்சி சட்டசபையில் இல்லாவிட்டாலும் கல்கி இருக்கிற தைரியம் எங்களுக்கு!
மதுரை. அருண்.

* ஒரு நடிகன் என்னும் முறையில் கேள்விக்குப் பதிலையளிப்பினும், கமல், மற்றக் கலைஞர்களிடமிருந்து வேறுபடுகிறார். 'பால் முனி' விஷயமாக நம் 'கமல் முனி' அருளிய தேன் வாக்குகள், அவர் நம் நாட்டின் மீது கொண்டுள்ள பற்றை உணர்த்துகிறது.
பெங்களூர்—75. ச. சே. சுந்தரி.

* நடிகர் கமலஹாஸனுக்குள் எத்தனை விதமான அபூர்வப் பிரகிருதிகள்? என்ன ரசனை? கவிதை, விஞ்ஞானம், நகைச்சுவை, இலக்கியம், என்று இப்படி அனைத்திலும் அமிழ்ந்தும், லவலேசமும் வெளியே தெரிக்காத எளிமை. வம்பில் மாட்டிக் கொள்ளாதலாகவும், எதிர்மறைக் கருத்துக்களைத் தெரிவிப்பதில் நாசூக்கு.
விளம்பர நிகழ்ச்சிகளில் இப்படி ஓர் ரசனை உணர்வோடு நிகழ்ச்சியை யாரும் அளித்ததில்லை.
சென்னை—13. ந. சந்தானம்.

* ஆணுக்கொரு நீதி பெண்ணுக்கொரு நீதி என்றில்லை. இருவருக்கும் ஒரே நீதிதான் என்பதைத் தனது "நிஜங்களின் தரிசனம்" எனும் சிறுகதையின் மூலம் பட்டுக்கோட்டை ராஜா பதமாகவே தெரிவித்துவிட்டார்.
திருச்சி. சிவசுந்தரி.

* வாசகர்களின் வித்தியாசமான அசடு வழிந்த அனுபவங்கள் ஒவ்வொன்றும் வழிந்து, வழிந்து ... சாரி! விழுந்து விழுந்து சிரிக்க வைத்துவிட்டது!
கும்பகோணம். கிருஷ்ணதாஸ்

* 'ஆஸ்திக சமாஜத்தில் கேட்ட அருளுரைகள்' செவிகளில் பாய்ந்த தேன் சாரல்கள்.
ஸ்ரீரங்கம். ஆர். கோபாலன்

* வேலையில்லாத் திண்டாட்டத்தால் உருவானவர்கள்தான், "நக்ஸலைட்" என்பதைப் படித்தபோது மனம் வெகுவாக வேதனைப் பட்டது.
அய்யம்பேட்டை. எஸ். ஆர். ஷரா.

'ஓட்டல்கள் ஜாக்கிரதை' விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் கட்டுரை. வேறு வழியின்றி என் போன்ற பல்லாயிரக்கணக்கானவர்கள் ஹோட்டலில் சாப்பிடுகிறோம். ஹோட்டல் உரிமையாளர்களும், சுகாதார பரிசோதகர்களும் மனச் சாட்சிக்கு அடங்கி நடக்காமல் போனால் நாங்கள் சங்கம் அமைத்து போராடத்தான் வேண்டும்.
சென்னை
ஆறுமுகம்

* கிராமப்புறங்களில் அத்தியாவசிய உணவு தானியங்கள் மண்ணெண்ணெய் ஆகியன விநியோகிக்கும் கூட்டுறவுப் பண்டக சாலைகளில் நடக்கும் ஊழல்கள் அளவில்லை. ஏழைகள் வெகு தூரத்திலிருந்து இங்கு வந்து அளவு குறைவாக வாங்கிச் சென்று ஏமாறுகிறார்கள். இதனைத் தடுப்பாரில்லை. இதற்கெல்லாம் காரணம் தேர்தல்கள் நடக்காமல் தலைமைப் பதவி நிரந்தரமாக்கப் பட்டுள்ளதே. கூட்டுறவு அமைப்புகளில் தேர்தல்கள் நடந்து அடிக்கடி தலைமையும் இயக்குனர் குழுக்களும் மாற வேண்டும். அப்போதுதான் கூட்டுறவு இயக்கம் சீர்படும்.
மன்னசமுத்திரம். ஆர். மணிவண்ணன்

(கடைசி கடிதம் பரிசு பெறுகிறது)





கே. சுவாமிநாதன்

உலக அரங்கில் பாரதி



அகில இந்திய சுப்பிரமணிய பாரதி நூற்றாண்டு விழாக்குழு, ஆங்கிலத்தில் வெளியிட்டுள்ள, ''பாரதியார் — கவிதைகள் — உரைநடைகள்'' தொகுப்பு நூலினை ஆழ்ந்து படித்த திரு. எஸ். நல்லபெருமாள் கூறுவது:

இவ்வளவு கவர்ச்சிகரமான முறையில் மகாகவி பாரதியின் எழுத்துக்களின் ஆங்கில வடிவ நூலை அச்சிட்டுள்ள டைம்ஸ் ஆஃப் இந்தியா அச்சகத்தாரை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

ஆங்கில மொழி பெயர்ப்புக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பாடல்கள் அவ்வளவும் மக்களிடையே நன்கு பரிச்சயமானவை. தேர்ந்தெடுத்துப் படிக்கும் ஆர்வமுடையவர்களுக்குப் பெருவிருந்தான பாடல்கள் இவை.

மொழி பெயர்த்துள்ளவர்களும் அந்தத் துறையில் அரும்பணியாற்றிப் பெயர் பெற்றவர்களான பேராசிரியர் சுவாமிநாதன், பி. எஸ். சுந்தரம், பிரேமா நந்தகுமார், அ. சீனிவாச ராகவன் போன்றவர்கள்.

நூலின் இரண்டாம் பகுதியாய் அமைந்துள்ள பாரதியின் உரைநடையைப் பொறுத்தவரை மிகுந்த கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது. பாரதியின் மிகச் சிறந்த எழுத்துக்கள் என்று கருதப்படுபவை கவனமுடன் தேர்வு செய்யப்பட்டு நூலில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

மகாகவியின் மிக முக்கியமான படைப்பான குயில் பாட்டு, மிகவும் நேர்த்தியாக பி. எஸ். சுந்தரம் அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. இதற்கான முன்னுரையில் (பக். 149) டாக்டர் ஸ்ரீநிவாஸ அய்யங்காரின் கருத்து மேற்கோளாகக் காட்டப்பட்டிருக்கும் விதம் அற்புதமானது. குயில் பாட்டின் அனுபவத்தைப்பற்றி ''முடிவில்லாத ஆனந்த அனுபவம்'' என்று அவர் முத்தாய்ப்பு வைக்கிறார்.

கூடுமானவரை தமிழில் மூல வடிவத்தில் உள்ள கருத்துக்களை அப்படியப்படியே வைத்துக்கொண்டு ஆங்கில மொழியின் நளினத்தையும் பிரதிபலிக்கும் வகையில் இந்த மொழி பெயர்ப்புக்கள் மிகவும் உயர்தரமாகச் செய்யப்பட்டிருக்கின்றன. ஆங்கிலக் கவி ராபர்ட் ஃப்ராஸ்டின் புகழ் பெற்ற வரிகளை வைத்தே, ஆசிரியர் நூலுக்கு முகவுரை எழுதியிருக்கிறார். ஆங்கிலம், தமிழ், இரண்டு மொழிகளிலும் நன்கு புலமை பெற்றவர்கள், இந்த மொழி பெயர்ப்புக்களில் எதுவுமே இழக்கப்பட்டு விடவில்லை என்பதை ஒப்புக் கொள்வார்கள்.

அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் ஐரோப்பிய நாடுகளில் விநியோகிக்க ஏற்ற வகையில் இந்தத் தொகுப்பு நூல் தரமான முறையில் உருவாக்கப்பட்டிருக்கிறது. பாரதியின் எழுத்துக்களுடைய சாரம் முழுவதையும் இந்த ஒரே தொகுதியில் வழங்கியிருக்கிறார்கள். அந்தப் பெருங்கவிஞனின் சிந்தனை சக்தியை உணர விரும்பும் ஒவ்வொருவர் கையிலும் கட்டாயம் இருக்க வேண்டிய நூல் இது.

இந்த மகத்தான நூலைத் தொகுத்தும், திருத்தியும் வெளியிடும் பணிக்குப் பேராசிரியர் கே. சுவாமிநாதன் அவர்களைவிடத் தகுதியானவர் வேறு யாரையும் தேர்ந்தெடுத்திருக்க முடியாது. இரண்டு தலைமுறைக் காலத்துக்கும் அதிகமாக ஆங்கிலம், தமிழ், சம்ஸ்கிருதம் ஆகிய மும்மொழி இலக்கியங்களுக்காகவும் குரல் கொடுக்கும் தகுதி பெற்றவர் அவர். பாரத தேசத்தின் ஹிருதயத்தை அறிந்து கொள்வதற்கு இந்த மூன்று மொழிகளிலும் பாண்டித்தியம் தேவை. அதேபோல், பாரதி இந்த உலகத்துக்கும் குறிப்பாகத் தமிழ் நாட்டுக்கும் விட்டுச் சென்றுள்ள இலக்கிய வளத்தை உணரவும் உணர்த்தவும் இந்த மும்மொழிப் புலமை இன்றியமையாததாகிறது.

(Subramaniya Bharathi — Chosen poems and prose — General Editor K. Swaminathan. Rs.40/-

Published by All India Subramaniya Bharathi Centenary Celebrations Committee, Ministry of Education and culture, Dept. of Culture, Govt. of India, New Delhi.)

சுப்ரபாலன்


ஜெனீவாவிலிருந்து வியன்னாவுக்கு

நா. பார்த்தசாரதி

22

பாரிஸில் புறப்பட்ட ஐம்பதாவது நிமிஷத்தில் ஜெனீவா வந்துவிட்டது. உலக நாடுகளை முதல்முதலாக ஒன்றுபடச்செய்த 'லீக்' ஆஃப் நேஷன்ஸ்' நினைவுக்கு வந்தது. கடல் போல் தோன்றும் ஒரு பெரிய நீலநிற ஏரியும் அதிலிருந்து பனை உயரத்துக்கு மேலெழும்பிப் பாயும் நீரூற்றும் விமானம் அந்நகரில் தரையிறங்கும் முன்பே கூடத் தெரிந்தன. ஸ்விட்ஜர்லாந்தின் மிக முக்கிய நகரமாக ஜெனீவா இருந்தும் அந்நாட்டின் தலைநகரம் 'பெர்ன்' என்ற மற்றோர் அமைதியான ஊர்தான். ஜெனீவா தவிர மற்றொரு

° பிரென்ஸ்விக் நினைவுச் சின்னம்.





° பாலஸ் த நேஷன்ஸ்.

பெரிய நகரம் ஜூரிச்'. பாஸெல் என்ற மற்றொரு பெரிய ஊரையும் சொல்ல வேண்டும். ஐரோப்பாவில் பொருளாதார ஸ்திரத் தன்மை உள்ள நாடுகளில் ஸ்விட்சர்லாந்து முதன்மையானது. மதிப்புக் குறைவது, தேய்வது என்ற நிலைமைகளே இல்லாமல் பல ஆண்டுகளாக மதிப்புப் பெருகியே நிற்கும் நாணயம் ஸ்விஸ் ஃப்ராங்க்தான். இதற்கு இரண்டு காரணங்கள். ஒன்று அதன் வருடாந்திர பட்ஜெட்டில் பாதுகாப்பு இராணுவச் செலவுகள் என்று பெரிதாக எதுவுமே இல்லை. 1515 முதல் – அதாவது 470, ஆண்டுகளாக எந்த யுத்தத்திலும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ இந்நாடு சம்பந்தப்படாததோடு இராணுவ நடுநிலை வகிக்கிறது. பாங்குகள் – பாங்கிங் – வங்கித் தொழிலில் உலக மையமாக விளங்குகிறது. எந்த நாட்டைச் சேர்ந்த யாரும் ஸ்விஸ் பாங்குகளில் முதலீடு செய்யலாம். செய்துள்ளார்கள். அதன் காரணமாக மூலதனம் நிறைந்துள்ளது. 'ஸ்விஸ் பாங்க்' கணக்கு இல்லாத உலகப் பணக்காரர்கள் வெகு சொற்பமானவர்கள் மட்டுமே.


நாட்டின் அறுபது சதவிகித நிலப்பரப்பு வளமான ஆல்ப்ஸ் மலைப்பகுதிகளில் அமைந்துள்ளது. அறுபத்தைந்து சதவிகித மக்கள் மொழியால் ஜெர்மானியர்கள். பதினெட்டு சதவிகிதம் பிரெஞ்சு பேசுபவர்கள். இத்தாலிய மொழியினர் பத்து சதவிகிதத்திற்குக் கொஞ்சம் குறைவாக இருக்கின்றனர். மக்கள் தொகை மிகவும் குறைவு. நிலப்பரப்பு அதிகம்.

ஜெனீவா சுவிட்ஜர்லாந்தின் கேந்திர நகரம். ஐ. நா. சார்ந்த பல சர்வதேச அமைப்புக்கள் இங்கிருந்து இயங்கிக் கொண்டிருக்கின்றன. உலகத் தொழிலாளர் அமைப்பு உலக சுகாதார அமைப்பு யுனிவர்ஸல் போஸ்டல் யூனியன் சர்வ





பழைய ஜெனிவா.



புதிய ஜெனிவா.

தேச டெலி. கம்யூனிகேஷன்ஸ் யூனியன் சர்வதேச மெட்ராலஜிகல் அமைப்பு, அனைத்துலக இண்டலெக்சுவல் ப்ராப்பர்ட்டி அமைப்பு ஜெனரல் அக்ரிமெண்ட் ஆன் டாரிஃப்ஸ் அண்ட் டிரேட் அமைப்பு ஆகியவை ஸ்விட்ஜர்லாந்தில் உள்ளன. இவற்றில் பலவற்றிற்கு ஜெனிவாதான் மைய நகரம்.

மிகப் பல உலக நிறுவனங்கள் ஜெனிவாவில் இருப்பதற்கு முக்கிய காரணம் அதன் மெய்யான நடுநிலைத் தன்மையும் சமாதானச் சூழ்நிலையும். ரோம சாம்ராஜ்யத்திலிருந்து விடுபட்டுத் தனி நாடான காலத்திலிருந்தே இந்த நடுநிலைத் தன்மையையும் சமாதானச் சூழ்நிலையையும் அது கட்டிக் காத்து வருகிறது. நேட்டோ போன்ற இராணுவக் கூட்டமைப்பு எதிலும் அது அங்கம் வகிக்கவில்லை. ஐ. நா. வைச் சேர்ந்த பல அமைப்புக்களில் அது அங்கம் வகித்தாலும் — ஜெனிவா கன்வென்ஷனும் செஞ்சிலுவை இயக்கமும் தோன்றிய நாடாயிற்றே இது! — ஐ. நா. வில் அது உறுப்பினர் பட்டியலில் இல்லை. 1979—ல் ஐ.நா.வுக்குள் சேருவதற்கான முயற்சிகளைக் 'காபினெட்' மேற்கொண்டாலும் இன்றுவரை சுவிட்ஜர்லாந்து ஐ. நா. வில் உறுப்பினராகவில்லை. ஐ. நா. வுக்குக் கொண்டு போய்த்தான் தீர்க்கப்பட வேண்டும் என்கிற மாதிரி எல்லைப் பிரச்னையோ, அண்டை நாடுகளுடனான சர்ச்சையோ எதுவும் அதற்கு இல்லை. 'சமரச சன்மார்க்க நாடான' ஸ்விட்ஜர்லாந்தின் 'ஸ்விஸ் கார்ட்ஸ்' என்ற பாதுகாவல் படையினர்தான் இத்தாலிக்குள் ஒரு தனி இராஜ்ய அந்தஸ்துப் பெற்றுள்ள வாடிகனுக்கும், போப்பாண்டவருக்கும் காவலாக விளங்கி வருகின்றனர். விமான நிலையத்திலிருந்து ஜெனீவா வீதிகளுக்குள் நுழைந்தால் திரும்பிய பக்கம் எல்லாம் கிரெடிட் பாங்குகள் தான் தென்படுகின்றன. கிரெடிட் பாங்குகளுக்கு அடுத்தபடி மரகதப் பசுமையும், தண்ணீர் வளமும் நிறைந்து தெரிந்தது ஜெனிவா நகரம். நகரின் பழைய பகுதி — புதிய பகுதி' எல்லாவற்றையும் சுற்றிக் காண்பிக்கிற 'டூரிஸ்ட் கோச்' ஒன்றில் ஏறினேன்.

ஜெனிவா ஹார்பர், 'ரிஃபார்மர்ஸ் வால்' செயிண்ட் பீட்டர்ஸ் கதீட்ரல், பிரென்ஸ்விக் நினைவுச் சின்னம் பல்வேறு மியூஸியங்கள், டவுன்ஹால் முற்றத்தில் நடக்கும் திறந்த வெளி இசையரங்கு, கிராண்ட் தியேட்டர், பாலஸ் டி நேஷன்ஸ் வளாகம், எல்லாம் பார்க்க முடிந்தது. ஜெனிவா ஏரிக் கரையிலுள்ள பூங்காக்களும், மரக்கூட்டங்களும், புல்வெளியும் என்னை மிகவும் கவர்ந்தன.

மிக உயர்ந்த சிகரமான 'மாண்ட் பிளாங்க்கைச் சென்று காணவும், கேபின் கார் மூலம் (இரும்புக் கயிறு மூலம் மலைச் சிகரம் நோக்கி அந்தரத்தில் இழுக்கப்படும் ரோப்வே கார்) ஏற்பாடு இருந்தது. பருவநிலை — 'காலநிலை தோதாக இல்லாவிடில் இந்தக் கேபின் கார்கள் நிறுத்தப்பட்டுவிடுகின்றன.

புகழ் பெற்ற ஜெனிவா ஏரியில் குறுக்கும் நெடுக்குமாகப் படகில் ஒரு சுற்று ச் சுற்றினேன். 460 அடி உயரம் எழும்பிச் சிதறும் நீரூற்றின் அருகே படகைச் செலுத்திக் காட்டினார்கள். ஜெனிவா ரயில்வே ஸ்டேஷனுக்கு முன் கீழே உள்ள ஓர் அண்டர் கிரவுண்ட் ஷாப்பிங் செண்டரில் காசு போட்டுவிட்டு நம்பரை அமுக்கினால் அந்தந்த நம்பருக்குரிய பண்டங்கள் வந்தன. ஒரு கடையில் பணம் கொடுத்து ஆள் மூலம் வாங்குவதற்கு ஆகும் செலவை விட இந்த மிஷின் மூலம் வாங்கும் பண்டம் விலை குறைவாக வேறு இருந்தது: நம்மூரில் டயல் செய்து போனில் காசு போட்டபின் வாடிக்கையாளரை ஏமாற்றும் டெலிஃபோன் போல ஆகிவிடுமோ என்ற பயத்துடன் காசைப் போட்டுவிட்டு ஒரு கப் 'யோகர்ட்' — அதாவது தயிருக்கான நம்பர்களை அமுக்கினேன். என்ன ஆச்சரியம். ஓசைப்படாமல் இங்கிதமாக ஒரு பிளாஸ்டிக் கப் நிறையத் தயிர் மேலே வந்து நின்றது. டெலிஃபோன் நம்பர்களைப் போல ஒவ்வொரு பண்டத்துக்கும் விலையையும், நம்பரையும் எழுதிப் போட்டிருந்தார்கள். பயப்படாமல் காசைப்

போட்டு வேண்டிய எண்களை அழுத்தி விரும்பியதை வரவழைத்துச் சாப்பிட முடிந்தது. மாலை ஐந்து மணிவரை ஜெனிவா கடை வீதிகளில் சுற்றினேன். அடேயப்பா! எத்தனை வகைக் கடைகள்! எத்தனை வகைப் பண்டங்கள். சிறிதும் பெரிதுமாகக் கடிகாரங்களில்தான் எத்தனை விதம்! ஸ்விட்ஜர்லாந்தின் நினைவுச் சின்னமாக மாட்டுக் கழுத்து மணி — பித்தளையிலானது) அதைக் கோத்து அணியும் பட்டையோடு கடைகளில் விற்கப்பட்டது. இன்னும் சில 'ஸாவனீர்' ஷாப்புகளில் நாகஸ்வரம் போன்ற நீண்ட பித்தளை ஊது குழல் (நம்மூர்க் கோவில்களில் இந்த வாத்தியம் திருச்சின்னம் என வழங்கப்படும்.) களை விற்றார்கள். ஜெனிவாவின் அதியற்புத அழகையே நினைவுச்சின்னமாக மனத்துக்குள் பதித்துக் கொண்டு விமானத்தில் ஜூரிச் கிளம்பினேன். மாலை மணி ஐந்து. விமான நிலையத்தில் ஒரு மணி நேரம் காத்திருக்க வேண்டியிருந்தது. ஸ்விஸ் ஏர் விமானக் கம்பெனியார் சபாஷ் போடும்படியாக காரியம் ஒன்றைச் செய்திருந்தார்கள். காத்திருக்கும் நேரத்தில் உண்ண அல்லது தாக சாந்தி செய்து கொள்ளப் பயன்படட்டும் என்கிற நல்லெண்ணத்தில் போர்டிங் பாஸுடன் இருபது சுவிஸ் ஃபிராங்குக்குக் குறையாத மதிப்புள்ள ஃப்ரீ கூப்பன் ஒன்றைக் கொடுத்தார்கள். அந்தக் கூப்பனை அன்றோ, மறுநாளோ ஸ்விஸ் ஏர் விமானம் செல்கிற எந்த ஐரோப்பிய விமான நிலைய ரெஸ்டாரெண்ட் அல்லது பானக் கடைகளிலும் கொடுத்து வேண்டியதை வாங்கிச் சாப்பிடலாம் என்றார்கள். பயணிகளைக் கவரும் உத்தி.

இங்கோ காலை ஆறு மணிக்குப் புறப்படும் டில்லி விமானத்துக்கு நாலே முக்காலுக்கே வரச் சொல்கிறார்கள். அப்படி நாலே முக்காலுக்கே போய் நின்ற ஒரு தினத்தில் 'ட்யூ டு அன் அவாய்டபிள் ரீஸன்ஸ்' விமானம் காலை 9 மணிக்குப் புறப்படும் என்று போர்டு எழுதிப் போட்டுவிட்டு எட்டே முக்காலுக்குத்தான் போர்டிங் கார்டே கொடுத்தார்கள். பயணிகள் அனைவரும் கொலைப் பட்டினி. விமானத்திலும் காப்பி கூடக் கிடையாது. 11 மணிக்கு விமானம் ஹைதராபாத்திலிருந்து மறுபடி மேலெழும்பிய போதுதான் லஞ்ச் நேரத்திற்கு ப்ரேக்ஃபாஸ்ட் வழங்கப்பட்டது. ஜெனிவா விமான நிலையத்தில் ஸ்விஸ் ஏர் விமான நிறுவனத்தார் தனிக் கூப்பன் கொடுத்து உபசரித்த போது இதை நினைத்துக் கொண்டேன்.

ஓர் அரைமணி நேரப் பயணம். ஜூரிச்சில் சில மணி நேரம் டிரான்ஸிட் பயணியாகச் சுற்றிவிட்டு மறுபடி இரவு அங்கிருந்து ஆஸ்திரியாவின் தலைநகரமான வியன்னாவுக்குப் பறந்தேன். ஆஸ்திரியா, பிரான்ஸ், மேற்கு ஜெர்மனி, மூன்றும் ஸ்விட்ஜர்லாந்தின் எல்லைப்புற நாடுகள். ஆனாலும், போக்கிலும், கொள்கைகளிலும் இந்நாடுகள் தனித் தனி இயல்புடையவை. பிரான்ஸையும், மேற்கு ஜெர்மனியையும் போல நார்த் அட்லாண்டிக் உடன்படிக்கை நாடுகளோடு ஸ்விட்ஜர்லாந்து சேரவில்லை. ஆஸ்திரியாவும் சேரவில்லை. ஈரோப்பியன் ஃப்ரீ டிரேட் அசோஸியேஷன், எகனாமிக் கம்யூனிட்டி ஆகிய உறவுகளை மட்டும் சுவிட்ஜர்லாந்து வைத்துக் கொண்டிருந்தது. ஆஸ்திரியாவும் முழுக்க முழுக்க ஜெர்மன் மொழி பேசுகிற நாடுதான். சொல்லப் போனால் ஜெர்மானியக் கலாசாரம் முழுமையாக விளங்கும், மேற்கத்திய நாடுகளின் பாதிப்பு அதிகமின்றி ஆஸ்திரியா தனது தனித்தன்மையோடு இன்னும் விளங்குகிறது. உலகப் புகழ் பெற்ற மேற்கத்திய சங்கீத மேதைகள், சாஹித்ய கர்த்தாக்களின் பிறப்பிடமான ஆஸ்திரியாவின் தலைநகரில் இறங்கப் போகிறோம் என்ற எண்ணம் மெய்சிலிர்க்க வைத்தது. "ஜெனிவா வரை போகிற பலர் ஆஸ்திரியாவுக்குப் போவதில்லை. வியன்னா மிகவும் அழகான நகரம். வித்தியாசமான நகரம். நீங்கள் கட்டாயம் பார்க்க வேண்டிய நகரம். ஜெர்மன் கலாச்சாரக் கேந்திரம். கட்டிடக் கலையில் புகழ் பெற்ற பல கட்டிடங்கள் அழகு செய்கிற நகரம்" — என்று டஸ்ஸில் டார்ஃபில் கோபாலன் வற்புறுத்தியிருந்தார்.

ஹோட்டல் 'நாய்பவ்' — என்ற விடுதியில் தங்குவதற்கு அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் மூலம் ஏற்பாடு செய்தாயிற்று. ஹோட்டலின் பெயர் 'நாய்பவ்.' அதன் வரவேற்பாளர் பெயர் 'யூ பர் ஜல்' என்று கோபாலன் கூறியிருந்தார். டிபிகல் ஜெர்மன் பெயர்கள். வியன்னா போனதும் நான் செய்த பெயர் குழப்பத்தில் எல்லாம் தாறுமாறாகி விட்டது.

"யூ பர் ஜல் ஹோட்டலில் 'நாய்பவ்' அவர்களைப் பார்க்க வேண்டும் என்று கூறி மற்றவர்களைச் சில கணங்கள் திணற அடித்தேன். கடைசியாக ஒருவர் துணிந்து என்னைத் தெளிவுபடுத்த முன்வந்தார்.

"நாய்பவ் என்று ஒரு ஹோட்டல் இருக்கிறது. தெரியும். 'யூபர் ஜல்' என்று ஹோட்டல் எதுவும் இல்லையே?"—

அவர் கேட்ட பின்புதான் எனக்கே தவறாக மாற்றிச் சொல்லிவிட்டோமோ என்று சந்தேகம் தட்ட ஆரம்பித்தது. பையிலிருந்து டைரியை எடுத்துப் புரட்டிய பின்புதான் என் தவறு புரிந்தது. "சென்னையில் குப்புசாமியைப் பார்க்க வேண்டும் என்பதைக், "குப்புசாமியில் மிஸ்டர். சென்னையைப் பார்க்க வேண்டும்" என்று மாற்றிச் சொல்லியது போல் தாறுமாறு புரிந்திருந்தேன். வியன்னா விமான நிலையத்தில் போய் நான் இறங்கிய போதே மணி இரவு ஒன்பதே முக்கால். பெயர்க் குழப்ப விசாரணையில் அரை மணி ஓடிப் போய்விட்டது. எக்ஸ்சேஞ்ச் கவுண்ட்டரில் தேவையான அளவு ஆஸ்டிரியன் ஷில்லிங்ஸ் மாற்றி வாங்கிக் கொண்டு— கீழே பாதாள ரயிலுக்காக எஸ்கலேட்டரில் இறங்கினால் இரயில் நிலையம் வெறிச்சோடிக் கிடந்தது. ஆள் நடமாட்டமே இல்லை.

(தொடரும்)

சென்னை வருகிறாள் ஸ்ரீபுவனேச்வரி!



புவனம் பதினான்கையும் பூத்தவண்ணம் காத்தருளும் ஸ்ரீபுவனேச்வரி சென்னை வருகிறாள்!

சென்னை ஆதம்பாக்கம் ஆண்டாள் நகர் என வழங்கும் உத்தர நவசாலபுரியில் எழுந்தருளி அருள் பாலிக்கப் போகிறாள்!

(பரங்கிமலை ரயில் நிலையத்திலிருந்து தென் கிழக்கே இரண்டு கி. மீ. தொலைவில் ஆண்டாள் நகர் உள்ளது.)

ஆண்டாள்நகர் அன்பர்கள் அமைத்துள்ள ''ஸ்ரீபுவனேச்வரி பக்த மண்டலி''யின் நன்முயற்சியால், சுமார் இரண்டு கிரவுண்ட் மனையில் அன்னைக்கு ஆலயம் எழும்பவிருக்கிறது.

ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி ஆசார்யர்களின் அருளாசியாலும், புதுக்கோட்டை ஸ்ரீசாந்தாநந்த ஸ்வாமிகளின் அருள் வழி காட்டுதலாலும் மனையில் ஸ்ரீஸௌந்தர விநாயகருக்கு ஆலயம் அமைத்துக் கும்பாபிஷேகம் செய்யப்பட்டிருக்கிறது.

அமர்ந்த கோல அன்னையின் அழகுச் சிலை வடிவம் 5½ அடி உயரம் கொண்டதாக வடிக்கப் பெற்று ஆலயமனையில் தரிசனத்திற்காக வைக்கப்பட்டுள்ளது.

பொருளுதவி புரிந்து புவனேச்வரியின் பேரருளைப் பெற அனைவரையும் வேண்டுகிறோம்.

மணி ஆர்டர் / செக் / டிராப்ட் அனுப்பவேண்டிய முகவரி: தலைவர், ஸ்ரீபுவனேச்வரி பக்தமண்டலி, 25, ஆண்டாள் நகர் விரிவுப் பகுதி, ஆதம்பாக்கம், சென்னை-600 088. (ஃபோன் 433927)

ஸமரியாஸ் ரொக்கப் பத்திரங்கள்

பொன்னான முதலீடு திட்டம்

எங்கள் எல்லா கிளைகளிலும்

மார்ச் 30 வரை

லாபகரமாக முதலீடு செய்பவர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு

36 மாதங்கள்		60 மாதங்கள்		
இப்போது நீங்கள் செலுத்தும் தொகை ரூ.	வழக்கமாக செலுத்தும் தொகை ரூ.	இப்போது நீங்கள் செலுத்தும் தொகை ரூ.	வழக்கமாக செலுத்தும் தொகை ரூ.	திருப்பி நீங்கள் பெறுவது ரூ.
550	585	400	450	1000

SAMARIAS


ஸமரியாஸ் பைனான்ஸஸ்

நிர்வாக அலுவலகம்:
ஸமரியாஸ் ஹவுஸ்
29, லஸ் அவின்யூ, சென்னை-600 004

போன்:
75523
75524



ஆப்ரிக்க மாணவர்களின் மனக்குறை



நம்மைப் பற்றி இங்குள்ள ஆப்பிரிக்க மாணவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை அறியச் சென்னைக் கல்லூரிகளில் படிக்கும் சில ஆப்பிரிக்க மாணவர்களைச் சந்தித்த போது, அவர்களிடமிருந்து வெளிப்பட்ட சில வேதனைகள்...

* இந்தியர்கள் எல்லோருமே ஏதோ ஒரு அதிசயப் பிராணியைப் பார்ப்பது போல எங்களைப் பார்க்கிறார்கள்.

* கல்லூரியில் சக மாணவர்கள் கூட எங்களுடன் சகஜமாகப் பழகுவதில்லை.

* எல்லா இடங்களிலும் எங்களை ஏமாற்றுகிறார்கள். ஏளனம் செய்கிறார்கள்.

* தெருவில் செல்லும்போது, சிறுவர்கள் கூட எங்களைக் கேலி செய்து, சில சமயம் கல் வீசுகிறார்கள்.

* குடியிருக்க வாடகைக்கு வீடுகள் இங்கு சுலபமாகக் கிடைப்பதில்லை. அப்படிக் கிடைத்தாலும் பிறரை விட பன்மடங்கு அதிக வாடகையையும், நிபந்தனைகளையும் எங்களுக்கு விதிக்கிறார்கள். முன்னறிவிப்பின்றி வீட்டைக் காலி செய்யச் சொல்லி மிரட்டவும் செய்கிறார்கள்.

* அன்பும், விருந்தோம்பல் குணமும் எங்களைப் பொறுத்தமட்டில் காணப்படுவதில்லை.

* வெளிநாட்டுக்காரன் என்கிற ஒரே காரணத்தால் நாங்கள் எல்லாக் கஷ்டங்களையும், கேவலங்களையும் பொறுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

பேட்டி : சி. ரகுராமன்,
கலையியல்-மூன்றாம் ஆண்டு, பொருளியல்,
து. கோ. வைணவக் கல்லூரி,
சென்னை-106.


புகை பிடிப்பது குறைந்து வருகிறது!

சமீப காலங்களில் பிரிட்டிஷ் மக்கள் மிகவும் குறைவாகவே புகைபிடிக்கிறார்கள். 1972-ல் அங்குள்ள ஆண்களில் 52 சதவீதம் பேர் புகைபிடிக்கும் பழக்கம் உடையவராய் இருந்தனர். ஆனால் தற்போது 38 சதவீத ஆண்கள் தான் புகைபிடிக்கும் பழக்கம் உடையவராய் உள்ளனர். பெண்களில் 42 சதவீதம் பேர் புகைபிடிக்கும் பழக்கம் உடையவராய் இருந்தனர். தற்சமயம் 33 சதவீதம் பேர் புகைபிடிக்கின்றனர்.

இருபது ஆண்டுகளுக்கு முன் சிகரெட் பிடிப்பதை ஒரு நாகரீகமாகக் கருதி வந்தனர். அந்தக் கால கட்டத்தில் வெளியான சினிமாப் படங்களில் அனைவரும் சிகரெட்டைத் தங்கள் கைகளில் வைத்திருந்தனர். அறிவியல் வளர்ச்சி ஏற்பட்டுப் புற்றுநோய்க்கும், சிகரெட்டுக்கும் தொடர்பு உள்ளது என அறிந்தவுடன் அனைவரும் படிப்படியாக சிகரெட் பிடிப்பதைக் குறைக்க ஆரம்பித்துள்ளனர். அங்குள்ள தொலைக்காட்சிகளில் கூட சிகரெட் விளம்பரத்தைத் தடை செய்து வருகிறார்கள். இருபது ஆண்டுகளுக்கு முன் சிகரெட் பிடிப்பதை நாகரீகமாக எண்ணியவர்கள் தற்போது உடலுக்குத் தீ வைப்பது போல் அதனை எண்ணுகிறார்கள்.

பிரிட்டனிலுள்ள, புகை பிடிக்கும் பழக்கத்தை எதிர்க்கும் கழகத்தின் தலைவர் டேவிட் சிம்சன் இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ளார். சிகரெட் பிடிக்கும் பழக்கம்





மாணவர் பக்கங்கள்

தேவை ஒரு தந்திரம்

மண்ணைப் பொன்னாக்கும்
விஞ்ஞானமே,
பொய்யை மெய்யாக்கும்
சட்டமே
நரகத்தைச் சொர்க்கமாக்
கும்
மந்திரமே
உங்களில் ஏதுவும்
எங்களுக்கு வேண்டாம்.
எங்களின் இப்போதைய
அவசிய அவசர
தேவையெல்லாம்
எங்கள் ஜாதிகளை
ஒன்றாக்கும்
ஒரு தந்திரமே!




பாரதி



எங்கள் எம். எல். ஏக்க
ளுக்கு
நீ மிகவும்
கடமைப்பட்டிருக்கிறாய்.
''செல்வீர் எட்டுத்திக்கும்
செல்வங்கள் யாவும்
கொணர்ந்திங்கு சேர்ப்பீர்''
என்றாயே
நின்
எண்ணத்தை நிறைவேற்
றியவர்கள்
எங்கள் எம்.எல்.ஏக்களைத்
தவிர
யாராக இருக்க முடியும்?
மேலை நாடுகள் முதல்
கீழை நாடுகள் வரை
சென்று வந்து
செல்வங்களைச் சேர்த்துக்
கொண்டே இருக்கின்றனர்.
இவர்களால்
உனக்கு
நூற்றாண்டு விழா எடுக்கப்
படுவது
மிகப் பொருத்தமே.

இரா. ஜெகநாதன்,
இளங்கலை இரண்டாம்
ஆண்டு, ஆங்கில இலக்கி
யம்.
தூய வளனார் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி.



பிறவிப் பயன்



தென்றலாய் பிறக்கவில்லை
தேன் மலரை தீண்டவில்லை
அருவியாய் பிறக்கவில்லை
ஆற்றினிலே ஓடவில்லை

கல்லாய் பிறக்கவில்லை
கடவுளாய் மாறவில்லை
கண்ணே நான் பிறப்பெடுத்
தேன்
காவலனாக உன்றன்
கரம் பிடிக்கும் காதலனாக.

குறைந்து வருவதனால் இறப்பு விகிதம், நோய்கள் குறைகின்றன என்கிறார்.

அமெரிக்கா, பிரிட்டன் போன்ற பல நாடுகளில் தற்சமயம் **No Smoking Day** அனுஷ்டிக்கிறார்கள். அதாவது, வாரம் ஒரு நாள் புகை பிடிப்பதில்லை என்று ஆரம்பித்துப் படிப்படியாக அதிகரித்துச் செல்வது.

ஜே. சௌந்தரபாண்டியன்,
இளங்கலை இரண்டாம் ஆண்டு, (பொருளாதாரம்),
தூய யோவான் கல்லூரி,
பாளையங்கோட்டை.

புகழ்பெற்ற 'ஹொகனேக்கல் நீர்வீழ்ச்சி'. ஒருபுறம் காட்டு யானைகள் நீர் அருந்துவதற்காக ஒதுக்கப்பட்டு, ''காட்டு யானைகள் தண்ணீர் குடிக்குமிடம்'' என்ற வாசகம் எழுதப்பட்ட பலகையும் வைக்கப்பட்டுள்ளது! காட்டு யானைகள் குட்டிகளுடன் வந்து தண்ணீர் குடிக்கும் காட்சியைக் காணவும் முடிகிறது.

நேரில் பார்த்து எழுதியவர்:
நா. மலையப்பன்,
முதலாண்டு பி.எஸ்ஸி வேதியியல்,
ஸ்ரீ சேவுகன் அண்ணாமலைக் கல்லூரி,
தேவகோட்டை, இராமநாதபுரம் மா.வ.



ஹெலிகாப்டரில்

* ஜெய வசந்தன், கோவை—45.

? மேத்தாவின் வரிகளில் மனத்தைப் பறி கொடுத்தது எதில்?

! நிறையவே கூறலாம்.. பதமான ஒரு சோறு: ''தேசப் பிதாவுக்கு ஒரு தெருப் பாடகனின் அஞ்சலி'' கவிதையில்...

சேரிகளில் மட்டுமே நீ
யாத்திரை செய்வாய்
என்பதைத்
தெரிந்து கொண்டதால்
உன்னை நேசித்தவர்கள்
தேசத்தையே
சேரியாக மாற்றிவிட்டார்கள்!

* ஜெயந்தி முத்துராம், பாஜூர்.

? டெல்லி, பம்பாய், கல்கத்தா இங்கெல்லாம் இல்லாத எந்த சிறப்பம்சம் சென்னையில் உள்ளது?

! அழகான மெரீனு என்று முன்பு சொல்லிக் கொண்டிருந்தோம்...



புதிர்

* ஏ. சங்கர வடிவேல், வேதாரண்யம்.

? தங்களுக்குப் பிடித்த விளையாட்டு கபடியா, வாலிபாலா? கிரிக்கெட்டா?

! கபடியில் முரட்டுத்தனம் அதிகம். அதனுல் எனக்கு அவ்வளவாகப் பிடிக்காது; கிரிக்கெட் ரொம்பப் பாப்புலர், நானும் ஆடியிருக்கிறேன்; இளம் வயதில். இப்போதும் டீ. வியில் பார்க்கப் பிடிக்கிறது. ஆனுல் மிக அதிகமான நேரம் வீணுகிறது. ஆனுல் வாலிபால்! குறைந்த நேரத்தில் மிக அதிகமான தேகப்பயிற்சி தருகிற கண்ணியமான விளையாட்டு அதுதான். எனவே எனது முதல் வோட்டு வாலிபாலுக்கே.

* கே. கணேஷ், சென்னை—6.

? பெண்களால் செய்ய முடியாத காரியம்?

! ஆண்கள் செய்யக் கூடிய எந்தக் காரியத்தையும் எங்களாலும் செய்ய முடியும் என்று பெண்கள் நிரூபித்து வருகிறுர்கள். ஆனுல் பெண்கள் செய்யக் கூடிய ஒரு காரியத்தை ஆண்களால் செய்யவே முடியாது! எனவே ஆண்களால் செய்ய முடியாத காரியம்...? என்று நீங்கள் கேள்வி எழுப்பியிருந்தால் சுலபமாய்ப் பதில் கூறலாம்.

* எம். ஷர்புதீன், தோப்புத்துறை.

? உலக சாம்பியன் கிரிக்கெட்டில் இந்திய அணி இவ்வளவு சாதனை புரியும் என்று எதிர்பார்த்திரா?

! யார்தான் எதிர்பார்த்தார்கள், வெஸ்ட் இண்டீஸ் இப்படித் தடுமாறிப் போகுமென்று! அல்லது ஆஸ்திரேலியா கலகலத்துப் போகுமென்று! இந்த சீரிஸில் எல்லாமே சர்ப்ரைஸ்தான்.

* ஆர். கே. லிங்கேசன், மேலகிருஷ்ணன் புதூர்.

? சாகித்ய அகாதமி பரிசு கிடைக்கவில்லையே என்று எப்போதாவது தாங்கள் ஆதங்கப்பட்டதுண்டா?

! கிடைக்க வேண்டியவர்களுக்குக் கிடைக்கவில்லையே என்று வருந்தியதுண்டு.

மா. புகழேந்தி. வாணியம்பாடி

* அண்மையில் குடும்பக் கட்டுப்பாடுப் பிரசாரம் ஹெலிகாப்டரில் நடத்திய தமிழக அரசு பற்றி?

! தமிழக அரசுக்குச் சொந்தமான ஹெலிகாப்டர் துரு ஏறுமல் ஏதாவது வேலை தரப்பட வேண்டுமல்லவா? ஹெலிகாப்டரிலிருந்து வீசப்படும் துண்டுப் பிரசுரங்கள் உரியவர் கைக்குப் போய்ச் சேராமல் வீணுவதே அதிகமாயிருக்கும். மொத்தத்தில்... எத்தனையோ வீண் செலவுகளில் ஒன்று. கு.க. பிரசாரம் குடிசை குடிசையாகப் போய் மனம் மாற்ற முயல்வதிலேயும் பொதுவாகக் கல்வித்தரத்தையும் கல்வி பெறுவோர் எண்ணிக்கையையும் அதிகரிப்பதிலேயும்தான் வெற்றிபெற முடியும்.

* பி. பத்மநாபன், வலங்கைமான். *

? என். டி. ராமராவ் தொடங்கப் போகும் பாரத தேசக் கட்சி இந்தியாவின் சிறந்த எதிர்க்கட்சியாக விளங்குமா?

! சிறந்த எதிர்க்கட்சிகளாகப் பல உள்ளன. இவை இணைந்து ஒரே சிறந்த எதிர்க் கட்சியாகுமா என்பதுதான் பிரச்னை. அப்போதுதான் இந்திய ஜனநாயகத்துக்கு விமோசனம்.

* வெ. கோபால், மாதேமங்கலம்.

? தாங்கள் சவாரி செய்த முதல் வாகனம் எது?

! அப்பாவின் முதுகு.

* துர்கா ராமதாஸ், பாகூர்.

? பூ விலங்கு முரளிக்கு யார் சிறந்த ஜோடி? — குயிலி, தாரா, அனிதா, இளவரசி...?

கு.க.பிரச்சாரம் பற்றி...?



! முரளியைப் பார்த்தால் பால் வடிகிறது. அவருக்குக் குயிலியா? அக்கா வேடம் என்றால் சரி; அனிதா— இந்த நகரத்துக்கும் அந்தக் கிராமத்துக்கும் சரிப்படாது. இளவரசி — கூட்டிக் கழித்துப் பார்த்தால் இளவரசி தேறி விடுவார்; அது சரி, தாரா யார்?

*** உ. அசோக்பாபு, மணப்பாறை.**
? தமிழகத்தில் இன்று புரிந்து கொள்ள முடியாத புதிர்?

! காஞ்சி முனிவரைத் தரிசிக்கச் சென்ற முதல்வர், பரமாச்சாரியாருக்கு உடல் நலக் குறைவென்று கேள்விப்பட்டதாகவும் நலம் விசாரிக்க வந்ததாகவும் கூறியது.

*** அ. ராஜா ரஹ்மான், உத்தமபாளையம்.**
? நபிகள் நாயகம் உபதேசங்களில் உங்கள் உள்ளம் கவர்ந்தது?

! "உங்களை விடப் பொருளாலும் அந்தஸ்த்தாலும் வடிவாலும் தாழ்ந்தவர்களையே நோக்குங்கள். உங்களை விடவும் மேற்கண்டவற்றில் மேம்பட்டவனை நோக்கி மனம் புழுங்காதீர்கள். அப்போதுதான் அல்லாஹ் உங்களுக்கு அளித்துள்ள பாக்கியங்களைக் குறைவுபட நினைக்க மாட்டீர்கள்."

*** ஸ்ரீரேவதி பிரியன், ஈரோடு.**
? சமீபத்தில் படித்து ரசித்த புத்தகம்?

! உங்களைப் போன்று கேள்விக் கணைகள் தொடுப்போருக்கு ஷொட்டு கொடுக்கும் ஒரு நூல்! நேரம் நல்ல நேரம் ஒலிபரப்பில் கவிஞர் வைரமுத்துவைக் கல்கி அன்பர்கள் கேட்ட கேள்விகளும் அவற்றுக்கு அவர் அளித்த சுவையான பதில்களும் நூல் வடிவம் பெற்றுள்ளன. படைப்பாளியைப் படிப்பாளி புரிந்து கொள்ள இந்த நூல் உதவும் என்று வைரமுத்து சொல்லுகிறார். ஆசிரியர் புலிவேட்டையாடிக் கொண்டிருக்கும் போது வாசகர் தூண்டிலோடு வந்து விடக் கூடாதல்லவா? அது போன்ற விபத்தை, இதுபோன்ற நூல் தடுத்துவிடும்! விபத்தைத் தடுப்பது மட்டுமல்ல, 'கேள்விகளால் ஒரு 'வேள்வி' என்ற நூல் ஓர் . இலக்கிய விசாரணையாகவும் திகழ்கிறது. கேள்வித் தீ வைரமுத்துவுக்கு ஆளிக்காய மூட்டப்பட்டதல்ல. அவரைச் சோதிக்க உருவானது. அதில் புடமிட்ட பொன்னாக ஒளிர்கிறார். காரணம், கேள்விகளை அவர் கசப்பு மாத்திரைகளாகக் கருதாமல், வியாதிகளை வேரறுப்பவை என்ற எண்ணத்தில் நேசித்ததால்தான்.
திருமகள் நிலையம், சென்னை—17.
விலை ரூ 8.

*** ரூ. 10 பரிசு பெறுபவர்:**
பி. பத்மநாபன்,
66, சேணியர் தெரு,
வலங்கைமான்,
தஞ்சை (மா.வ.) 612 804.

நீங்கள் கேட்டவை தராசு



* பதிகொடுக்க வரி




* இந்தியாவின் சிறந்த...



* ஜோடி யார்?



* வேள்வி.



அன்புள்ள ரஜினிகாந்த்தை அழைத்த டைரக்டர், தேவர் ஃபிலிம்ஸ் காம்பவுண்டில் நுழைந்தவுடனேயே டிரஸ்ஸை மாற்றிக் கொண்டு விட்டார்.

செல்வி

ரேவதி – சுரேஷ் – ஜீவிதா – சற்று அர்த்தமில்லாத முக்கோணம். திலீப் வகையறா என்று மூன்று நண்பர்களாம் பணக்கார சுரேஷுக்கு. அவரை ஏமாற்றிப் பணத்தை லூட்டியடித்துக் கொண்டிருக்கிறார்கள். கிராமத்து ரேவதியை சுரேஷ் பார்த்ததும், ''தேவி, செல்வி'' என்று வழிந்துவிட்டு அவரையே மணந்துகொண்டு நகரம் வருகிறார். நண்பர்களிடமிருந்து சாவிக் கொத்தை மனைவி கைக்கு மாற்றுகிறார். அவர்கள் எப்படி அடாவடித்தனம் பண்ணி அதை மீட்க, ரேவதியை விட்டை

உத்தமி

ஒரு மாதிரியான கதை. ராஜேஷுக்கு டாம்பீகமான மனைவி; கள்ளக் கடத்தல் நடத்தும் முதலாளி.

முதலாளியுடன் மனைவியைப் பார்த்துவிட்டு ரயிலிலிருந்து தண்ணீரில் குதித்து ஒரு தற்கொலை முயற்சி தோல்வி. காப்பாற்றியது வேறு யார் சுஜாதா.

எத்தனை நல்ல சுஜாதா! எத்தனை நல்ல ராஜேஷ்! சுஜாதாவுக்கு எத்தனை நல்ல அப்பா!

எனவே ராஜேஷின் பூர்வீகம் பற்றி விசாரிக்காமல் சுஜாதாவுக்கே கல்யாணம் செய்து கொடுக்க, அமைதியான குடும்பம். சிவசங்கராய் இருந்த ராஜேஷ் சிவராம் என்ற பெயருடன் கட்டிடங்கள் கட்டுகிறார். தொழில் விருத்தி. ஆஸ்பத்திரிகள், பள்ளிக்கூடங்கள், மரங்கள், குட்டைகள் என்று எல்லாவற்றிற்கும் சிவராம் என்று பெயர் வைத்துச் சிவராம் நகர் பெரிதாய் உருவெடுத்த நேரம் பழைய மனைவி கடத்தல் தலைவியாய்க் குறுக்கிடுகிறாள்.

சிவராமின் பின்னே பிரதேசத்தையே கலக்கும் ஒரு முரட்டு நேர்மை இன்ஸ்பெக்டர். அவனை அடக்கிவை. இல்லையென்றால் உன் பழைய கதை வெளிவரும்' என்று முதல் மனைவி மிரட்ட ராஜேஷுக்குக் கோழையாய் இருந்து சுஜாதாவை திருப்தி செய்வதா, வீரமாய் இருந்து வருவதை எதிர்கொள்வதா என்று குழப்பம். அப்புறம் எல்லாம் நேர்ப்படுகிறது.

இன்ஸ்பெக்ட''ராய் இளவரசன். சுழற்றி விட்ட பம்பரம் மாதிரி அப்படி ஒரு சுறுசுறுப்பு. இளவரசன் ஆள்வதற்கு நல்ல ராஜாங்கம் காத்திருக்கிறது. சண்டைக் காட்சிகளில் வெகு துடிப்பு. காதல் காட்சிகளில் லயிப்பு. ஜமாய்க்கிறார்.

சுஜாதா கலபயாய்ச் சிரிக்கிறார். கலை

வெள்ளித்திரை



விட்டே துரத்துகிருர்கள், எப்படி எல்லாரும் சண்டை . போட்டுச் சட்டை கிழிந்த பின் ஒன்று சேர்கிருர்கள் என்பதே மூலக் கதை(?)

ஆஸ்தான நாய்களுக்கு இதில் ஒரு அருமையான காட்சி.

சுரேஷ் வீட்டுப் பெண் நாய் ஜூலியை யாரோ குடிகாரன் ஜீப்பில் கடத்திப் போக ரேவதியின் செல்ல நாய் ராமு துரத்திப் பிடித்து மீட்டு அழைத்து வர, வழியில் இடி, மின்னல், மழை. மழைக்கு ஒதுங்கும் வீட்டிற்குள்ளிருந்து இன்பமுனகல்களோடு ஒரு பாட்டு. அந்த டூயட்டின் ராகம் கேட்டு நாய்கள் ஒன்றை ஒன்று பார்த்துக் கொள்கின்றன. கனவு விரிகிறது. பின்னணியில் 'லாலல்லா. ராஜா, ராணி உடை மாட்டி — நாயகன் — நாயகி — சுற்றிலும் 'தேவதை வெள்ளை உடை' போட்டுக் குட்டி நாய்களின் குதிப்பு. வெள்ளைக் குதிரையில் ஆரோகணித்துக் கடற்கரையோரம், ஸ்லோ மோஷன். பூக்குவியலிலிருந்து நாய்கள் தலையைச் சிலுப்பிக் கொண்டு ஃபிரேமுக்குள் வரும் காட்சிகள் — என்று ''இளமழையில் பல கனவு...'' டூயட் புகழ் டைரக்டர்களைப் பற்றி ஒரு சுவாரஸ்யமான நையாண்டி.

முதல் இரவு அறையில், ரேவதி பட்டணத்தில் 'அது இருக்குமா, இது இருக்குமா?' என்று வரிசையாய் அப்பாவித்தனமாய்க் கேட்டுக் கொண்டே போக.. சுரேஷ் பொறுமையிழந்து, ''பட்டணம் பத்தி இன்னொரு வார்த்தை கேட்டே.. அவ்வளவு தான்,'' என்று பொருமும் இடமும் தனி.

பூ விற்கும் அடாவடி காந்திமதியிடம் ரேவதி வந்து தஞ்சம் புகுவதும் அவருக்காகக் காந்திமதி தூது போவதும், மருந்து வாங்கப் பணமில்லை என்று கேள்விப்பட்டதும் சினிமாவில் நாய் நடிக்கப் போவதும் சரியான தேவர் ஃபார்முலாக்கள். ''தங்க் வீடு எங்க இருக்கும்மா?'' என்று காந்திமதியிடம் கேள்வி. ''பெருமாள் கோவில் பக்கம் வந்து கனகம் வீடு எதுன்னு கேட்டாப் பெருமாளே சொல்லுவாரு'' என்று நறுக்கென்று நொடிக்கிருரே. டிப்பிகல் காந்திமதி.

வியட்நாம் சுந்தரம் வசனம். ஆண் நாய் கொஞ்சம் அத்து மீற, பெண் நாய் அதை அடக்கும் போது, ''மன்னிச்சுடு. நான் ஒரு நிமிஷம் மனுஷன் மாதிரி நடந்துக்கிட்டேன்'' என்று வருகிற ஒரு வசனம் டாப்.

மற்றபடி ஏனோதானோ.

செல்வி செல்லுபடியாகும்.

மாய், அழுகிருர். கவலையில்லாமல் கரையேறுகிருர். ராஜேஷ் ஆரம்பத்தில் கலர் கலராய் கோட் போடுகிருர். பின்னல் ஒவ்வாத நரையுடன் கம்பெனி மீட்டிங்குகளில் காரமில்லாமல் அலைகிருர்.

காமிராக் கோணங்களில் நடிகைகளின் (சங்கீதா, தேவிஸ்ரீ) திறந்து போட்ட கால்கள், நிறைய. சங்கர் கணேஷ் இசையில் 'ஆனந்த ராகம் அலைமோதும் நேரம்' இனிமை.

உத்தமி என்ற தலைப்பு படத்துக்கு. சுஜாதா 'தான் உத்தமியா, எப்படி?' என்பதை விளக்கியிருந்தால் சௌகர்யமாயிருந்திருக்கும்.

ஜெயமன்மதன்



ஸ்ரீ காஞ்சி காமகோடி பீட கர்நாடக சங்கீத ஸேவா ட்ரஸ்ட் சங்கீத மும்மூர்த்திகள் ஜெயந்தி உத்ஸவம்-திருவாரூர்-ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் ஆசியுடன் திருவாரூர் (மேல வடம்போக்கித் தெரு) ஸ்ரீ முத்துஸ்வாமிதீக்ஷிதர் மண்டபத்தில் நடைபெறும்.

26—3—85 செவ்வாய்	ஸ்ரீமுத்துஸ்வாமி தீக்ஷிதர் ஜெயந்தி — காலை 8-00 நாதஸ்வரம் காலை 8 - 30 B. ராஜம் அய்யர் — நவாவரணம் —		
	மாலை—5-00 இஞ்சிக்குடி கந்தஸாமி பார்ட்டி நாதஸ்வரம்	6-30. B. ராஜம் அய்யர் - பாட்டு V. V. ரவி - வயலின் Dr. T. K. மூர்த்தி - மிருதங்கம்	8-00 D. K. ஜெயராமன் - பாட்டு V. V. ரவி - வயலின் Dr. T. K. மூர்த்தி - மிருதங்கம்
22—4—85 திங்கள்	ஸ்ரீஷ்யாமாசாஸ்திரி ஜெயந்தி (அவர் இல்லத்தில் காலை 8 - 00 நாதஸ்வரம்) கோட்டூர் ராஜரத்னம் — நாதஸ்வரம்	மணி கிருஷ்ணஸாமி - பாட்டு ராமானுஜாசார்யுலு - வயலின் M.N. கந்தஸாமி - மிருதங்கம்	மதுரை T. N. சேஷகோபாலன் - பாட்டு நாகை முரளிதரன் - வயலின் ஸ்ரீமுஷ்ணம் ராஜாராவ் - மிருதங்கம்
23—4—85 செவ்வாய்	T. V. சங்கரநாராயணன் - பாட்டு திருப்பாற்கடல் வீரராகவன் - வயலின் பெங்களூர் T. A. S. மணி - மிருதங்கம்	C. ஸரோஜா C. லலிதா - பாட்டு (பம்பாய் ஸஹோதரிகள்) இக்கல் பாஸ்கரன் - வயலின் R. ரமேஷ் - மிருதங்கம்	Dr. N. ரமணி - புல்லாங்குழல் T. ருக்மணி - வயலின் குருவாயூர் துரை - மிருதங்கம்
24—4—85 புதன்	அருந்ததி ஸர்க்கார் - பாட்டு திருவாரூர் பாலம் - வயலின் தஞ்சாவூர் குமார் - மிருதங்கம்	Dr. செம்மங்குடி ஸ்ரீநிவாஸய்யர் - பாட்டு லால்குடி ஜி. ஜெ. ராமன் - வயலின் வேலூர் ராமபத்ரன் - மிருதங்கம்	T. S. பாலகிருஷ்ண சாஸ்திரிகள் ஹரிகதை சங்கீத மும்மூர்த்திகளின் தேவி வழிபாடு.
25—4—85 வியாழன்	ராதா ஜெயலெக்ஷ்மி - பாட்டு. கண்டதேவி அழகிரிஸாமி - வயலின் குத்தாலம் விசுவநாதய்யர் - மிருதங்கம்	திருச்சூர் V. ராமச்சந்திரன் - பாட்டு G. J. R. கிருஷ்ணன் - வயலின் T. V. கோபாலகிருஷ்ணன் - மிருதங்கம்	U. ஸ்ரீநிவாஸ் - மாண்டலின் திருவள்ளூர் பார்த்தசாரதி - வயலின் ஸ்ரீமுஷ்ணம் ராஜாராவ் - மிருதங்கம்
26—4—85 வெள்ளி	P. S. நாராயணசாமி - பாட்டு V. V. சுப்ரமணியம் - வயலின் காரைக்குடி R. மணி - மிருதங்கம்	நேதனூரி கிருஷ்ணமூர்த்தி - பாட்டு M. சந்திரசேகரன் - வயலின் தஞ்சை - ராமதாஸ் - மிருதங்கம்	R. பிச்சுமணி - வீணை வொம்கத்தர் - மிருதங்கம்
27—4—85 சனி	ஸ்ரீ தியாகராஜர் ஜெயந்தி (அவர் இல்லத்தில்) காலை 8-00 — நாதஸ்வரம்		Dr. M.L. வஸந்தகுமாரி - பாட்டு A. கன்னியாகுமாரி - வயலின் திருவாரூர் பக்தவத்ஸலம் - மிருதங்கம்
	R. வேதவல்லி - பாட்டு C. லக்ஷ்மிநாராயணன் - வயலின் உமையாள்புரம் மாலி - மிருதங்கம்	மதுராந்தகம் V. சந்தானம் - பாட்டு லால்குடி G. ஜெயராமன் - வயலின் உமையாள்புரம் K. சிவராமன் - மிருதங்கம்	
28—4—85 ஞாயிறு	காலை. 8-30 P. வஸந்தகுமார் - வீணை திருவிடைமருதூர் ராதாகிருஷ்ணன் - மிருதங்கம் 5-30 திருவாரூர் S. சேதுராமன் குளிக்கரை S.P. விசுவலிங்கம் - பாட்டு V. தியாகராஜன் - வயலின் திருவனந்தபுரம் துரைஸாமி - மிருதங்கம்	காலை 10-00 Dr. S. ராமநாதன் - பாட்டு S.D. ஸ்ரீதர் - வயலின் உதயசங்கர் - மிருதங்கம் 7-00 Dr M. பாலமுரளிகிருஷ்ணா - பாட்டு பூர்ணசந்தர் - வயலின் தஞ்சை உபேந்திரன் - மிருதங்கம்	மாலை. 4-00 ஸ்ரீமதி பிரமானந்தம் B. அநுராதா - இரு வயலின் B. ஸ்ரீராம் - மிருதங்கம் இரவு 8-30 நாதஸ்வரம் ஆஞ்சநேய உத்ஸவம்.

சங்கீத வித்வான்களும் ரசிகப் பெருமக்களும் வருகைதந்து சிறப்பித்து சங்கீத மூர்த்திகளின் ஆசியைப் பெறுமாறு கோருகிறோம்.

On behalf of the Trustees லால்குடி G. ஜெயராமன் Convenor & Trustee

அட்டைப்பட அணங்குகள்



மஞ்சுளாவைச் சந்திக்கிறார் மீனா

மஞ்சுளா பத்மநாபன்

சித்திரங்கள் வரையாத ஆங்கிலப் பத்திரிகைகளே பம்பாயில் கிடையாது. தவிர, புகைப்பட நிபுணர்; கார்ட்டூன் சித்திரக்காரர்; டிசைனர்; கலை விமர்சகர்; எழுத்தாளர்; நாடக ஆசிரியர்! இவர் எழுதிய முதல் நாடகத்தைச் சமீபத்தில் சென்னையில் நடித்தார்கள்...

மீனாராமன்:

ஸ்டேட் பாங்கில் பணிபுரிபவர்; கல்கத்தாவிலிருந்து பரத நாட்டியம் பயிலச் சென்னை வந்தவர்; பல விளம்பரங்களுக்கு மாடல் ஆகப் பணிபுரிபவர்.

* * *

மஞ்சுளா: மீனா, உங்களை ஒரு மாடலாகக் கருதிக் கொள்கிறீர்களா? இல்லை டான்ஸராகவா?

மீனா: மாடல் ஆக வருவதற்கு முன்னேயே நடனம் ஆட ஆரம்பித்துவிட்டேன் நான். ஆக, முதலில் என்னை நாட்டியக் கலைஞராகத்தான் நினைத்துக் கொள்கிறேன். முழு நேர மாடலாக இருக்க வேண்டும் என்றால் நிறைய நேரம் அதற்காகச் செலவிடத் தயாராக இருக்க வேண்டும். முழு நேர டான்சர் என்றாலும் அப்படித்தான். ஆனால் நான் பாங்கில் பணியாற்றுகிறேன். ஆகவே பகுதி நேர வேலைகளாக இவற்றைச் செய்து வருகிறேன். எது எதற்கு எவ்வளவு நேரம் தேவையோ அது அதற்கு ஒதுக்கிவிடுவேன் சுவாரசியமான மாடலிங் வேலை வரும் பொழுது அதையும் விட்டுவிட மாட்டேன்

மஞ்சு: ஸ்டேட் பாங்கில் பணியாற்றிக் கொண்டே, நடனம், விளம்பர மாடலிங் எல்லாம் செய்ய முடிகிறதா?

மீனா: மிகவும் அவசியமானால் ஒருநாள் இரண்டு நாள் லீவு போட்டுவிடுவேன். நடனத்துக்குத்தான் முதல் இடம். பதிமூன்று வயதிலிருந்தே நடனம் ஆட ஆரம்பித்துவிட்டேன். மாடலிங்கா நடனமா என்றால் நடனம்தான் 'என்பேன்.

மஞ்சு: நீங்கள் மாடலிங்கின்போது உடுத்தும் பட்டுச்சேலையை உங்களுக்கே கொடுத்து விடுவார்களா?

மீனா: மாட்டார்கள். அது மறுபடி நெய்பவரின் கைக்கே போய்விடும். அவர் அதைக் குறைந்த விலைக்கு விற்றுவிடுவார். அதே டிசைனில் புடவை உங்களுக்குக் கிடைக்கலாம். ஆனால் உடுத்துக் கொண்ட அந்தக் குறிப்பிட்ட புடவை கடைகளுக்கு வராது. ஆண்கள் விஷயத்தில் அப்படி இல்லை. அவர்கள் அளவுக்குத் தைக்கிறதனால் அவர்களுக்கே கொடுத்துவிடுகிறார்கள்... உங்களைப் பற்றிச் சொல்லுங்கள்: இந்தியாவின் முதல் பெண் கார்ட்டூனிஸ்ட் என்ற நினைப்பு உங்களுக்கு எப்படி இருக்கிறது? கிராஃபிக் ஆர்ட் வேறு படிக்கிறீர்களாம். இப்போது நாடகம் வேறு எழுத ஆரம்பித்திருக்கிறீர்கள்! அப்படியானால் உங்கள் மூளைப் பகுதியில் வெவ்வேறு வகையான சானல்கள் வைத்திருப்பீர்கள் போலிருக்கிறது.

மஞ்சு: எல்லா வேலைகளும் ஒன்றாக வந்து சேரும் சில சமயம். எல்லாவற்றையும் ஒழுங்காக இது முடிந்ததும் அது என்று வரிசைப் படுத்திக் கொள்ள மாட்டேன். எதைச் செய்ய வேண்டும் என்று அந்தச் சமயத்தில் தோன்றுகிறதோ அதை எடுத்து முடிப்பேன். அது மாதிரிதான் நாடகம் எழுதியதும். நான் வசிக்கும் பம்பாயில் ஓரிடத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியை என் தோழி சொன்னாள். அதிர்ச்சியாய் இருந்தது. அதை நாடகமாக எழுதிப் பலர் அறியச் செய்ய வேண்டும் என்று தோன்றியது. ஒரு கட்டுரையை விட அதிகப் பாதிப்பை உண்டாக்கும் என்பதால் நாடகமாக எழுதினேன். நாடகம் எழுத வேண்டும் என்று ஏற்கெனவே ஒரு தீர்மானம் எடுத்து, அதற்காக எழுதவில்லை. ஆனால், எழுதி, இப்போது அதற்கு வரவேற்பும் கிடைத்திருப்பதால் என்னை அழுத்தமாகப் பாதிக்கும் வேறு சில விஷயங்களைப் பற்றியும் எழுத நினைத்திருக்கிறேன்.

மீனா: சரி... கிராஃபிக் ஆர்ட் என்றால் என்ன?

(ஓவியத்தை உலோகத்தில் அச்சு மாதிரித் தயார் செய்து கொண்டு அதன் மூலம் ஒரே மாதிரியான இருபது முப்பது பிரதிகள் எடுக்கும் கிராஃபிக் ஆர்ட் முறை பற்றி மஞ்சுளா விளக்குகிறார்.)

மீனா: உங்கள் நாடகம் 'லைட்ஸ் அவுட்' பற்றிச் சொன்னீர்கள்!

மஞ்சு: என் நாடகத்தை, இங்கேயுள்ள தியேட்டர் ஆர்ட்ஸ் ஒர்க்ஷாப் புதுமாதிரியாக நடத்திக் காட்டினார்கள். ஒரு வீட்டிலிருந்து தினமும் ஒரு பெண் தாக்கப்பட்டு எழுப்பும் தீனக்குரல் ஓலமாய்க் கேட்கிறது. ஆனால் அக்கம்பக்கத்தில் நடுத்தரக்குடும்பங்களால் ஒன்றுமே செய்ய முடிவதில்லை. அவர்கள் படிப்பும், சமூகத்தில் அவர்கள் நிலையும், அவளது உதவிக்குச் செல்லவிடாமல் அவர்களைத் தடுக்கின்றன. எதுவும் செய்ய முடியாத அவல நிலையில் அதைப் பொறுத்துக் கொண்டு சும்மா இருப்பதே சுகம் என்று எல்லோரும் நினைக்கிறோம். எனக்கு நன்றாகத் தெரிகிறது — ஏதோ அக்கிரமம் தினசரி நடக்கிறது என்று. ஆனால் உதவிக்கு ஓட முடியாமல் நம்மைக் கட்டிப் போடுவது எது? தடுப்பது எது? நாம் பத்திரமாய் இருந்தால் போதும் என்ற பாதுகாப்பான நினைப்பா? வரதட்சணைக் கொடுமை ஆகட்டும், சீக்கியர்களுக்கு எதிரான வன்முறை ஆகட்டும், அன்றாட வாழ்க்கையின் அவலங்களை ஏற்றுக் கொண்டு நாம் வாழக் கற்றுக் கொண்டுவிட்டோம் என்று தோன்றுகிறது.

மீரா: நீங்கள் ஏன் நிறைய நாடகங்கள் இது போல் எழுதக் கூடாது?

மஞ்சு: எனக்குள் இரண்டு பேர் இருக்கிறார்கள். ஒரு நபர் ரொம்பக் கெட்டவர்; முரடு. ஆனால் அவர்தான் வேலை செய்ய வேண்டும்! இன்னொரு பேர்வழி நல்லவர், அமைதியானவர். இந்தக் கெட்டவர்தான் எழுதியாக வேண்டும். நல்லவர் இதுமாதிரி விஷயங்களைக் கேள்விப்பட்டுக் கெட்டவரிடம், 'உட்கார்ந்து எழுது... வேலையை முடி!' என்று தூண்டிவிட்டுக்கொண்டே இருக்க வேண்டும்!

மீரா: யார் கடைசியில் ஜெயிக்கிறார்கள்— நல்லவரா கெட்டவரா?

மஞ்சு: கடைசியில் ஜெயிப்பது என்னவோ நல்லவர்தான். இல்லையென்றால் இத்தனை படங்கள், காமிக் ஸ்ட்ரிப், புத்தக அட்டைப் படங்கள், போஸ்டர்கள் எல்லாம் வரைந்து கொண்டிருக்க முடியுமா?

பேட்டி அமைப்பு: **சாருகேசி**
வண்ணப்படம்: **யோகா**




கல்கி

ஏப்ரல் 14ல

தமிழ்ப் புத்தாண்டு தினத்தில்

இளைஞர் சிறப்பிதழாக மலர்கிறது



சுஜாதா

எழுதும்

முழுநீள நாவல்



புதிய தொடர்கதை

வாசந்தி

எழுதும்

மௌனப் புயல்

கவிஞர்

வைரமுத்து

வாரம் ஒரு கடிதம்



இளைஞர்களுக்கு

எழுதுகிறார்

மற்றும் இளைஞர்களைப் பற்றிய பல சுவையான தகவல்கள்,

இளைஞர்களுக்குப் பயன்தரும் புதுமை அம்சங்கள்:

அதிக பக்கங்கள் — அதே விலை

விளம்பர விஷமம்



Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032 (Phone: 431543)

Assistant Editor: P. S. Mani

Editor: K. Rajendran



மின்னி மிளிரும் மேனி...
என்னாளும் உங்கள்
பொன்னான கனவு...நிலைபெற
வரமளிப்பது ரெக்ஸோனா.

சரளம், கருவா, கிராம்பு,
ஜெபுஷா (தேவதாரம்) ஆகிய
நாலு வகை இயற்கைத்
தைலங்களின் நற்கலவை
யான ரெக்ஸோனா...சருமப்
பராமரிப்பிற்கு இயல்பான
வழியாகும்.

ரெக்ஸோனா உங்கள் மேனியை மென்மையோடு மெருகு மிளிர வைத்திருக்கிறது.

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

LINTAS RX 84 2012 TM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka

